# ஷண்முக விஜயம்

அல்லது

## கந்தபுராண ஸாரம்

(அநேகம் சித்திரப்படங்களுடன்)



இஃது

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம், ஷண்முகசுந்தரம்,
தஞ்சைநாயகர் தாழ்வு, அம்பலவாணன்
என்னும் நூல்களின் ஆசிரியர்,

ப. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ.,
அவர்கள் எழுதியது.

சென்னை, தொண்டமண்டலம் ஹைஸ்கூல்,
தலைமை உபாத்தியாயர்

ஸ்ரீமான் முனிசாமி ஐயரவர்கள்
சிறப்புரை கொண்டது.

அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை.

காபிரைட்] ஐ 12

PRINTED AT
THE S. V. PRESS, MOUNT ROAD.

Copyright by The Alliance Company, Mylapore. (25682)

# சிறப்புரை

'ஷண்முக விஜயம்' அல்லது 'கந்தபுராண' சாரம் என்னும் பெயரினையுடைய 'இப்புத்தகம், கலியுகவரதனாய் எழுந்தருளி, குன்றுகள் தோறும் விளங்கும் ஸ்ரீ ஆறுமுகக் கடவுளின் பெருமையினை விளக்குவதாகும் என்பது நாம் சொல்லாமலே அனைவருக்குந் தெரியும். இக்காலத்தில் அளவற்ற நூல்கள் பள்ளிச் சிறுவர்களுக்கென்று வெளிவந்துலவுகின்றன. அவற்றுள், கொள்ளத்தக்கன சிலவும் தள்ளத்தக்கன பலவுமாம். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளின் தன்மையை யறிந்து அவர்களுக்கு ஏற்றவாறு புத்தகம் எழுதுவோர் மிகச்சிலரே யாவர். பள்ளிச்சிறுவர்களின் தன்மையை யுணராதவர்கள் எவ்வாறு அச்சிறுவர்களின் தன்மைக்கு ஏற்றவாறு புத்தகங்களை எழுத வியலும்?

இக்காலத்தில் நன்மைக்கறிகுறியாக சில நல்ல புத்தகங்கள் பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்குப் பயன் படுமாறு வெளிவருகின்றன. அவற்றுட்சில ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்புகளாகவும், பல நமது புராணேதிகாசங்களைத் தழுவினவைகளாகவும், வேறு பல நம் நூலாசிரியர்களின் கற்பனா சக்தியினின்றும் வெளிவந்தவைகளாகவுங் காணப்படுகின்றன.

விஷயத்திலும், பாக்களின் கம்பீரத்திலும் சிறப்புற்று விளங்கும் கந்தபுராண வரலாற்றைச் சுருக்கிக் கூறும் இந்நூல், பள்ளிக்கூடத்துச் சிறுவர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்பது என் நம்பிக்கை. இந்நூல் இனிய எளிய நடையில் எழுதப்பட்டிருப்பது விரும்பத் தக்கதாம். நாட்டுக்கும், நம்மக்களுக்கும் நன்மை பயக்கத் தக்க இதுபோன்ற வேறு நூல்களைச் சலியாது எழுதி உலகுக்கு அளிக்குமாறு கடவுள் இந்நூலாசிரியருக்குக் குன்றா ஊக்கத்தைத் தந்தருள்வாராக!

MADRAS, 31st July, 1925.

M. MUNISWAMI AIYER,
*Head Master,*
*Thondamandalam High School.*

# முகவுரை

ஷண்முகநாதன் பாதமலர்களே துணை

பூலோகத்தில் அஞ்ஞானம் அதிகரித்து, மனிதர்கள் தருமநெறி தவறிப் பாவங்களையே செய்து மேன்மேலும் பிறவிகளுக்கே வழி தேடிக்கொண்டிருந்த காலத்தில், சிவபெருமானது அருளினால் வியாசமாமுனிவர் அவதரித்து, சிதறிக்கிடந்த பழைய புராணங்களைத் திரட்டிப் பதினெண் புராணங்களாக வகுத்தெழுதியது அக்காலத்திலிருந்தோர்க்கும் பிற்காலத்தில் வருவோர்க்கும் தருமநெறியைப் போதிப்பதற்கே யாகும். அவைகளுக்குள் மிகவும் விரிந்ததான கந்தபுராணமானது அரிய போதகங்களை பலவற்றை எளிதாய் எடுத்துக்கூறுகிறது.

நமது புராணங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் உண்மையாகவே நடந்தவைகளல்லவென்றும், அப் புராணங்கள் நீதிகளைப் போதிப்பதற்காக எழுதப்பட்ட கட்டுக் கதைகளென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். உலகங்களை யெல்லாம் ஆட்டுவிக்கும் இறைவன் உலகத்தோருக்கு நீதிநெறியைப் போதிக்கவேண்டு மென்ற கருணை நோக்கத்துடன் செய்யும் லீலைகளுக்கு ஓர் எல்லையை ஏற்படுத்துவதற்கு புல்லறிவுடைய மனிதர் ஏற்றவரன்று. அன்றியும், குணக் குன்றுகளாகிய முனிசிரேஷ்டர்கள் நடக்காத விஷயங்களை நடந்தவைகளெனப் பொய்யாக வுரைத்தாரென்று நினைப்பதே மகாபாவமாகும். ஆதலின், நமது பெரியோர் சொல்லை வேதவாக்காக நினைத்து, அப்புராணங்களில் கூறப்பட்டுள்ள லீலைகளை எல்லையில்

லாத அறிவுடையவராகிய சர்வேசுவரன் ஜீவராசிகளி னிடத்துத் தமக்குள்ள கருணை மிகுதியினால் நடித்துக் காட்டியவென்று நம்புவதே தெய்வமுண்டென்று நம்புவோரது கடனாகுமென்று அடியேனுக்குத் தோன்றுகிறது.

இக் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ளவைகளைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். [† விசேஷமான விஷயங்கள் சாய்வு அக்ஷரங்களில் அச்சிடப்பட் டிருக்கின்றன.]

தக்ஷன், தான் தவஞ் செய்வதற்குத் தகுந்த இடமொன்றை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொண்டதற்கு, பிரமதேவர் மானஸஸரஸி என்னும் பெயர் பெற்றதும, அசைவற்றதும், பரிசுத்தமானதுமான தடாகத்துக்குப் போய்த் தவம்புரியும்படி அவனுக்குக் கட்டளையிட்டார். அதாவது, தவஞ்செய்யப் புகுங்கால், மனமானது அன்பினால் உருகி நீர்மையடைந்ததாகவும், தூய்மையானதாகவும், சர்வேசுவரனது பாதமலர்களின் தியானத்தில் அமர்ந்து சலனமற்றதாகவும் இருக்கவேண்டும்; அப்படித் தவஞ்செய்தால்தான் தவமானது பலனை யளிக்கும். சூரபத்துமன் தவஞ்செய்யச் சென்றபொழுது சுக்கிராசாரியார் அவனுக்குச் செய்த உபதேசமும் அதையொத்ததாகவே யிருந்தது. "சிவபெருமானது பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிப் பிறகு இம்மந்திரத்தை ஜபித்து, ஐம்புலன்களையும் மனத்துடன் ஒன்றுபடுத்தி, பொய், கொலை, களவு, காமம் முதலியவைகள் உன்னை யணுகாதபடி தடுத்துக்கொண்டு தவமியற்றுவாயாக!" என்று சுக்கிராசாரியார் உபதேசித்தார்.

நிற்க. காசிபமுனிவர் சூரபதுமனுக்கு உரைத்தவாறு தவமானது மேலான பலனைத் தருமே யாயினும்,

தவத்தின் பலன் பின்புசெய்யும் அதருமங்களினால் அடி யோடழியுமென்பது, சிவபெருமான் தக்ஷனுக்கு வர மளித்தங்கால், "நீ நன்னெறியில் நின்று ஒழுகும் வரை யில் இச்செல்வங்கள் நிலைத்திருக்கும்" என்று கூறிய மொழிகளினாலும், அப்பெருமான், கருமங்களின் பல னைக் குறைக்கவாவது பெருக்கவாவது நிறுத்தவாவது சர் வேசுவரனுக்குமட்டும் சக்தியில்லையென்னும் தவறுதலை அபிப் பிராயங்கொண்டு சர்வேசுவரனை ஆராதிக்கும் கடமை யைச் செய்யாதொழிந்த தாருகவனத்து முனிவர்களுக் குப் புத்தி புகட்டியதனாலும் தெளிவாய் விளங்குகிறது. அன்றியும், நன்னெறியில் நின்று தவஞ்செய்து இறைவ னிடத்தில் அரியவரங்களைப் பெற்ற சூரபதுமன் சுக்கிரா சாரியாரது துற்புத்தியைக் கேட்டுத் தேவர்களும் முனிவர் களும் வேதத்திற் கூறப்பட்டுள்ள கருமங்களைச் செய்வ தைத் தடுத்து, உலகங்களிலுள்ள நல்லோரையெல்லாம் துன்புறுத்திய காரணத்தினால் சிவசக்தியான சுப்ரமண் யக் கடவுளால் சங்கரிக்கப்பட்டதனாலும் மேற்கூறிய உண்மை தெளிவாய் விளங்குகிறது.

தேவர்களும் முனிவர்களும் நல்லோராயிருந்தும அசுரர்கள் கையிற் சிக்கி அலைவுற்று வருந்தியதற்குக் காரணமென்னவெனில், சர்வேசுவரனிடமிருநது அரிய வரங்களைப் பெற்றிருந்த தக்ஷன், தாங்கள் அவன் கட் டளையிட்டவாறு சிவபெருமானை ஆராதிப்பதை நிறுத் தாவிடில், அவன் தங்களைத் தங்கள் பதவிகளினின்றும் தள்ளிவிடுவானென்று பயந்து, இறைவனை ஆராதிக்கும் கடமையைச் செய்வதைக் காட்டிலும் தங்கள் பதவிகளி லிருப்பதே மேலானதென்று மருட்சியுற்று, இறைவனை ஆராதிப்பதை நிறுத்தியதுதான்.

இப்புராணத்திற் கூறப்பட்டுள்ள லீலைகள் எல்லா

வற்றினுலும் எம்பெருமான் போதித்தருளிய போதகங் களை யெல்லாம் அடியேனது சிற்றறிவுக்கு எட்டியவரை யில் விளக்கிக் கூறுவதென்றாலும் முகவுரை பெரிதும் விரியும். ஆயினும், ஞானதேசிகனாய் அவதரித்தருளிய முருகப்பெருமானது எல்லையற்ற கருணையைப்பற்றி மட் டும் சிறிதளவு சொல்லாமல் முடிக்க மனம் வரவில்லை

ஞான சொரூபியான குமாரக்கடவுள், வேடர்கள் கையிற் சிக்கி ஞானமென்பது சிறிதளவும் வாய்க்கப் பெருத வள்ளிநாயகி தம்மிடத்திற் கொண்ட அளவற்ற காதலையே பெருங்குணமாகக் கொண்டு, அந்நாயகியின் மீது தாம் அளவற்ற காதல்கொண்டு, அந்நாயகியைத் தடுத்தாட்கொண்டு, உலகத்தில் யாவரேனும் குணமென் பது சிறிது மில்லாதாரேனும், ஞானவாசனையைச் சற்றும் முகர்ந்தறியாதாரேனும், தம்மை யடையவேண்டு மென்ற ஆசைமட்டும் அவர்கள் மனத்தில் நிரம்பித் ததும்பிக் கொண்டிருக்குமாகில், தாம் தக்க வேளையில்வந்து அவர் களைத் தடுத்தாட்கொண்டு துக்கசாகரத்தினின்றும் கரை யேற்றிப் பேரின்ப வீட்டை அவர்களுக்கு உதவியருளு வது நிச்சயமென உலகத்தோருக்கு உணர்த்தியருளினர். இவ்வுண்மை வள்ளிநாயகியின் திருமணத்தைக் கூறும் பாகத்தில் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வுண்மையே உலகத்தோரை உய்விக்கக்கூடியது. இதை யாவரும் உணர்ந்து அறிந்து, முருகப்பெருமானை அன்புடன் ஆராதித்து எம்பெருமான் கருணையாகிய ஓடத்தில் ஏறிப் பவசாகரத்தைக் கடந்து, என்றும் அழி யாததும் ஒப்புயர்வற்றதுமான பேரின்ப வீடான எம் பெருமானது திருமென்மலர்ப் பாதங்களை யடையவேண்டு மென்று கருணை சொரூபியான ஷண்முகக் கடவுளது அருளைப் பிரார்த்திக்கிறேன்!

தேவாதி தேவரான வள்ளிநாயகரது

சென்னை, 1925ஹு ஜூலைமீ 27உ

அடியார்க்கடியன் ப. சா. சுப்ரமண்யன்.

# விஷய அட்டவணை

அத்தியாயம் பக்கம்


1 புராண வரலாறு .... .... 3

2. தக்ஷன் வரம்பெறுதல் .... .... 4

3 தக்ஷன் வாழ்வும், சந்திர சாபமும் ... 7

4 சிவபெருமான் கருணையும், தக்ஷன் கோபமும் 9

5. சங்கரிக்குச் சிவபெருமான் புத்தி புகட்டியது 13

6. தாக்ஷாயணியின் தவமும், திருமணமும் .... 17

7. நன்றி மறந்த தக்ஷன் ஈசனை இகழ்கிறான் ... 24

8. பிரமதேவர் யாகமும், நந்தி யெம்பெருமான் சாபமும் .... 28

9. தக்ஷயாகமும், ததீசிமுனிவர் புத்தி கூறியதும் 33

10. தக்ஷன் யாகசாலைக்குத் தாக்ஷாயணி வருதல் 42

11. தக்ஷனது யாகத்தை வீரபத்திரர் அழித்தல் 45

12. சூரர்களின் பிறப்பும், தவமும் .... 51

13. முக்திநெறியும், மாயையின் உபதேசமும் .... 52

14. சூரபதுமன் தவமும், சிவபெருமான் அருளும் 55

15. அசுர குருவின் துர்ப்போதனை .... 59

16 சூரபதுமன் திக்குவிஜயம் .... .... 61

17. சூரபதுமன் கொடுங்கோன்மை .... 67

18. விந்தமலையை அகத்தியர் அடக்கியது .... 72

19. காவிரி நதியின் உற்பத்தி ... .... 76

20. அஜமுகிக்கு நேர்ந்த அவகேடு .... 81

21. தேவர்கள் சிறைப்படுகிறார்கள் ... 84

22. உமாதேவி பார்வதிதேவி யாகிறார் .... 88

23. தேவர்களின் சூழ்ச்சி .... .... 91

24. மன்மதன் சாம்பராகிறான் ... .... 97

25. சிவபெருமான் பார்வதி தேவியை மணந்துகொள்கிறார் .... 101

26. ஷண்முகக் கடவுள் அவதரிக்கிறார் .... 106

27. இலக்கத்தொன்பது வீரர்களின் அவதாரம் .... 113

28. குமாரசுவாமியின் பால லீலைகள் .... 115

29 குமாரசுவாமி பிரமனுக்குப் புத்தி புகட்டியது 119

30. ஷண்முகநாதன் மகிமை .... .... 121

31. முருகப்பெருமான் போருக்குச் செல்லுகிறார் 124

32. ஷண்முகநாதன் அசுரர்களை அழிக்கிறார் .... 130

33. தெய்வயானையம்மை திருமணம் .... 135

34. வள்ளிநாயகியின் திருமணம் .... 137


## அநுபந்தம் I


சூரபதுமன் முதலியோரது பூர்வ ஜன்ம வரலாறு .... 149


## அநுபந்தம் II


கந்தவிரதங்களின் மகிமை .... 153




தாக்ஷாயணி அவதாரம்

# ஷண்முக விஜயம்

அல்லது

# கந்தபுராண சாரம்

## முதல் அத்தியாயம்

### புராண வரலாறு

முன்னொரு காலத்தில் உலகத்தில் எல்லோரும் பாவங்களையே புரிந்துகொண்டு கடவுளை வணங்காமல் இருந்தார்கள். உலகத்தைக் காக்குங் கடமையுள்ள திருமால் அதுகண்டு சிவபெருமானிடத்திற் சென்று, உலகத்திலுள்ள மாந்தர்களுக்கு ஞானத்தைப் போதித்தருளும்படி கேட்டுக்கொண்டார். சிவபெருமான் திருமாலை நோக்கி, "நீ உனது கலைகளில் ஒன்றுடன் உலகத்தில் வியாச முனிவனாக அவதரித்து வாழக்கடவாய்! வேதங்கள் உனக்குப் படிக்காமலே தெரியக்கடவன! அவ்வேதங்களை நான்கு வகையாகப் பிரித்து, அவைகளை ஓதவேண்டிய முறையை மானிடருக்குப் போதித்து, அவர்களது மயக்கத்தை ஒழிக்கக் கடவாய்! பிறகு எல்லாச் சந்தேகங்களையும் தீர்க்கவல்ல பழைய புராணத்தை நீ சனற்குமார முனிவரிடத்திற் கேட்டுத் தெரிந்துகொண்டு பதினெண்

புராணங்களையும் மானிடருக்குப் போதிப்பாயாக!" என்று திருவாய்மலர்ந் தருளினார்.

வியாசமுனிவர் அவ்வாறே பழைய புராணத்தை சனற்குமார முனிவரிடத்தில் கேட்டுத் தெரிந்துகொண்டு சூதமுனிவருக்கு உபதேசித்தருளினார். அவைகள் சூத முனிவரால் அவரது சிஷ்யர்களுக்கு உபதேசிக்கப்பட்டுக் கர்ணபரம்பரையாகப் பரதகண்டத்திற் பரவின.

அப் பதினெண் புராணங்களில் சைவம், பவிஷ்யம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்னும் இப்பத்தும் சிவபுராணங்களாகும்; பிரமம், பதுமம் என்னும் இரண்டும் பிரம புராணங்களாகும் ; காருடம், நாரதம், விஷ்ணு, பாகவதம் என்னும் நான்கும் விஷ்ணு புராணங்களாகும் ; ஆக்கினேயம் அக்கினி புராணமாகும் ; பிரம கைவர்த்தம் என்பது சூரிய புராணமாகும.

சிவபெருமானுக்குரிய பத்துப் புராணங்களினுள், காந்த புராணமானது வெற்றியைத் தரும் வேலாயுதத்தைக் கையிலேந்திய குமாரக் கடவுளது சரித்திரத்தை எடுத்துக் கூறுகிறது.

## இரண்டாவது அத்தியாயம்

### தக்ஷன் வரம்பெறுதல்

பிரமதேவருடைய புத்திரர்களில் மூத்தவனும், புத்தியில் மிகச் சிறந்தவனுமான தக்ஷன் ஒரு நாள் தனது பிதாவை நோக்கி, "தந்தாய்! தேவர்களுக்குள் முதல்வராயும், மும்மூர்த்திகளில் உயர்ந்தோராயும், அழிவில்லாதவராயுமுள்ள கடவுள் இன்னாரென்பதை அடியேன் அறியும்படி சொல்லியருளவேண்டும்" என்று

கேட்டுக்கொண்டான். பிரமதேவர், "யுகமுடிவில் எல்லா வுயிர்களையும் பிரம விஷ்ணுக்களையும் ஏனைய தேவர்களை யும அவைகள் முன்பு தம்மிடமிருந்து தோன்றியவாறே தமக்குள் அடங்கச்செய்து, தாம் மட்டும் மாறுமல் நின்று, மீண்டும அவ்வுயிர்களுக்கேற்ற காயங்களையும கரணங் களையும் கொடுத்துச் சிருஷ்டித்துக் காத்துச் சங்கரிக்கும் சிவபெருமானே யாவர்க்கும் முதல்வராய் அழிவில்லாதவ ராய் நிற்கும் தேவாதிதேவர். அவருடைய திருவருளைப் பெறுமல் முத்தியடைந்தவர்களில்லை. அவருடைய திரு வருளைப்பெற்ருல், அடைதற்கரிய பொருள் ஒன்றுமில்லை. இது சத்தியம்! ஆதலால் அக்கடவுளையே சரணென் றடைவாயாக!" என்று தம் புதல்வனுகிய தக்ஷனுக்கு மெய்ப்பொருளை உபதேசஞ்செய்தார்.

அவ்வுபதேசத்தைக் கேட்ட தக்ஷன், முன் ஜன்மங் களிற் செய்த தீவினைகளின் பயனுல் தூண்டப்பட்டு, மேலான பதவியை யடைந்து சகல போகங்களையும் அனுப வித்துச் சுகிக்கவேண்டு மென்ற பேராசையான வலையிற் சிக்கி, தன் தந்தையை நோக்கி, "தந்தாய்! பரம்பொரு ளாகிய சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து அவரிடத் தில் சிறந்த வரங்களைப் பெற விரும்புகிறேன். ஆதலால் கிருபைகூர்ந்து, நான் மிகவும சிறந்த தவத்தைப் புரிவதற் குத் தகுதியான ஓர் இடத்தை ஏற்படுத்தவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான் அப்போது பிரமதேவர் மானஸவாவி என்னும் பெயர் பெற்றதும, அசைவற்ற தும் பரிசுத்தமானதுமான தடாகத்துக்குப் போய்த் தவம் புரியுமபடி அவனுக்குக் கட்டளையிட்டார்.

தக்ஷன் மானஸவாவி என்னும தடாகத்துக்குச் சென்று, அதன்கரையில் ஒரு புறத்தில் அமர்ந்து, ஸ்ரீ பஞ் சாக்ஷரத்தை முறைப்படி ஜபித்து, சிவபெருமானை மனத்

திறல் ஆராதித்து, காற்று, மழை, வெயில், பனி முதலி யவைகளை இலக்ஷியஞ் செய்யாமல் ஆயிரவருஷ காலம் அருந்தவம் புரிந்தான். அவன் செய்த சிறந்த தவத்தைக் கண்டு சந்தோஷித்த சிவபெருமான் உமாதேவியாரோடு வெள்ளிமலைபோன்ற இடபத்தின்மீது எழுந்தருளி அவன் முன்னே தோன்றினார். அதை யுணர்ந்த தக்ஷன் உடனே எழுந்து சென்று அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவரைத் தோத்திரஞ் செய்து நின்றான். அப் போது சிவபெருமான், "தக்ஷனே! உனக்கு வேண் டியவைகளைச் சீக்கிரம் உரைப்பாயாக!" என்று கட் டளையிட்டருளினார். தன் தீவினைப் பயனால் தூண்டப் பட்ட தக்ஷன் மோக்ஷம் வேண்டுமென்று சொல்லாமல், "அகன்ற பூலோகத்திலும், தேவர்கள் வசிக்கும் தேவ லோகத்திலும், பிரமதேவர் வசிக்கும் சத்தியலோகத்திலும், திருமால் வசிக்கும் வைகுண்டத்திலும் எனது அதிகாரம் செல்லவேண்டும். தேவர்களும் அசுரர்களும் நான் கட் டளையிடும் வண்ணம் நடந்து கொள்ளவேண்டும். தேவ ரீரை வந்து வணங்கும் ஜீவர்களெல்லோரும் என்னை வந்து வணங்கவேண்டும். உமாதேவியார் எனக்குப் புத திரியாக அவதரிக்க வேண்டும். தேவரீர் பிரமன் வேடத் துடன் வந்து அத்தேவியாரை மணம்புரிந்துகொள்ள வேண்டும்" என்று கூறினான். அதுகேட்ட சிவபெரு மான், "தக்ஷனே! நல்லது! அவ்வரங்களை உனக்கு அளித்தோம்! நீ நன்னெறியில் நின்று ஒழுகும் வரை யில் இச்செல்வங்கள் நிலைத்திருக்கும்" என்று உரைத்து மறைந்தருளினார்.

# மூன்றாவது அத்தியாயம்

## தக்ஷன் வாழ்வும், சந்திர சாபமும்

சிவபெருமானிடத்திலிருந்து சிறந்த வரங்களைப் பெற்ற தக்ஷன் தன் தந்தையாகிய பிரமதேவரை யழைத்து, "நிகரில்லாத ஒரு நகரத்தை இவ்விடத்தில் சீக்கிரம் உண்டாக்குவீராக!" என்று கட்டளையிட்டான். பிரமதேவர், தக்ஷன் உலக வாழ்க்கையில் ஆசை அதிகரிக்கும் மனத்துடன் தந்தையாகிய தம்மையும் அவ்வாறு அதிகாரத்துடன் கட்டளையிட்டதைக் கேட்டு மனம் வருந்தி, பிறகு விதியை விலக்கவல்லவர் யாருமில்லையென்று தம்மைத்தாமே தேற்றிக்கொண்டு, தக்ஷமாபுரி என்னும் ஒப்பற்ற நகரம் ஒன்றைச் சிருஷ்டித்தருளினார். இந்திரன் முதலிய தேவர்கள் அந்நகரத்துக்குச் சென்று தக்ஷனை வணங்கினார்கள். தேவர்களுக்கு அஞ்சி யொளிந்து வசித்துவந்த அசுராதிபனும், இந்திரனுக்கும் தலைவனாய் ஒருவன் ஏற்பட்டதைக் குறித்து மகிழ்ந்து, தனது பயத்தை விட்டது, தன் சுற்றத்தவருடன் தக்ஷமாபுரிக்குச் சென்று தக்ஷன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

தக்ஷன் அவ்வாறு எல்லோருக்கும் தலைவனாய் அரசு புரிந்துவருங் காலத்தில், பிரமதேவருடைய பொற்பாதங்களிலிருந்து பிறந்தவளான வேதவல்லி யென்னும் கற்பிற் சிறந்த பெண்ணை மணந்து, ஆயிரம் பிள்ளைகளைப் பெற்றான். அந்த ஆயிரம் புதல்வர்களையும் நோக்கி தக்ஷன், "நீங்கள் மானஸவாவிக்குச் சென்று சிவபெருமானை நோக்கித் தவமியற்றி, பல உயிர்களையும் படைக்கும் சக்தியைப் பெற்றுவாருங்கள்!" என்று கட்டளையிட்டான். அப்பிள்ளைகள் அவ்வாறே சென்று தவமியற்றிக்கொண் டிருக்கையில், நாரதமாமுனிவர் அவர்க

ளிடம் சென்று, "படைப்புத்தொழில் குற்றமுடையது அதனால் இப்போது பெருமை உண்டானாலும், பிறகு பிறப்பும் இறப்பும் துன்பங்களும் ஏற்படும். ஆகையினால் மோக்ஷ மடையவேண்டு மென்னும் நோக்கத்துடன் தவம் புரியுங்கள்!" என்று சொல்லி, அவ்விதம் தவம்புரியும் மார்க்கத்தையும் அவர்களுக்குப் போதித்தார். அவர்கள் அவ்வாறே தவம்புரிந்து மோக்ஷத்தை யடைந்தார்கள்.

நெடுங்காலம் கழிந்தும் தனது புதல்வர்கள் திரும்பி வராததைக் கண்ட தக்ஷன் ஞான திருஷ்டியினால் பார்த்து, நடந்த சங்கதியை அறிந்து வருத்தமுற்று, பின்னும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்று, முன்பு அப்புதல்வர் களுக்குக் கட்டளையிட்டபடியே அவர்களுக்கும் கட்டளை யிட்டுத் தவம்புரிய அனுப்பினான். அப்புதல்வர்களுக்கும் நாரத மாமுனிவர் நற்புத்தி புகட்ட, அவர்களும் தவம் புரிந்து முத்தியடைந்தார்கள். அவர்களும் திரும்பி வரா ததைக் கண்ட தக்ஷன் ஞானதிருஷ்டியினால் நோக்கி, அவர்களும் முத்தி யடைந்ததை யறிந்து, புத்திர சோக மடைந்து, மனம் புண்ணாகி, நாரத மாமுனிவரிடத் தில் பெருங்கோபங் கொண்டு, "பரமசிவனிடத்தில் வரம் பெறவேண்டுமென்று தவஞ்செய்த என் புதல்வர்களை எனக்கு இல்லாமற் செய்த நாரதன இனி நாள்தோறும் சதாகாலமும ஆலோசனை செய்துகொண்டே உலகமெங் கும் உழன்று திரியக்கடவான்!" என்று சாபமிட்டு, பிறகு இனிப் புதல்வர்கள் வேண்டாமென்று இருபத்து மூன்று பெண்களைப் பெற்று, அவர்களைத் தருமர், பிருகு, மரீசி முதலியோருக்கு விவாகஞ் செய்துகொடுத்தான் தக்ஷன் வம்சம் தழைத்தோங்கிற்று.

அப்படியிருக்கும் நாளில் தக்ஷன் அசுவினி முத லிய இருபத்தேழு நக்ஷத்திரங்களான பெண்களைப்பெற்று,

அவர்களைச் சந்திரனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து, சந்திரனை நோக்கி, "இவர்களெல்லோரிடத்திலும் நீ சமமான அன்பு பாராட்டவேண்டும். சிலரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டிச் சிலரை இகழ்ந்து பக்ஷபாதமுடையவனாக நடந்துகொள்ளாதே!" என்று கூறி, அப்புதல்விகளைச் சந்திரனுடன் அனுப்பினான்.

ஆனால் அப்பெண்களில் கார்த்திகை, ரோகிணி எனனுமிருவரும் மற்றவர்களைவிட மிகுந்த அழகுவாய்ந்தவர்களா யிருந்தபடியால், சந்திரன் தன்னை யறியாமலே அவர்களிடம் அதிக அன்பு பாராட்டி மற்றவர்களைக் கவனிக்காமலிருந்தான். அவனால் அலக்ஷியஞ் செய்யப்பட்ட பெண்கள் தங்கள் தந்தையாகிய தக்ஷன்பாற் சென்று தங்கள் குறைகளைக்கூறி முறையிட்டுக்கொண்டனர். அதுகேட்ட தக்ஷன் மனம் வெதுமபி, உக்கிரமான கோபங்கொண்டு, "அச்சந்திரனது கலைகளெல்லாம் தேய்ந்து அற்றுப் போகக்கடவன!" எனக் கொடிய சாபம் இட்டான்.

## நான்காவது அத்தியாயம்

### சிவபெருமான் கருணையும், தக்ஷன் கோபமும்

அச்சாபத்தின் பயனாக சந்திரனது கலைகள் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து, பதினைந்து கலைகள் அழிந்து போயின ஒரு கலையே மிஞ்சியுள்ள சந்திரன் உடல் மெலிந்து மிகுந்த அச்சத்துடன் தேவர்க்கரசனை இந்திரனிடம் சென்று தன் நிலைமையைத் தெரிவித்து, அவ்வொரு கலையாவது அழியாமல் நிற்கும்படி செய்துகொள்ள ஓர் உபாயம் உரைக்கும்படி வேண்டினான். தேவேந்திரன் தனக்கு ஓர் உபாயமும் தோன்றவில்லையென்றும், அவன் பிரமதேவரிடம் சென்றால் அவர்

எப்படியும் ஒரு வழி கண்டுபிடிப்பாரென்றும் சொல்ல, சந்திரன் சத்தியலோகத்துக்குச் சென்று, பிரமதேவனை வணங்கி, தனக்கு நேர்ந்ததைக் கூறி, "ஐயனே! தங்கள் புதல்வனுடைய கோபத்தை மாற்றி, இச்சாபத்தை நீக்கி யருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

அப்போது பிரமதேவர் சந்திரனை நோக்கி, "அப்பா! தக்ஷன் முன்னிருந்த தக்ஷனல்ல. அவன் தன் மனம் போன போக்கிலேயே போகிறானேயன்றி, யார் மொழியை யும் ஏற்றுக்கொள்வதில்லை. சிவபெருமானது அருளி ஞல் எல்லையில்லாச் செல்வத்தைப்பெற்ற தக்ஷன் கணப் பொழுதும் அப்பெருமானை நினைப்பதில்லை அது மாத்திர மன்று. தானே பரமபொருளென்று அவன் மருட்சியுற் றிருக்கிறான். ஆதலின் நான் அவனிடத்துச் செல்லமாட் டேன். இப்போது உன் குறையைத் தீர்த்துக்கொள்ள உனக்கு ஒரேவழிதான் இருக்கிறது. அது யாதெனில், முக்கண் எந்தையின் திருமுன் சென்று பிரார்த்தித்தலே யாகும். தமது மெய்யன்பனாகிய சிறுவன் மார்க்கண்டே யன்மீது பாசத்தை எறியத் துணிந்த இயமனை உதைத்து அச்சிறுவனைக் காப்பாற்றியவரும், அமுதத்துக்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அதிலிருந்து உதித்து உலகங்களை யெல்லாம் அழிக்கத் தொடங்கிய விஷத்தை யெடுத்துத் தமது திருவாயிற் போட்டுக்கொண் டும், உமாதேவியாரின் திருக்கரத்திலிருந்து உதித்து உல கத்தையழிக்க ஆரவாரித்தெழுந்த கங்கையைத் தமது சடை யில் அடக்கியும் உலகங்களைக் காப்பாற்றியவருமான சிவ பெருமானது கருணையின் பெருமையை நீ அறியாத வனன்றே. ஆதலின், நீ விரைவில் திருக்கைலாயத்துக்குச் சென்று அவர் திருமலர்ப்பாதங்களில் அடைக்கலம் புகு வாயாக!" என்று கூறியருளினர்.

உடனே சந்திரன் திருக்கைலாயத்துக்குச் சென்று சிவபெருமானைப் போற்றி, தன் துன்பங்களை யெடுத்துக் கூறி, "எம்பெருமானே! மிஞ்சியுள்ள ஒரு கலை அழியாது நிற்கவும், மற்றக் கலைகளனைத்தும் திரும்பவும் உண்டாகவும் அருள்புரிய வேண்டும். தேவரீரையன்றி வேறு தஞ்சம் எனக்கில்லை" என்று சொல்லிப் பிரார்த்தித்தான். கருணைக் கடலாகிய சிவபெருமான், "அமுதத்தையொத்த குளிர்ந்த கிரணங்களை வீசும் சந்திரனே! அஞ்சேல்!" என்று கூறி அவனுக்கு அபயமளித்து, அவனிடம் மிஞ்சியிருந்த ஒரு கலையைத் தமது திருக்கரத்தினலெடுத்துத் தமது சடாமுடியில் தரித்துக்கொண்டு, சந்திரனை நோக்கி, "நீ இனிக் கவலைப்படவேண்டாம். நினது இந்தக் கலை எமது சடையில் நிலைபெற்றிருக்கும். அதனால் நின் மற்றக் கலைகளெல்லாம் நாளுக்கொன்றாய் மீண்டும் வளர்ந்து பதினைந்து தினங்களில் நிரம்பி, பின்னர் அவ்வண்ணமே குறைந்து வரும். இக்கலைமட்டும் என்றும் அழியாமலிருக்கும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். சந்திரன் அவரது மலர்ப்பாதங்களை வணங்கி விடைபெற்றுச் சென்று தன்னுலகத்தை யடைந்து முன்போல் ஒளிவீசத் தொடங்கினன்.

அதுகண்ட தக்ஷன் கடுஞ்சினங்கொண்டு, சந்திரனுக்குத் தான் இட்ட சாபத்தைச் சிவபெருமான் நீக்கியதை ஞானதிருஷ்டியினல் அறிந்து, "நான் என் மருமகனுக்கு இட்ட சாபத்தை என் தந்தை பிரமதேவராவது, அவர் தந்தை திருமாலாவது நீக்கவுமில்லை, நீக்கும்படி என்னைக் கேட்டுக்கொள்ளவுமில்லை. அப்படியிருக்க, தாயுந் தந்தையுமில்லாத சிவனே அச்சாபத்தை நீக்கவல்லவன்? இப்பெருஞ் செல்வத்தைத் தக்ஷனுக்கு அளித்தது நாமேயன்றே என்றெண்ணி, என் கட்டளையை யிகழ்ந்

தானோ சிவன்? தானே பரம்பொருள் என்று அகங்காரங் கொண்டானோ சிவன்?" என்று சொல்லிக் கர்ச்சித்தான்.

அப்போது புலகன் என்னும் முனிவர் தக்ஷனை நோக்கி, "ஒப்பற்ற கண்ணுதற் கடவுளை இகழாதே இகழ்வாயேல், நின்னை யாவரும் இகழ்வர், நின் செல்வமும் குன்றும்" என்று நற்புத்தி யுரைத்தார். தக்ஷனோ, "நான் செய்த பெருந்தவத்தினால் என்னிடத்தில் நிலை பெற்றிருக்கும் இச்செல்வம் ஒருக்காலும் நீங்காது. திருமால் முதலியோரும் நான் இடும் கட்டளைகளை மறுப்பதில்லை. அப்படியிருக்க என்னை இகழ்வாருமுண்டோ உலகில்?" என்று கூறி நகைத்தான்.

அப்போது புலக முனிவர், "தக்ஷனே! நீ கூறும் வண்ணமே உன்னை எவரும் இகழமாட்டாரேயாயினும், நின் பெருஞ்செல்வம் குறைவுபடாதேயாயினும், யாவையுமே உனக்குக் கொடுத்தருளிய இறைவனைப் பழித்தல் தகுதியாகுமோ? சிவபெருமானை இகழ்ந்தவர்கள் உய்ய மாட்டார்களென வேதங்களெல்லாம் முறையிடுகின்றன. ஆதலால், நீ சிவபெருமானைச் சிறிதும் இகழாமல், மெய்யன்புடன் அவரது பாதமலர்களை வணங்குவாயாக! தமது சரணங்களைத் தஞ்சமென அடைவோர்களது துன்பத்தை யொழிப்பது அவரது இயற்கையாதலின், சிவபெருமான் சந்திரனுக்கு நீ இட்ட சாபத்தை நீக்கினார். அப்படி நீக்கியபொழுதும், நீ உரைத்த சாபமொழி பொய்க்காமலிருக்குமாறு, அச்சந்திரன் பூரணமாய்ப் பதினாறு கலைகளையும் அடைந்தபின் அக்கலைகள் நாளுக்கு நாள் குறைந்து வரவேண்டுமென்று கட்டளையிட்டார். அன்றியும், அச்சந்திரன் நினது மக்களை மணந்துகொண்ட மருமகனன்றோ? அச் சிவபெருமானும் நினது மருமகனை

ஆகவேண்டியவர்தாமே? ஆகையினால் கோபத்தைவிடு" என்று புத்திகூறினார்.

தக்ஷனும் சாந்தமடைந்து, எல்லோரும் புகழப் பன்னெடுங்காலம் அரசுபுரிந்துவந்தான்.

## ஐந்தாவது அத்தியாயம்

## சங்கரிக்குச் சிவபெருமான் புத்திபுகட்டியது

தம்மிடத்து மெய்யன்பு பூண்ட அடியார்கள் தமது நிர்மல சொரூபத்தைக் கண்டு பேரின்ப வாரிதியில் மூழ்குமாறு சிவபெருமான் திருக்கைலாய மலையில் வீற்றிருக்கையில், உலக மாதாவான சங்கரி அவரது பாதமலர்களை வணங்கி, "மகாப்பிரபு! தங்களுடைய இணையற்ற உண்மை நிலைமையை அடியேனுக்குத் தெரிவித்தருள வேண்டும்" என்று வேண்டினாள். எம்பெருமான் கருணை கூர்ந்து, ஆதியில் தாம உருவம், குணம், செயல் இவை யொன்றுமில்லாமல் நிர்மலராய் எங்கும் நிறைந்து நின்றதையும், பிறகு ஜீவகோடிகளின் பந்தங்களை ஒழிக்கவேண்டுமென நினைத்து இயற்கைச் சக்திகளாகிய பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும பஞ்சபூதங்களினால் பஞ்ச லிங்கங்கள் உண்டாக்கி அவைகளில் தாம் பிரசன்னராய் நின்றதையும், பிறகு உருவமற்ற தாம ஓர் உருவெடுத்துக் கொண்டு அவ்வுருவத்தின் வாயிலாகத் தம்மைத் தியானித்துப் பச்சிலை, நாண்மலர் இவைகளைக்கொண்டு அருச்சித்து ஆன்மகோடிகள் யாவரும் மோக்ஷத்தை யடையும்படி செய்யவேண்டுமென வுன்னி ஐந்து திருமுகங்களையும், பத்துத் திருக்கரங்களையும், ஒரு திருமேனியையும், இரண்டு திருவடிகளையுமுடைய அநுக்கிரக மூர்த்தியான சதாசிவ மூர்த்தியின் உருவத்தைப் பூண்டதையும், பிறகு

தம்முடன் கலந்துள்ள பிரணவத்தை வெளியாக்கி, அதன் பின் அருள்புரியும் பல மூர்த்திகளாக ஆகிய விதத்தையும் தேவிக்கு விரிவாய் எடுத்துரைத் தருளினார்.

சங்கரி தேவி அதுகேட்டு, "சுவாமி! தங்களுக்கு உருவமே கிடையாதென முதலில் கூறி, பிறகு தாம் பல வுருவங்களைப் பூண்டதாகவும் கூறினீர்களே; அது எங்ஙனம?" என்று கேட்டாள். அதற்குச் சிவபெருமான், "நாம் அரூபியே. மேற்கூறிய உருவங்களனைத்தும் நமது அருளின் உருவங்களாகும" என்று பதிலுரைத்தருள, மகாதேவி மனமகிழ்ச்சியுடன், "சுவாமி! அவ்வடிவங்களெல்லாம் தேவரீரது அருளின் வடிவங்களாதலாலும், தேவரீரது திருவருள் அடியேனே யென்று உரைப்பதாலும், அவ்வுருவங்கள் அடியேனுடைய உருவங்களாகும்" என்று தன்னைத்தானே புகழ்ந்து பேசினாள்.

அப்போது சிவபெருமான் சங்கரியை நோக்கி, "அஞ்ஞானத்தினால் சூழப்பட்டுள்ள ஜீவன்கள் தோறும் நாம இருந்து அவைகள் ஞானம் பெறுமாறு அவைகளை நடத்துகிறோம். அவ்வாறு செய்வதை நாம் நிறுத்துவோமேயாகில், அவைகள் மாயையிற் சிக்கிய ஜடங்களாக ஆகி அழியும. உன்னிடத்திலும யாம் உறைந்திராவிடில், நினது உயிரும் உணர்ச்சியுறாது. இவ்வுண்மையை உனக்கு விளக்கிக்காட்டுகிறோம், கவனித்துப் பார்ப்பாயாக!" என்றுரைத்து, சங்கரி தேவியைத் தவிர பிரமன் முதலாகவுள்ள சகல உயிர்களையும் நடத்தும் செய்கையை ஒழித்துநின் றருளினார்.

உடனே சகல புவனங்களிலுமுள்ள சகல ஜீவராசிகளும் உணர்ச்சியற்று, சூத்திரக்காரனால் ஆட்டுவிக்கப் படாத பதுமைகளைப்போலாகி மாய்ந்து கிடந்தன. முச்சுடர்களும் அவ்வாறே அழிந்தபடியால், எங்கும் அந்தகா

ரமட நிரம்பிற்று. அதுகண்ட சங்கரி அஞ்சி மனந்தளர்ந்து சிவபெருமானது திருவடிகளை வணங்கி, "சுவாமி! ஜீவ கோடிகளெல்லாம் பிரளயகாலத்திற்போல அந்தகாரத்தில் மூழ்கியிருக்கின்றன. இத்துன்பம் அவர்களுக்கு என் பிழையினால் ஏற்பட்டதாகும். தேவரீர் எல்லா வுயிர்களும் முன்போலவே உயிர்பெற்றெழுந்து பெருகுமாறு அருள் புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

அப்போது சிவபெருமான் கருணைகூர்ந்து முதன் முதலில ஏகாதச ருத்திரர்கள் உணர்ச்சி பெறும்படி செய்தார். அவர்கள் எழுந்து சிவபெருமானைச் சிந்தித்து, உயிர்கள் உணர்ச்சியற்றிருந்ததன் காரணமின்னதென்றுணர்ந்து, இறந்துகிடந்த உயிர்களையெல்லாம் எழுப்புவதற்கு வழி சர்வேசுவரனாகிய சிவபெருமானது கழலிணைகளை அருச்சிப்பதேயெனத் துணிந்து, வானுலகத்தில் பகவானது பழைய ஜோதி காணப்படாமையால், பூமியில் திருவிடைமருதூருக்குச் சென்றனர் அங்கு அவர்கள் சிவபெருமானது உருவமொன்றை நிருமித்துப் பிரதிஷ்டை செய்து, பஞ்சாக்ஷரத்தை ஜபித்து, விபூதியும் உருத்திராக்ஷ மாலையும் தரித்துக்கொண்டு, வில்வம், தாமரையிதழ், நந்தியாவட்டை முதலிய நறுமணமிக்க பசிலைகளினாலும் மலர்களினாலும் அருச்சித்து, தூபதீப நைவேத்தியங்கள் செய்து, எம்பெருமானது அருளைத் துதித்து நின்றனர்.

அப்போது எம்பெருமான் அந்த ஏகாதச ருத்திரர்களுக்கு எதிரே தோன்றி, அவர்களுடைய பிரார்த்தனைக் கிணங்கி, புவனங்கள் பண்டுபோல் ஆகவேண்டுமென நினைத்தருளினார். உடனே பிரமன் முதலிய தேவர்களும், முனிவர்களும், மற்றுமுள்ள ஜீவகோடிகளனைத்தும் உயிர் பெற்றெழுந்தன. புவனங்களைச் சூழ்ந்திருந்த அந்த-

காரமும் அகன்றது. பிறகு சிவபெருமான் ஏகாதச ருத்திரர்களை நோக்கி, "உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்!" என உரைத்தருள, ஈசனிடத்து அளவில்லாத மெய்யன்பு பூண்ட அவர்கள், "எம்பெருமானே! எவரேனும் எம்மைப்போல் அன்புடன் தேவரீரது பாதாரவிந்தங்களை இரவில் பூஜிப்பார்களேயாகில், அவர்களுக்கு மகா சிவராத்திரியன்று தேவரீருடைய பாதாரவிந்தங்களைப் பூஜித்த பலனைக் கொடுத்தருள வேண்டும்" என வேண்டிக்கொண்டார்கள் சிவபெருமான், "அப்படியேயாகுக!" என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

பிறகு பிரமன் முதலிய தேவர்கள் எல்லோரும் கூடித் திருக்கைலாய மலைக்குச் சென்று, சிவபெருமானை வணங்கி, "வள்ளலே! நாங்கள் உணர்ச்சியற்றுச் சடமாகிப் பன்னெடுங்காலம எமதிறைவனுன உமது பாதாரவிந்தங்களை நினைந்து வணங்காமல் சும்மா கிடந்த காரணத்தினல் ஏற்பட்ட பாவத்தை நீக்கிக்கொள்ள ஒரு வழி உரைத்தருளவேண்டும" என வேண்டினார்கள். அப்போது சிவபெருமான், "தேவர்களே! அப்பாவமெல்லாம் உமாதேவியைச் சாரும். இன்றுமுதல் உங்கள் கடன்களை வழுவாது செய்வீராக!" என மொழிந்தருளினர். தேவர்கள் கவலை நீங்கி, எம்பெருமானது பாதமலர்களை வணங்கித் திருக்கைலாயத்தைவிட்டுச் சென்றார்கள்.

சிவபெருமான் மொழிந்தருளியதைக் கேட்ட உமாதேவி பயந்து, இறைவன் பாதமலர்களை வணங்கி, "எம்பெருமானே! உலகத்திலுள்ள ஜீவர்களேயடைந்த பாவம் அடியேனைச் சாரவேண்டிய காரணமென்ன?" என்று கேட்டாள். அதற்குச் சிவபெருமான், "உமையே! நீ உன்னையே புகழ்ந்து பேசினய். நாம் உனக்குப் புத்தி புகட்டுவதற்காகவே உயிர்களின் உணர்ச்சியை நீக்கினேம்.

ஆகையால் அவைகளையடைந்த பாவம் உன்னையே வந்தடையும். அன்றியும், அப்பெரும் பாவத்தினைச் சுமப்பது அவைகளையெல்லாம் ஈன்றருளிய உனக்குச் சாத்தியமே யல்லாமல் அச் சிறுவுயிர்களுக்குச் சாத்தியமன்று!" என்று கூறியருளினர்.

அதுகேட்ட உமாதேவி, "சுவாமி! நான் அறியாமையினால் செய்த பிழையின் கொடுமையைக் குறைத்து, என்னிடத்தில் மிஞ்சியிருக்கும் குற்றத்தினை நீக்கிக்கொள்ள ஒரு வழியைத் தெரிவித்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். அப்போது கருணை சமுத்திரமான சிவபெருமான், "சங்கரி! நீ பூமிக்குச் சென்று, அங்கு காளிந்தி நதியில் பிரணவாக்ஷரத்தைப்போன்ற உருவமுடைய வலம்புரிச் சங்கத்தின் வடிவத்துடன் அமர்ந்து, உலகம் நன்மை யடையவேண்டு மென்னும் நோக்கத்துடன் தவம் புரிவாயாக! தக்ஷன் அங்கு வந்து உன்னைக் கண்டு கையிலெடுப்பான். உடனே நீ குழந்தைவடிவ மடைவாய்! உனக்கு ஐந்து வயது நிரம்பியவுடனே, நீ மனத்தில் ஆசையோடு எம்மை நோக்கி அருந்தவம் புரிவாயாக! யாமே வந்து நின்னை மணந்து, நின்னை இவ்வுயர்ந்த மலைக்கு மீண்டும் அழைத்துவருவோம்" என்று தைரியங் கூறியருளினர்.

## ஆறுவது அத்தியாயம்

### தாக்ஷாயணியின் தவமும், திருமணமும்

இறைவன் கட்டளையிட்டவாறே உமாதேவி காளிந்தி நதிக்குச் சென்று ஒரு வெண்சங்கமாகி ஒரு தாமரை மலரின்மீது அமர்ந்து நெடுங்காலம் தவம் புரிந்திருந்தாள். அவ்வாறிருக்கும் நாளில், 'உலகிலுள்ளோர் மாசி மாதத்தில் மகத்தினன்று நீராடுவதற்காகக் காளிந்தி நதிக்குச்

சென்றார்கள். தக்ஷனும் தேவர்கள் சூழப் புறப்பட்டுக் காளிந்தி நதியை யடைந்தான். அங்கு அவன் ஒரு தாமரை மலரின்மீது தெய்வத்தன்மை பொருந்தியதாய் விளங்கிய வெண்சங்கத்தைக் கண்டு அதைத தன்கையி லெடுத்தான். உடனே அது அழகு மிகுந்த ஒரு குழந்தையாக மாறிற்று. அதுகண்ட தக்ஷன் இறைவனது வரத்தினால் கௌரியே தனக்குப் புதல்வியானதை ஞானதிருஷ்டியினால் அறிந்து பெருமகிழ்ச்சி யுற்று, அந்நதியின் கரையில் இந்திராணி முதலிய தேவமாதர்கள் சூழ வேதகானம கேட்டுக்கொண் டிருந்த தனது தேவியான வேதவல்லியினிடம் அக்குழந் தையைக் கொடுத்தான் அவள் அக்குழந்தையை எடுத் துக்கொண்டு தனது அரண்மனைக்குச் சென்று மிகுந்த அன்புடன் வளர்த்துவந்தாள்.

உமாதேவி அவ்வாறு தக்ஷன் குமாரத்தியாகி, தாக்ஷாயணி என்னும திருநாமம் பெற்றுச் சிறப்பாய் வளர்ந்து, ஐந்து வயது நிரம்பி ஆறுவது வயது அடைந்த வுடன், அவள் தன் தாய்தந்தையர்களை நோக்கி, "நான் செஞ்சடாமுடியை யுடைய சிவபெருமானுக்கே உரியவ ளாகும பெரும பாக்கியத்தைப் பெற்றவள். அவரை மணம புரிவதற்காக நான் தவமபுரிய வேண்டும். அதற்கு ஒரு கன்னிமாடம் கட்டித் தாருங்கள்!" என்று கூறினாள். அதுகேட்ட தக்ஷனும வேதவல்லியும் மகிழ்ச்சியடைந்து அழகிய கன்னிமாடமொன்றைக் கட்டுவித்து, பல பெண் களுடன் தாக்ஷாயணியை அத் தவமாளிகைக்கு அனுப்பி னார்கள்.

தாக்ஷாயணி அக் கன்னிமாடத்தை யடைந்து, சிவ பெருமானது திருநாமத்தை மனத்தினுள் நிறுத்தி, நல்ல நியமத்துடன் தினந்தோறும் நோன்பு இயற்றிவந்தாள். அப்போது சிவபெருமான் தாக்ஷாயணியை ஆட்கொள்

ளக் கருதி, கைலாயகிரியைவிட்டு, முப்புரிநூல் பூண்டு, கோவணமும் தருப்பையும கட்டிய தண்டத்தைத் திருக் கரத்திலேந்தி, பிரமணப் பிரமசாரி வடிவங்கொண்டு, தாக்ஷாயணியின் கன்னிமாடத்தை யடைந்தார். அங்கு காவலாயிருந்த பெண்கள் தாக்ஷாயணியினிடம் அதைத் தெரிவித்து, அவளது கட்டளைப்படி அவரை உள்ளே யழைத்துச் சென்றார்கள்.

தாக்ஷாயணி எதிர்கொண்டுவந்து, அப் பிரமசாரி தனது நாயகனுடைய மெய்யன்பரென வெண்ணி, அவரது மலரடிகளை வணங்கிப் பூஜித்தாள்.

அப்போது சிவபெருமான், "நாம் ஒன்றைப் பெறும் விருப்பத்துடன் இங்கு வந்தோம். நீ அதை விரைந்து அளிப்பாயாகில், அதனைச் செல்லுவோம்" என்று கூறி யருளினார். அதற்குத் தாக்ஷாயணி, "நான் தரத்தக்க பொருள் ஒன்றைச் சொல்லுவீரேயாகில், அது உமக்கு இன்றே கிடைக்கும். தாங்கள் கருதுவது என்னவென்று தெரிவிப்பீராக!" என்றாள். அப்போது சிவபெருமான், "நாம் உன்னை மணந்துகொள்ளுவதற்காகவே வந்தோம். எமது வேண்டுகோளைத் தடுத்து எதிர்மொழி கூறாமலி ருப்பாயாக!" என மொழிந்தருளினார் தாக்ஷாயணி தனது செவிகளைக் கரங்களினால் மூடிக்கொண்டு, "சிவ பெருமான் வந்து என்னை மணம்புரியவேண்டுமென்று நான் நெடுங்காலமாகத் தவமியற்றிக்கொண் டிருக்க, நீர் இவ்வாறு பேசத்துணிந்தது எப்படி?" என்று கடுங் கோபத்துடன் கேட்டாள்.

அப்போது சிவபெருமான் தம தேவியின் காதலின் அளவை யறியும நோக்கத்துடன், "பெண்ணே! இன்ன தன்மையனென்று எவராலும் அரியவொணாத ஆதிமுதல் வன் வந்து நின்னை மணமபுரிவதென்பது சாத்தியமன்று.

ஆகையினால் சிறந்த தவங்களைச் செய்து வீணாக வருந்தாதே!" என்று கூறியருளினர். தாக்ஷாயணி எம்பெருமானது திருவருளில் தனக்குள்ள நம்பிக்கையை வெளியிட்டு, "சிவபெருமானே விரும்பிவந்து என்னை மணந்து கொள்ளவேண்டுமென்று சிறந்த தவங்களைச் செய்வேன். அவர் அவ்வண்ணம் வராமலிருப்பாரேயாகில், எனது ஆவியைத் துறப்பேன். இது சத்தியம்! அது நிற்க, குற்றமான மொழிகளைப் பேசும் நீர், ஏன் இங்கு நிற்கிறீர்? இங்கு நில்லாதேயும் போம்!" என்று மொழிந்தாள்.

சிவபெருமான் திருவுளமகிழ்ந்து, "மாதே! நினது அன்பும் மனவுறுதியும் வியக்கத்தக்கவை!" என்று கூறி, மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படா வண்ணம் தாக்ஷாயணிக்கு மட்டும் தமது அழகுவாய்ந்த திருமேனியைக் காட்டியருளினர். தாக்ஷாயணி அத்திருவுருவத்தைக் கண்டு பேரானந்தமடைந்து, அவரது திருவடிகளைப் பணிந்து, "சுவாமி! அடியேன் பேதையேனாதலால், எம் பெருமான் வேற்றுருவந் தாங்கி வந்ததை அறிந்துகொள்ளும் சக்தியில்லாமல் அயலாரென மயங்கி எம்பெருமானை நிந்தித்தேன். அடியேன் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். எம்பெருமான், "உமையே! அதைக்குறித்து வருந்தாதே!" என்று கூறியருள, தாக்ஷாயணி தன் பாங்கிமார்களைக் கண்ணெடுத்துப் பாராமலும், வேறொன்றையும் பற்றி எண்ணாமலும், முக்கணெந்தையின் பழைய புகழ்களை எடுத்துக்கூறி அவரைத் துதித்து, கண்களினின்றும் ஆனந்த வருவிபாய நின்றாள்.

அதுகண்ட பாங்கியர்களிற் சிலர் விரைவில் தக்ஷனிடம் சென்று நடந்தவற்றையெல்லாம் தெரிவித்தனர். அது கேட்ட தக்ஷன் தனது ஞானதிருஷ்டியினால்

நோக்கி, கன்னிமாடத்துக்குவந்த வேதியன் ஆதியந்த மற்ற இறைவனேயென் றுணர்ந்து, மகிழ்ச்சி பெற் றெழுந்து துள்ளி, "நான் பெற்ற மகளை எனதிறை வனுக்கு விவாகஞ் செய்துகொடுப்பேன்!" என்று கூறி, அத்தினமே சகல நலங்களுமே கூடிய சுபமுகூர்த்த தின மாக விருக்கக் கண்டு அடங்காத மகிழ்ச்சி கொண்டு, "இன்றே என் மகளை இறைவனுக்கு மணம் புரிவிப் பேன்" என்று ஆர்வத்துடன் நிச்சயித்து, தேவர்களனை வரையும் அழைத்துவருமாறு தூதர்களை யனுப்பி விட்டு, தன் நகரத்தையும் தன் மாளிகையையும் அழகு பெற அலங்கரிப்பித்தான். பிறகு அவன் தாக்ஷாயணி யின் கன்னிமாடத்துக்குச் சென்று, எம்பெருமானை வணங்கி, "அண்ணலே! தேவரீர் அடியேனுடைய நகரத் துக்கு எழுந்தருளி, தேவரீரை மணம்புரிய விரும்பி நெடுநாள் தவமியற்றிய என் செல்வப் புதல்வியை மணம புரிந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

சிவபெருமான் நல்லது என்று எழுந்து, ஒலிக்கும் சிலம்புகளை யணிந்த திருவடிகள் சிவக்க நடந்து, தாக்ஷா யணியுடன் தக்ஷன் அரண்மனைக்குச் சென்று, பெண்கள் அஷ்ட மங்கலங்களுடன் எதிர்கொண்டழைக்க அவன் மாளிகையினுட் புகுந்து, ஓர் அழகிய பொற் பீடத்தின் மேல் சிறப்பாய் எழுந்தருளியிருந்தார். வேதவல்லி தனது அருமைப் புதல்வியை அழைத்துப்போய் மங்கள ஸ்நானஞ் செய்வித்து, மலர்மாலைகளைச் சூட்டி, அழகிய ஆடையுடுத்திப் பலவித ஆபரணங்களினால் அலங் கரித்து எம்பெருமான் பக்கத்தில் உட்காரச் செய்தாள். தூதுவர்கள் மூலமாகத் திருமணச் சங்கதி யறிந்து அங்கு விரைந்து வந்துசேர்ந்த தேவர்கள் முதலியோர் எமது தாயும் தந்தையும் திருமணக் கோலம் பூண்டு அங்கு

அமர்ந்திருந்த அற்புதக் காட்சியைக் கண்டு பேரானந்த வாரிதியில் மூழ்கினார்கள்.

முகூர்த்த காலத்தில் தக்ஷன் வேதவசனங்களை யுரைத்து, தன் மனைவி முறைப்படி பொற்கெண்டிகையி னால் வார்த்த சுத்த நீரினால் எம்பெருமான் திருவடிகளை மெல்லென விளக்கிப் பிறகு எண்ணிறந்த சிறந்த பரிசு களை அவருக்கு அளித்து அவரைப் பூஜித்து, தாக்ஷா யணியின் திருக்கரங்களை எம்பெருமானது திருக்கரங் களுக்குள் வைத்து, "எந்தாய்! நினக்கு இவளை நான் அளித்தேன்!" என்று கூறிப் பொற்கெண்டிகையிலிருந்து தாரையாக விழும் பரிசுத்தமான நீருடன் கன்னிகா தானஞ் செய்தான். தேவரனைவரும அக்காட்சியைக் கண்டு பேரானந்த மடைந்து பூரணசந்திரனைக் கண்ட சமுத்திரத்தைப்போல் ஆரவாரித்து வாழ்த்தி நின்றனர். பிரமதேவர் சாஸ்திரங்களிற் கூறிய விதிப்படி சடங்குக ளனைத்தையும் பூர்த்தியாய் நடத்தினர் திருமால் முதலிய தேவர்கள் வேதவசனங்களை யோதி நின்றார்கள்.

அச்சமயத்தில், உருவமுடையவராயும், உருவமற் றவராயும், *ஜீவர்களின் உயிராயும, உணர்வாயுமிருந்து, அவைகளுக்கு நன்மையே புரிந்துவருபவராயுமுள்ள சிவ பெருமான், தன் தவத்தின் பெருமையினாலேயே தனக் குச் செல்வம் கிடைத்ததாகவும், அதைத் தான் அநுபவிப் பதைக் குறைக்கும் சக்தி சிவபெருமானுக்கு மில்லையென் றும் மயங்கித் தவறான அபிப்பிராயம் கொண்டிருந்த தக்ஷனுக்கு ஞானத்தை யூட்டவேண்டுமென்ற கருணை நோக்கத்துடன் திடீரென்று எவர் கண்ணுக்கும் புலப் படாமல் மறைந்தருளினர்.

அதுகண்டு தாக்ஷாயணி கலங்கித் தியங்கினாள்; ருகி விம்மினாள்; பெருமூச்செறிந்தாள்; அழுதாள்;

உணர்ச்சி மங்கி அயர்ந்தாள்; வருந்தி வாடினாள். அப்போது வேதவல்லி தன் புதல்வியைத் தன் மார்போடணைத்துக்கொண்டு, "எனதாருயிரே! மனந்தளராதே! நின் கணவனைப் பெறும் வழி தவமொன்றே யாதலால், அதையே இன்னும் புரிவாயாக!" என்று தைரியங்கூறினாள்.

அப்போது அங்கு கூடியிருந்த தேவர்கள், "இறைவன் எங்கு சென்றார்? மாயமாகவன்றோ மறைந்து போனார்! தாம் மணந்துகொண்ட தேவியை விட்டுச்சென்றதன் காரணமென்ன? இனிமேல் நடக்கப்போவதென்ன?" என்று பற்பல விதமாகப் பேசிக்கொண்டு புத்திமயங்கிக் கவலையுற்றிருந்தார்கள். தக்ஷன் மகா கோபங்கொண்டு, கண்களினின்றும் தீப்பொறி பறக்க, "மிக்க செல்வமாக நான் நடத்தப் புகுந்த கலியாணமும் மிகவும் அழகு! தான் கொடுத்த வரத்தைப் பூர்த்தி செய்வதற்காக வந்த சிவனுக்கு இச்சபையிற் கூடியுள்ள தேவர்கள் யாவரும் காண என் மகளை ஈந்தேன். மணஞ் செய்துகொடுத்த பின்னர், யாவரும் வெட்குமாறு அவன் மறைந்தான். ஆனால் அது ஆச்சரியத்தை விளைவிக்கத் தக்கதன்று; ஏனெனில், தாய், தந்தை, சுற்றத்தவர் யாருமில்லாதவனாய், பலர் கூடும் வெட்டவெளியையே தனது வீடாகக்கருதி அங்கு நிர்த்தனஞ் செய்கின்ற பித்தன், பிராமண வடிவங்கொண்டாலும் பித்தன்தானே! ஆராய்ந்து பார்த்தால், அவன் குணம் தீயதேயென்று இன்றுதான் எனக்கு விளங்குகிறது" என்று கூறித் தேவர்களுக்கு விடைகொடுத்தனுப்பினான்.

## ஏழாவது அத்தியாயம்

### நன்றி மறந்த தக்ஷன் ஈசனை இகழ்கிறன்

தக்ஷன் கோபக்கடலிற் படிந்திருக்கையில், அவன் மகளான தாக்ஷாயணி அச்சிவபெருமானை அடையும் தகைமையைத் தான் பெறுமாறு, முன்பு தான் நோன்பு இயற்றிவந்த கன்னிமாடத்தில் அரிய தவம் இயற்றிவந்தாள். அதுகண்ட சிவபெருமான் கருணை கூர்ந்து, ஒரு தவசியின் வேடம் பூண்டு தாக்ஷாயணியின் முன்னே தோன்ற, தாக்ஷாயணி அவர் சிவபெருமானுக்கு உகந்தவ ரென்று எண்ணி, அவரை வணங்கித் தோத்திரஞ்செய்தாள். அப்போது சிவபெருமான் வெள்ளிய விடையின் மீது தமது உண்மையான சொரூபத்தைக் காட்டியருளினர். அச்சேவையைக் கண்டு துன்பமொழித்து உள்ளம் பூரித்த தாக்ஷாயணி எம்பெருமானை யணுகிப் பன்முறை பணிந்து, "சின்மயனே! முன்னம் என்னைக் கைவிட்டுச் சென்றீரே! இன்று என்னிடத்திலுள்ள குற்றங்களை அகற்றுவதற்கு வநதருளினீரோ?" என்று கூறினள். அம்மொழிகளைக் கேட்ட நஞ்சுண்ட கண்டர் தமது தேவியினிடத்தில் அகங்காரம் என்பது சிறிதுமில்லாததைக் கண்டு உளமகிழ்ந்து, தமது தேவியைத் தூக்கி இடபத்தின்மீது தமது இடப்பாகத்தில் அமர்த்திக்கொண்டு திருக்கைலாயத்துக்குச் சென்றருளினர்.

அதுகண்ட சேடியர்கள் பயந்து நடுங்கித் தக்ஷன் பாற் சென்று, "மகாப்ரபு! செஞ்சடா முடியையுடைய அண்ணல் ஒரு தவசி வேடம் பூண்டு வந்து தமது இடபத்தின் மீது தங்கள் புதல்வியைத் தூக்கி வைத்துக் கொண்டு செல்கிறர்" என்றுரைத்தனர். அது கேட்ட

தக்ஷன் உக்கிரமான கோபங்கொண்டு சாம்பசிவனுக்கு யாதொரு தீங்கும் இழைப்பதற்குத் தனக்கு வல்லமையில்லாமையை நினைத்துப் பெருமூச்செறிந்து சுமமா வீற்றிருந்தான். அப்போது சிவபெருமான் அவனுக்குக் கொடுத்தருளிய வரத்துக்கேற்ப தேவர்க ளெல்லோரும் அங்கு வந்து அவனைப் பணிந்து நிற்க, தக்ஷன் அவர்களை நோக்கி, "தேவர்காள்! நீலகண்டன் செயலை என்னென்று உரைப்பேன்! முன்பு மணச் சடங்குகள் நிறைவேறு வதற்குமுன் திடீரென மறைந்தான். இப்போது தவசி வேடம் பூண்டு என் மகளிடம் சென்று அவளைக் கைப் பற்றிச் செல்கிறான். இப்படிப்பட்ட அக்கிரமச் செய்கையைச் செய்பவர் பிரபஞ்சத்தில் இல்லை! அவன் சகல உலகங்களுக்கும் காரணனை சங்கரனைல் என்ன? அவன்மட்டும அக்கிரமம செய்வது தகுதியாகுமோ? இதுவரையில் பிச்சை வாங்கித் திரிபவன் என்று மட்டும் அவனை யாவரும் இகழ்நதுவநதனர். இனி, சமயத்தில் ஒளிநதுகொள்பவன் என்றும, பெண்ணைக் கவர்ந்து செல்பவன் என்றுங்கூட உலகத்தவா அவனை இகழ்வார்கள்" என்று பிதற்றி, செய்நநன்றி மறநது, சகல செல்வங்களையும தனக்குக் கருணையினைல அளித்த சிவபெருமானை யிகழ்நது, அன்றுதொட்டு இறைவனை அன்புடன் துதியாமல இகழத் தொடங்கினன்

அதை யறிந்த பிரமன் முதலிய தேவர்கள் கூடி, "சிவபெருமானைத் துதியாமல் இகழும் தக்ஷன் சீக்கிரத்தில் அழிந்துபோவது நிச்சயம். அச் சிவத்துரோகியின் ஏவலை நாம் செய்து வருகிறோமாதலால், நமக்கும் அழியுங்காலம நெருங்கிக்கொண் டிருக்கிறது. அச் சிவத்துரோகியின் ஏவலைச் செய்யாதொழிவோம் என்றலோ, அவன் தனக்குச் சிவபெருமான் முன்பு அளித்த

வரத்தின் பலத்திஞல் நம்மை நமது பதவிகளினின்றும் தள்ளிவிடுவான். இருதலைக் கொள்ளியி னிடைப்பட்ட எறும்பைப்போலத் தத்தளிக்கும் நாம் தப்பிப் பிழைப்ப தற்கு வழியொன்றுதான் இருக்கிறது. அதென்னவெனில், திருக்கைலாயத்துக்குச் சென்று சிவபெருமானைத் தரிசிக் கும்படி தக்ஷனுக்கு நற்புத்தி புகட்டுவதுதான்'' என்று ஆலோசித்துத் தீர்மானித்து, தக்ஷன்பாற் சென்று, “வள் ளலே! ‘குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை’ என்ற உலக நீதியை மறக்கக்கூடாது. தாங்கள் திருக்கைலாயத்துக்குச் சென்று தங்கள் தவப் புதல்வியாகிய தாக்ஷாயணியையும் செஞ்சடாதரரையும் தரிசித்து எங்கள் குறையைத் தீர்த் தருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள்.

அதுகேட்ட தக்ஷன் சற்று ஆராய்ந்து பார்த்து, அவர்கள் கூறியது உண்மையெனத் தேர்ந்து, தேவர்களை ஆங்கே யிருத்தி, மெய்க்காவலாளர்களுடன் புறப்பட்டுத் திருக்கைலாயத்துக்குச் சென்று, சிவபெருமான் அமர்ந் துள்ள பொற்கோயிலை யணுகி, திருநந்திப் பெருமானது இருப்பிடமான கோபுரவாயிலை யடைய, அங்கே காவலாக நின்ற பூதர்கள் அவனை உள்ளே செல்லவொட்டாமல் தடுத்தார்கள். தக்ஷன் தன்னைத் தடுத்ததற்குக் காரண மென்னவென்று அப்பூதர்களை வினவ, அவர்கள் மகா கோபத்துடன் அவனை நோக்கி, “அறிவிலியே! முன்னை னில் விடமுண்ட கண்டரான எம்பெருமானை நீ இகழ்ந் தனையே! நீ இப்போது இங்கு ஏன் வந்தாய்? எம்பெரு மான் கருணையினுல் நினக்களித்த செல்வங்கள் அனைத்தை யும்பெற்று அநுபவித்துக்கொண்டே, அப்பெருமான் செய லனைத்தையும் மறந்தனையே! அது தகுதியோ? ஆயின் நீ என் செய்வாய்? மாயையின் வசமானுய். எம்பெருமானை அன்புடன் வணங்கிப் போற்றுதவருடன் பழகுவதும்

பேசுவதும் பாவச் செயல்களாகும். ஆயினும் ஒரு வார்த்தை சொல்லுகிறோம், கேள்! இறைவன் திருமுன்னர் சென்று, அவரது பாதமலர்களை அன்புடன் வணங்க உனக்கு இஷ்டமுண்டானால் இங்கே நில்; இல்லாவிடில், நீ புவியிலுள்ள உன் நகரத்துக்குப் போய்விடு" என்று கூறினார்கள்.

எண்ணிறந்த பூதர்கள் காக்கும் அச் செம்பொன் வாயிலைக் கடந்து உள்ளே செல்லத் தனக்குச் சக்தியில்லாமையை நினைத்து நாணமுற்று வருந்தி அவ்விடம் விட்டுப் புறப்படுகையில், தக்ஷன் பூதர்களை நோக்கி, "உங்கள் இறைவனை சிவனை நான் ஒருபோதும் வணங்கமாட்டேன். அச்சிவன் எனது மருமகன். நாராயணனும் பிரமனும் எனக்கு ஊழியஞ் செய்பவர்கள். ஞால முழுவதும் வணங்கித் துதிக்கும் இறைவன் நான்தான்! நீங்கள் என்னைத் தடுத்தது என் மருமகனும் மகளும் இட்ட கட்டளைப் படியேயன்றிச் சுயமாகவல்ல. உங்கள்மீது யாதொரு குற்றமு மில்லை. ஆராய்ந்துபாராமல் இவ்வண்ணம் கட்டளையிட்ட உங்கள் தேவனை எவரும் போற்றாமலும், வந்து பணியாமலும், புகழ்ந்து துதியாமலும், இகழும் வண்ணம் ஏற்பாடு செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு அவ்விடம் விட்டகன்று திரும்பித் தன் நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

தக்ஷன் தன் சபாமண்டபத்தை யடைந்ததும், அங்கு கூடியிருந்த தேவர்களை நோக்கி, "என் மகள் ஈசன்பால் கொண்ட ஆர்வத்தினால் அவனுடன் சேர்ந்துகொண்டாள். அவர்களிருவரும் என்னை அவமதிக்க வேண்டுமென்று எண்ணி, தங்கள் காவலாளரைக்கொண்டு என்னை உள்ளே செல்லவொட்டாது தடுத்தார்கள். ஆனால், அவர்களுடைய குணம் தெரிந்தும் அவர்களிடம் சென்ற என்னையே

நொந்துகொள்ளவேண்டுமே யல்லாது, அவர்கள்மீது குற்றங் கூறச் சிறிதும் இடமில்லை. தேவர்காள்! என்னை மதியாத ஈசனையும் உமையையும் நீவிர் இன்றுமுதல் இறைஞ்சி வணங்காதேயுங்கள்! என் ஆணைமீறி நீவிர் அவ் வண்ணம் செய்வீரேயாகில், நுமக்குரிய பதவிகளினின்றும் நும்மை யகற்றிவிடுவேன்!" என்று கோபத்துடன் கூறினன். அதுகேட்ட தேவர்கள் தங்கள் பதவிகளின் மீதுள்ள ஆசையினாலும், அவைகளை யிழக்கும்படி நேரிடுமோவென்ற பயத்தினாலும், அக்கட்டளையின்படி நடக்கத் தாங்கள் சித்தமாயிருந்ததாகத் தெரிவித்துவிட்டு, அவ் விடம்விட் டகன்று தங்கள் தங்கள் நகரங்களை யடைந்தார்கள்.

## எட்டாவது அத்தியாயம்

### பிரமதேவர் யாகமும், நந்திபெம்பெருமான் சாபமும்

அவ்வாறு தக்ஷன் விதித்த ஆணைக்கு அஞ்சிப் பன்னெடுங்காலம் எவரும் சர்வேசுவரரான சிவபெருமானை வணங்கித் துதியாமலிருந்தபின்னர், ஒருநாள் பிரமதேவா தாம் ஒரு சிறந்த வேள்வியைச் செய்யவேண்டுமென்றும், தக்ஷன் ஆக்ஞையினால் தாம் உயிரை யிழக்கும்படி நேரிடுவதாயிருந்தாலும் அவ்வேள்வியில் முதல் அவிர்ப் பாகத்தைச் சிவபெருமானுக்கே அளிக்க வேண்டுமென்றும் நிச்சயித்து, மகாவிஷ்ணு முதலியோரை அழைத்து வரத் தமது புதல்வர்களை யனுப்பிவிட்டுத் தாமே திருக் கைலாய மலைக்குச் சென்று, சிவபெருமானது அடிகளை வணங்கி, "எம்பெருமானே! அடியேன் ஒரு வேள்வியைச் செய்ய எண்ணியிருக்கிறேன். தேவரீர் அங்கு விஜயஞ்செய்து நான் செய்யப்புகும் வேள்வி இனிது

முடிவுபெறும்படி அருளவேண்டும்" என வேண்டிக் கொண்டார். அதுகேட்டு இறைவன் புன்னகைசெய்து, "நமது உருவமேயான நந்தி அவ்விடத்துக்கு வருவான்" எனக் கூறியருளினர்.

பிரமதேவர் இறைவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு திருக்கைலாயத்தை விட்டுப் புறப்பட்டுத் தக்ஷ மாபுரியை யடைந்து தக்ஷன்முன் சென்று, அவனை வேள்விக்கு வருமபடி அழைத்துவிட்டுத் தமது மனோவதி நகரத்தை யடைந்து யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார். மகாவிஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் தக்ஷன்முன் வந்து சேர, தக்ஷன் அவர்கள் தன்னைத் துதித்துப் புடைசூழ்ந்துவரப் புறப்பட்டுச்சென்று பிரமதேவரது யாகசாலையை யடைந்தான். பிரமதேவர் அவர்களை எதிர்கொண்டு சென்று உள்ளே யழைத்துப் போய்த் தக்க ஆசனங்களில் அமர்த்தினர். பிறகு நந்தியெம்பெருமான் நூறுகோடி பூதர்களுடன் அந்த யாகசாலையை யடைய, பிரமதேவர் எழுந்து நந்திதேவரைப் போற்றிவணங்கி, அவரை நவரத்தினங்களிழைத்த பொற்பீடத்தின்மீது அமர்த்தி, அவருடன் வந்த பூதர்களுக்கும் ஆசனங்கள் அளித்தார்.

அதுகண்ட தக்ஷன் நன்றிமறந்து வெகுண்டு நகைத்துப் பிரமதேவரை நோக்கி, "நீ யாகம் செய்யப்போவதை, ஒரு பேதையைத் தன்னுடலின் ஒரு பாகத்தில் வைத்துக்கொண்ட பித்தனுக்கு உரைத்தாய்! அப்பித்தன் அனுப்பிய நந்தியை என்கண் காண அன்புடன் வணங்கிச் சபைநடுவே ஆசனத்தில் அமர்த்தினாய்! இவை உனக்குத் தகுதியோ? நீ என் தந்தை யாதலால் பிழைத்தாய்! இல்லாவிடில், நின் தலையைத் துணித்திருப்பேன்! அறிவிலியே! நான் கூறு

வதைக் கவனித்துக் கேள்! சுடுகாட்டையே தன் உறைவிடமாகக் கொண்டு, எலும்பையும், நாகத்தையும், தலைமாலையையும் ஆபரணங்களாக அணிந்துகொண்டு, தேகமெல்லாம சாம்பலைப் பூசிக்கொண்டுள்ள பித்தனுக்கு இந்த யாகத்தில் முன்னுளிற்போல் அவிர்ப்பாகம் அளிக்காதே! இன்றுமுதல் யாகத்தில் அவனுக்கு அவிர்ப்பாகம் கிடையாது. அவனையன்றி மற்றத் தேவர்களுக்கெல்லாம் அவிர்ப்பாகம் கொடு! இன்றுமுதல் மகாவிஷ்ணுவையே முதல்வராகக் கொண்டு, முதல் அவிர்ப்பாகத்தை அவருக்குக் கொடு! நீண்ட சடையையும் நெற்றிக் கண்ணையுமுடைய கடவுளே பரமபொருள் என்று வேதத்திற் கூறியுள்ள வசனங்களை விலக்கிவிடு!" என்று கூறினன்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும், நந்தி யெம்பெருமான் தமது இரு செவிகளையும் கரங்களால் பொத்திக் கொண்டு வருந்தி, பிறகு அந நிந்தை மொழிகளின் கொடுமையைச் சகிக்கமாட்டாதவராய்த் திடீரெனச் சினங் கொண்டார். அதுகண்டு தேவர்களும், அக்கினியும் நடுங் கினார்கள்; அண்டங்களனைத்தும் நடுங்கின. நந்திகேசுவரப் பெருமான், கண்களினின்றும் தீப்பொறி சிந்த, தக்ஷனை வெகுண்டு நோக்கி, "உமைபங்கனை நீ இகழ்ந்தாய்! ஆதி முதல்வன் உன்னை யழிக்கும்படி எனக்குக் கட்டளையிடவில்லையாதலால், உன் வாயைக் கிழிக்காமல் விட்டேன். இனி ஒரு நிந்தைமொழி கூறுவாயாயினும், உன் தலையைத் துணித்துவிடுவேன்! நான் கூறுவதைக் கேள்! சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் கொடுக்காமல் வேள்வி செய்வோர் தலை அறுந்து விழக்கடவது! சிவபெருமானது தன்மையை மதியாத தக்ஷனே! நின்னிடம் பொருந்தியுள்ள செல்வங்களனைத்தும் விரைவில் அழிந்து ஒழியக்கடவன! விடையேறும் பெருமானை வணங்காததும்,



தாருகவனத்து முனிவர்களுக்குப் பரமசிவன் அருள்புரிதல்.

விரோதத்தினால் நிந்தனை செய்த வாய் பொருந்தியதுமான நின் அற்பத்தலை யழிந்து யாவரும் காணுமாறு வேறொரு சிறு தலை உனக்கு உண்டாகட்டும! இறைவனிடத்து அன்பில்லாத பேயே! உன்னைச் சார்ந்துள்ள தேவர்களும் ஒருகாலத்தில் ஆருயிர் இழந்து எண்ணிறந்த யுகங்கள் சூரன் என்னும் அசுரனால் துன்புறுத்தப்பட்டுத் துயரக்கடலில் மூழ்கி யிருப்பாராக!'' என்று உக்கிரமான சாபங்களை மொழிந்து, பூத கணங்களுடன் புறப்பட்டுத் திருக்கைலாய மலையை யடைந்து, திருவாயிலில் முறைப்படி காவலாக இருந்தார்.

பிரமதேவர் தாம் செய்யப்புகுந்த வேள்வியை நிறுத்திவிட்டார். தக்ஷன், சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் கொடுக்காமல் தடுத்ததை யுன்னிப் புன்மகிழ்ச்சி கொண்டும, நந்திகேசுவரர் கொடுத்த சாபங்களையுன்னி மனத்தில் அச்சங்கொண்டும், தேவர்கள் புடைசூழப் புறப்பட்டுத் தன் நகரத்துக்குச் சென்றான். தேவர்களும் தமக்குற்ற கொடிய சாபத்தினை நினைத்து வருந்தித் தத்தம் நகரங்களுக்குச் சென்றனர்.

---

## ஒன்பதாவது அத்தியாயம்

### தக்ஷயாகமும், ததீசி முனிவர் புத்திகூறியதும்

அந்நாள் முதலாக வெகுகாலம் தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும யாதொரு வேள்வியும் செய்யாமலிருந்தார்கள். அதுகண்ட தக்ஷன் அதற்குக் காரணமென்னவென்று தன் சபையிற் கூடியிருந்த தேவர்களைக் கேட்க, அவர்கள் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்கக்கூடாதென்று அவனிட்ட ஆணைக்கும், அப்பெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்காமல் வேள்வி செய்வோர்

தலை அறுந்துவிழக் கடவதென்று நந்திகேசுவரர் இட்ட சாபத்துக்கும் பயந்து, தாங்கள் யாகம் செய்வதையே ஒழித்துவிட்டதாகத் தெரிவித்தனர். அதுகேட்ட தக்ஷன் நகைத்து, "நானே ஒரு வேள்வியைச் செய்து அன்று நந்தி கூறிய சாபம் பயனற்றதென நிரூபிக்கிறேன். பிறகு நீங்கள் யாகம் செய்யலாமன்றோ?" என்றான். தேவர்கள் அதற்கிணங்கவே, தக்ஷன் தேவசிற்பியான விசுவகர்மாவை பெரிய யாகசாலை யொன்றை நிருமிக்கச்செய்து, பல முனிவர்களை யாகத்துக்கு வேண்டிய சமிதை, தருப்பை, ஆடுகள் முதலியவற்றைச் சேகரிக்கும்படி கட்டளையிட்டு, தேவர்கள், முனிவர்கள், அந்தணர்கள் முதலியோரை யாகத்துக்கு அழைத்துவரும்படி பலதூதர்களை யனுப்பினான்.

தேவர்களும், தேவமாதர்களும், பல முனிவர்களும், அந்தணர்களும் தக்ஷனுடைய யாகசாலையில் வந்து கூடினார்கள். அப்போது தக்ஷன் தான் அனுப்பிய தூதர்களை நோக்கி, "நீங்கள் அழைத்தவர்களில் இங்கு வராது தவறினவர்கள் உண்டோ?" என்று கேட்டான் அதற்குத் தூதர்கள், "ஐயனே! அகத்தியர், சநகாதியர், அத்திரி, வசிஷ்டர், பிருகு, ததீசி, துர்வாசர், பராசரர் இம்முனிவர்கள் மட்டும் இந்த யாகத்தினை யிகழ்ந்து இங்கு வரவில்லையென நினைக்கிறோம்" என்றார்கள். அதுகேட்டு தக்ஷன், "முனிவர்களுக்குள் இவர்கள்தாமோ சிவனுக்கு அன்பர்கள்?" என்று கூறிக் கடுங்கோபத்துடன் சிரித்தான்.

அத்தருணத்தில் ததீசி முனிவர் பல முனிவர்கள் தம்மைப் புடைசூழ்ந்துவர, அந்த யாக சாலைக்குள் நுழைந்தார். அதுகண்ட தக்ஷன் அம்முனிவர் தனக்கு அஞ்சி அங்கு வந்ததாகக் கருதி மகிழ்ச்சியுற்று உள்ளங்குளிர்ந்து, அவரைத் தமதருகிலுள்ள ஒரு பெரிய ஆசனத்தில் அமர்த

தினன். ததீசி முனிவர் அதில் அமர்ந்து, பிறகு தக்ஷனை நோக்கி, "இங்கு நீ செய்ய முயற்சிப்பதென்னவென்று விவரமாகச் சொல்!" என்று கூறினார். அப்போது தக்ஷன் சிவபெருமான தன்னைப் பன்முறை அவமதித்ததையெல்லாம் விஸ்தாரமாக எடுத்துரைத்து, பிறகு நந்தியின் சாபத்துக்கு அஞ்சி வேள்வி செய்யாதொழிந்த தேவர்களுக்குத் தைரியமுண்டாக்குவதற்காகத் தான் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்காமல் ஒரு யாகத்தைச் செய்து முடிக்கத் தீர்மானித்ததாகக் கூறினன்.

அதுகேட்ட ததீசி முனிவர் அவன் புத்தியீனத்தையுன்னி நகைக்க, தக்ஷன் கடுங்கோபங்கொண்டு, "நீ முக்கண்ணன் அடியவன்போலும்! அதனலேதான் என் மொழிகளைக் கேட்டுச் சிரித்து என்னை யிகழ்ந்தாய்!" என்று அதட்டிக் கூறினன். ததீசி முனிவரும கோபத்துடன், "பிரமன் முதலாகவுள்ள எல்லையற்ற உயிர்த்தொகைபனைத்தையும் முதன்முதலில் உண்டாக்கும் தந்தையாய் உலகத்தைச் சிருஷ்டித்துக் காத்து அழித்து, உலகெலாமதாமேயாகி, எங்கும நிறைந்து நிற்கும ஒப்பற்ற தனிப பொருளாய், உயிர்க்குயிராய், யாவற்றினும் மேலாய் விளங்கும பரமேசுவரனை நீக்கியோ நீ யாகம் செய்ய யத்தனித்தாய்? தேவர்களனைவருக்கும கொடுக்கும் சிறந்த அவிர்ப்பாகங்களைப் பெற்றுக்கொள்பவரும், அந்த அவிர்ப்பாகங்களைத் தேவர்களுக்குச் சேர்க்கும அக்கினிதேவருக்குத் தலைவரும், யாகத்துக்குத் தலைவரும, யாகத்தின் பலனை அளிப்பவரும் சங்கரர்தாமென்று வேதங்கள் கூறுகின்றன. ஆதி முதல்வனுகிய பரமசிவனை இகழ்தல் பேதைமையைக் காட்டுமேயன்றிப் பெருமையைத் தராது. வேதத்திற் கூறியுள்ள மெய் வசனங்களைத் தள்ளி நீ செய்யப் புகும் யாகம் நிறைவேருது. அது பெரிய கலக்கத்தையே

உண்டாக்கும். அமலனது ஆணை செல்வதை நீ காண்பாய்! அவனுக்கு அஞ்சாமல் நடப்பவர் மாய்வர்! ஆதலால், ஆதியும் அந்தமுமில்லாத அமலராகிய சிவபெருமானுக்கு அவிர்ப்பாகமளித்து வேதத்திற் கூறியுள்ள முறை வழுவாது வேள்வி இயற்றுவாயாக! நீ இப்போது கொண்டுள்ள எண்ணம் தீங்கையே விளைவிக்கும்" என்று தக்ஷனைக் கண்டித்து நற்புத்தி கூறினார்.

அதுகேட்ட தக்ஷன், "ஏ ததீசி! உனது உருத்திரனைப்போன்ற ஏகாதசருத்திரர்களும அஷ்டதிக் பாலர்களாகிய ஈசானர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு முதல் அவிர்ப்பாகத்தைக் கொடுத்து வேள்வியை நடத்துகிறேன்" என்று கூறினான்.

அப்போது ததீசி முனிவர், "தக்ஷனே! துன்பசாகரத்திற் பட்டோர் எல்லோரையும் கைதூக்கிக் காக்குந் தன்மையினால் எம்பெருமான் உருத்திரன் என்னும் திருநாமம் பெற்றார். எம்பெருமானது பொற்பாதங்களை அன்புடன் நினைத்துத் துதிப்போர் அவருடைய உருவத்தையும் பெயரையும் பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் அவரது தன்மையை யடைந்தவர்களாகமாட்டார்கள். சிவபெருமானே யாவரினும் உயர்ந்த பரம்பொருளாய் நமது இதயத்தாமரையில் நின்று நிருத்தஞ் செய்பவர் என்று வேதங்களும் சாஸ்திரங்களும் கூறுகின்றன. இவ்வுண்மையை முன்னாளில் நினது தந்தை பிரமதேவரிடம் கேட்டுணர்ந்துகொண்டு நீ மெய்த்தவமியற்றி சங்கரன் அருள்பெற்று வரம்பில்லாத செல்வங்களை யடைந்தாய். அழிந்துபோகும் காலம் உனக்கு நெருங்கிவிட்டதனால், நீ அவைகளை மறந்தாய் போலும்! நின் தந்தை முதலியவர்களெல்லோரும் தங்களுக்கும் இறுதி காலம் நெருங்கிவிட்டதனால் நின் சபையில் வந்து கூடியிருக்கிறார்கள்.

மாயையினால் மயக்கமுற்றிருக்கிறாய்! அழிந்து போகாமல் பிழைத்திருக்க உனக்கு இச்சையுண்டானால், பரம்பொருளாகிய அரனார்க்கும் அவிர்ப்பாகம் அளித்து, இச்சிறந்த யாகத்தினை இயற்றுவாயாக!'' என்று நற்புத்தி கூறினார்.

அகங்காரமே குடிகொண்ட மனத்தையுடைய தக்ஷன் நகைத்து, "பரம்பொருள் என்னும் மேலோன் சுடுகாட்டில் எரியும் உடம்புகளினின்றும் சிந்திவீழும் எலும்புகளையும் தலைகளையும் ஆபரணங்களாக அணிந்து கொள்வானே? தேவர்கள் வெந்ததனாலுண்டான சாம்பரை ஆசையோடு தேகமெல்லாம் பூசிக்கொள்வானே? தசை கழிந்த உடலைச் சூலத்திலேந்தித் திரிவானே? சுடுகாட்டில் விழுந்து கிடக்கும் தலைமயிரை முந்நூலாகத் தரிப்பானே? பிரபஞ்சம் அழியுமாறு உயிர்த்தொகை யனைத்தையும் மாய்த்திடுவானே? புலியின் தோலை உடுத்துக்கொண்டும், யானையின் தோலினால் தன் தேகத்தைப் போர்த்துக்கொண்டும், அக்கினி, மழு, மான், உடுக்கை இவைகளைக் கைகளில் தாங்கியும் நிற்பானே? எங்கும் திரிந்து பிச்சை வாங்குவானே? பூதங்களையே தனது படையாகக் கொண்டு திரிவானே? கொடிய பாம்புகளைத்தாம் ஆபரணங்களாகப் பூணுவானே? காளையைத் தான் வாகனமாகக் கொள்வானே? தன் பசியைத் தீர்த்துக் கொள்ள விஷத்தை யுண்பானே? உங்கள் ஈசன் பரம்பொருள் அல்ல. ஆதலின், நான் புரியும் வேள்வியில் அவனுக்கு அவிர்ப்பாகம் அளிக்கமாட்டேன்!'' எனப் புகன்றான்.

அந்த நிந்தைமொழிகளைச் செவியுற்றதும், அத்தபோதனர், உலகெலாமீந்த எம்பெருமானையோ இவன் பழிப்பது என்று கடுங்கோபங்கொண்டு, தேவர்கள் கூடிய அச்சபையில் அவைகளுக்குப் பதிலுரைக்க வேண்டுவது

அவசியமெனத் தீர்மானித்து, சில உண்மைகளைப் பின் வருமாறு அவனுக்கு எடுத்துரைத்தார் :

" தக்ஷனே! சிவபெருமானது பெருமையை விளக்கும் செயல்களையே இழிசெயல்களாகச் சுட்டிக்காட்டி நிந்தித்தாய்! அவைகளின் உண்மையை உரைக்கிறேன். கேட்டு உய்ந்துபோ! அரூபியான எங்கள் நாயகன் தம் தண்ணருளினால் ஒரு திருவுருவங்கொண்டு, தேவர்களுக்குள் தலைமைபெற்ற பிரம விஷ்ணுக்களைச் சிருஷ்டித்து, உலகங்களை யெல்லாம் படைத்துக்காக்கும் கடமையை அவர்களுக்கு விதித்து, அவர்களுயிருக்குயிராய் நின்று தாமே உலகங்களைப் படைத்துக்காதது, தம்மிடத்தில் தூய்மையான அன்பு பாராட்டுவதனால் முந்தை வினையைத்தொலைத்துக்கொண்டவரை முத்தியடையச் செய்து, பிறகு எஞ்சிய உயிர்களனைத்தையும் அழிக்கிறார். இப்படியே அவர் யுகங்கள்தோறும் செய்துவருகிறார். அவ்வாறு சங்கரிக்கும்போது, அவர் சில சமயங்களில் பிரமன் முதலியோர்களின் எலும்புகளை யெடுத்து அணிந்துகொள்வார்; சில சமயங்களில் அப் பெரியோரின் சிரங்களை யெல்லாம் எடுத்துத்தொடுத்துச் சிரமாலையாக அணிந்துகொள்வார்; அவர்கள் தலைமயிரை முந்நூலைப் போல அணிந்துகொள்வார்; மற்றும் சில சமயங்களில் அவர் அவர்களைத் தமது சூலத்தினால் மெல்லத் தூக்கி ஏந்தி நிற்பார்; பின்னும் சில சமயங்களில் அவர் அவர்களை நீறாக்கி அந் நீற்றை யணிந்துகொள்வார்; இவ்வாறெல்லாம் ஈசன் அவர்களைச் செய்வது அவர்கள் இயற்றிய அரியதவத்தின் பயனே யாகும். யாவரும் தம் செயலைக் கண்டு ஆச்சரியமடைய வேண்டுமென்ற ஆசையினால் அவர் அப்படிச் செய்யவில்லை.

" மான், மழு முதலியவைகளை எம்பெருமான் தமது

திருக்கரங்களில் ஏந்தியிருப்பதற்குக் காரணம் சொல்லுகிறேன், கேள்! முன்பு தாருகவனத்தில் வசித்துவந்த முனிவர்களெல்லோரும் ஈசனிடத்து அன்பில்லாதவராய், தமது வேள்வியும் தவமும் ஈசனருள் இல்லாமலே தமக்கு முத்தியைத் தருமென்று மருட்சியுற்று ஈசனை மதியாமல் வேள்வியையும் தவத்தையும் புரிந்துவந்தனர். அவர்களது செய்கையை யுணர்ந்த கயிலைநாதர் அவர்களுடைய மயக்கத்தை நீக்கத் திருவுளங்கொண்டு, திருமாலை யழைத்து அவரை மோகினிவேடம் தரிக்கச் செய்து, தாம் அற்புதச் சுந்தரம் வாய்ந்த தவசிவேடம் பூண்டு, திருமாலுடன் தாருகவனத்துக்குச் சென்று, திருமாலை அம்முனிவர்கள் வேள்வி இயற்றுமிடத்துக்கு அனுப்பிவிட்டுத் தாம் முனிவர்களது வீடுகளுள்ள ஊருக்குள் வேத வாக்கியங்களை இன்னிசையுடன் பாடிக்கொண்டு பிச்சை வாங்குபவனைப்போல் சென்றார். முனிவர்களது தேவிமார்கள் ஆசையுடன் எம்பெருமானைத் தொடர்ந்து சென்றனர். முனிவர்களும் மாயவனுடைய மோகினி வேடத்தைக்கண்டு மயங்கி ஆசையுடன் அவர் பின்னே சென்றனர். இரண்டு கூட்டங்களும் சந்தித்தன. அப்போது தான் முனிவர்களுக்குச் சிவபெருமான் செய்த சூது விளங்கிற்று. உடனே அவர்கள் கொடிய யாகமொன்றைச் செய்து சிவபெருமானைக் கொல்ல நிச்சயித்து, அங்கேயே ஓமத்தீயை வளர்த்து யாகம் செய்தார்கள். அந்த ஓமத்தீயினின்றும் கிளம்பி, அம்முனிவர்களால் ஏவப்பட்டு எம்பெருமானை யழிக்கப் பாய்ந்துவந்த புலியைக் கிழித்து அதன்தோலை எம்பெருமான் ஆடையாக அணிந்துகொண்டும், மழுவை ஆயுதமாக ஒருகரத்தில் தரித்துக்கொண்டும், மானை ஒரு கரத்தில் அமர்த்தி இனிமையாகக் கூவும்படி கட்டளையிட்டும், ஸர்ப்பங்களை முன்னையில் கருட

னுக்கு அஞ்சித் தம்மிடம் அடைக்கலம புகுந்த நாகஙக ளுடன் தமது மார்பில் ஆபரணங்களாக அணிந்துகொண் டும், பூதர்களைத் தமது படையாக விருக்கும்படி பணித் தும், வெண்டலையைத் தமது சடாமுடியில் தரித்துக் கொண்டும், உடுக்கையை ஒரு கரத்தில் அமர்த்தித் தமது காதினருகே யிருந்து ஒலிக்கும்படி பணித்தும், முயலகன் என்னும் பூதத்தை ஒரு பாதத்தினால் தள்ளிக் கீழே யழுத்திக்கொண்டும், ஓமத்தீயை ஒரு கரத்தினில் தாங்கியும், ஈசுவரனது அருளில்லாத வேள்வி பயனற்றது என்ற உண்மையை அம்முனிவாகளுக்கு விளக்கிக்காட்டி, அவர்களது மானயயை அகற்றி, அவாகளை மன்னித்தருளி னார்.

"முன்னொருகாலத்தில் கயாசுரன் என்பவன் பிரம தேவரை நோக்கி அருந்தவமியற்றி, அவர் அவன் முன் தோன்றியபோது, அழியாத பேராயுளும் ஆற்றலும் வெற்றியும் வேண்டுமெனக் கேட்க, அவர், 'அவைகளை உனக்குத் தந்தோம். ஆயின், சிவபெருமானை நீ எதிர்ப் பாயாகில் அழிந்துபோவாய்!' என்று சொல்லிப் போனார். அவ்வசுரன் இந்திரனை வென்று துரத்தி அவனுடைய அமராவதி நகரத்தை யழித்து, அஷ்டதிக்பாலர்களையும் துரத்தி, அசுரர்களையும இராக்ஷதர்களையும் வதைத்து, பிறகு பூமிக்குச் சென்று மனிதர்களை நாசமாக்கி வருத்தத் தொடங்கினன். தவமுனிவர்கள் அதுகண்டு காசி நகரை யடைந்து விசுவநாதருடைய ஆலயத்துக்குட் சென்று எம்பெருமானிடம் முறையிட்டனர். எமபெருமான் சர்வசங்காரமூர்த்தி யுருவத்தை யெடுத்துக் கொண்டு மதிமயங்கித் தம்மை எதிர்த்த கயாசுரனை ஒரு காலினால் தள்ளி, மற்றொருகாலை அவன் தலைமீது வைத்து அழுத்தி அவன் தோலினை யுரித்தார். அப்போது உலகிலுள்ளோர்

எம்பெருமானது திருமேனியின் பேரொளியைக் கண்ணாற் பார்க்கச் சக்தியற்றவராய்த் தியங்கியதைக் கண்டு, எம்பெருமான் கருணைகூர்ந்து அந்த யானைத்தோலினால் தமது திருமேனியைப் போர்த்தி மறைத்தார்.

"எம்பெருமான் ஏறிய விடையை இகழ்ந்து பேசினாய். அது தருமதேவதையாகும். நீ நிந்தையாகக் கூறியவைகளெல்லாம் எம்பெருமானது பெருமையையும் கருணையையும் நன்கு விளக்குகின்றன. இறைவன் சுடலையில் ஆடுகிறார் என்று இகழ்ந்தாய் யுகமுடிவில், சங்கார காலத்தில், உடல் உயிர் யாவும் ஒடுங்கிய இடமன்றோ சுடலையென்று சொல்லப்படுகிறது! தக்ஷனே! இனி பரம்பொருளாகிய சிவபெருமானை நிந்தியாதே! முன் போலவே அவருடைய உண்மை நிலையை யுணர்ந்து அவரைப் போற்றுவாயாக!"

இவ்வாறு ததீசி முனிவர் உண்மையை எடுத்துரைத்து நற்புத்திகூற, தக்ஷன் அதைச் சிறிதும் ஏற்றுக் கொள்ளாமல், "முனிவனே! பல பல உரைப்பதில் பயனென்ன? கைலாயகிரியில் வசிக்கும் உன் இறைவன் பரம்பொருளேயானாலும், அவனுக்கு நான் செய்யும் வேள்வியில் அவிர்ப்பாகம் அளிக்கமாட்டேன். ஆகையினால் நீ இப்படிப்பட்ட வார்த்தைகளை இனிப் பேச வேண்டாம். நீ இவ்விடம் விட்டுப் போய்விடு. நான் எடுத்த காரியத்தை என்னிஷ்டப்படி செய்துமுடிப்பேன்!" என்று அம்முனிவரை அவமதித்துத் துடுக்காய்ப் பேசினான்.

அப்போது ததீசி முனிவர் கோபமுற்று, "தக்ஷனே நீ சங்கரனை விலக்கிச் செய்யும் வேள்வி அழியக்கடவது உன்னோடு இங்கு அமர்ந்துள்ள தேவர்களெல்லோரும் இன்றே அழிவார்களாக! அந்தணருக்கு முதல்வன் சிவ

பெருமான் என்பதை மறந்து இவ்வேள்வியிற் கலந்து தங்கள் குலத்தின் தன்மையை அந்தணர்கள் இழந்தார்களாதலால், அவர்கள் வேதங்களெல்லாம பரமபொருளெனக் கூறும் சிவபெருமானையும், அவரது அன்பர்களையும், வெண்ணீற்றையும், உருத்திராக்ஷத்தையும் இகழ்ந்து, என்றென்றும் அந்தணராய்ப் பிறந்திறந்து, முத்தியடையாமல் பாசத்தின்வாய்ப் பட்டு வேதத்திற் கூறப்படாத மார்க்கத்திலேயே நின்று ஒழுகுவார்களாக!'' என்று சபித்து, பிறகு தம்மைச் சேர்ந்த முனிவர்களுடன் அவ்விடம்விட் டகன்றார். தக்ஷனுடைய செல்வமும், தவமும், கீர்த்தியும், ஆற்றலும், கர்வமும அவரைப் பின் தொடர்ந்து அவ்விடம்விட் டகன்றன

## பத்தாவது அத்தியாயம்

### தக்ஷன் யாகசாலைக்குத் தாக்ஷாயணி வருதல்

ததீசி மகாமுனிவர் அவ்வாறு தக்ஷனது யாக சாலையைவிட்டு அகன்றவுடன் அந்த யாகசாலையில் பல அபசகுனங்கள் காணப்பட்டன. தக்ஷனதுகொடி ஸ்தம்பத்திலிருந்து அறுந்து கீழேவிழுந்தது காட்டிலுள்ள காகங்களும கழுகுகளும் கூட்டங் கூட்டமாய் வந்து யாக சாலையிலுள்ள யூபஸ்தம்பங்களின்மீது அமர்ந்தன. வேதவல்லியின் கழுத்திலிருந்த திருமங்கல்ய சூத்திரமும தானாக நழுவிக் கீழேவிழுந்தது. ஆனால் தக்ஷன் அவைகளைச் சிறிதும் இலக்ஷியஞ் செயயாமல், வேள்வி செய்யத் தொடங்கினன். அவனுடைய கட்டளைப்படி பல முனிவர்கள் ஓமகுண்டங்களில் அக்கினியை வருவித்து, மந்திரங்களைச் சொல்லி, நெய்யை ஆகுதி செய்து, சிவ

பெருமானைத் தவிர மற்றத் தேவர்கள் யாவர்க்கும் அக்கினி மூலமாக அவிர்ப்பாகம் அளித்தனர்.

தக்ஷன் யாகம் செய்வதை நாரதர் மூலமாகத் தெரிந்துகொண்ட தாக்ஷாயணி இறைவன் அடிகளைப் பணிந்து, அவர் ஒரு முறை மறுத்தபின்னும் அவரை மிகவும் பிரார்த்தித்து, தக்ஷன் வேள்வியைப் பார்த்துவரப் போக அனுமதி பெற்றுக்கொண்டு, தன பரிஜனங்களும் பூதகணங்களும் சூழ்ந்துவர விமானத்திலேறி விரைந்து சென்று, தக்ஷனது யாகசாலையை யடைந்து, விமானத்தினின்றும் இறங்கித் தக்ஷன்முன் சென்றாள். அப்போது தக்ஷன் கோபத்துடன், "தந்தைதா யில்லாத சிவன் சிந்தைக்கு உகந்த மனைவியான நீ, நான் பெற்ற மகளிரைப் போலவே இங்கு எதற்காக வந்தாய்? உன்னை அழைக்காத போது நீ வரலாமோ? நீ உன் மலைக்குப் போகலாம்!" என்று அலக்ஷியமாய்ப் பேசினான்.

அதுகேட்டு உமாதேவியார், "என் சகோதரிகளுக்கும் அவர்கள் கணவர்களுக்கும் தக்க சீர்களைக் கொடுத்த நீ என்னையும் என் நாயகனையும் சிறிதும் நினைக்கவில்லை. நீ அழைக்காமலே தானாகவந்த என்மீது கோபங் கொள்கிறாய். இதற்குக் காரணமென்ன?" என்று கேட்டாள். அதற்குத் தக்ஷன், "தமோகுணத்துக்குரிய சங்காரத்தொழிலைச் செய்து பேய்களோடு ஆடல் செய்யும் பித்தனை மணந்தவுடன் நீயும் அவன் நிலையை யடைந்து அவனுடன் கூடிச் செருக்குற்றிருந்ததனால், உன்னை நான் இகழ்ந்தேன். உன் சகோதரிகளும் அவர்களுடைய கணவர்களும் என்னிடம் அன்புடையவர்களாதலால், அவர்களுக்குச் சிறந்த வரிசைகளை யளித்தேன். சிவனும் நீயும் என்னைச் சிறிதும் மதிக்கவில்லையாதலின், உன் நாயகனுக்கும் அவிர்ப்பாகமும் அளி

யேன், தானுகவந்துள்ள உனக்கும் தினையளவு மரியாதை யும் செய்யமாட்டேன்" என்று கடுமையாகக் கூறினன்.

அக்கடுமொழிகள் உமாதேவியின் செவியிற் பட்ட மாத்திரத்தில், அவள் மனத்தில் மாசற்ற கோபம் உற்ப வித்து ஊழித்தீயேபோல் அண்டங்களையும் அளவில்லா உயிர்களையும் அழிப்பதற்கு எழுந்தது. அப்போது அரு கில் நின்ற விமலை யென்னும் மாது உமாதேவியை வணங்கி, "தாயே! இக்கோபம உனக்கு ஏற்குமோ? இவன் தருமநெறி பிறழ்ந்து நடந்தானென்று நீ கோப முற்றது நியாயமேயெனினும், அது யாவற்றையும் அழித்துவிடு மாதலால், இப்பிழையை நீ பொறுத்தருள வேண்டும்" என்று கூறிப் பிரார்த்தித்தாள்.

உடனே உமாதேவி தனது கோபத்தை அடக்கி உள்ளே செலுத்தி, தக்ஷனை நோக்கி, "நீ இங்கு என்னை இகழ்ந்ததை நான் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. ஆனல் என் நாயகனை நீ இகழ்ந்ததைக் கேட்டுச் சகிக்க முடியவில்லை. குணம் என்பது இல்லாதவராயும் மாசு என்பது தம்மீது படியப் பெறுதவராயுமுள்ள இறைவர் உலகங்களின் நன்மையைக் கருதினவராய்க் கொள்ளும் குணங்கள் எண்ணிறந்தன வாதலால், அவர் சங்காரஞ் செய்யும் தமோகுணமுடையவர் என்று நீ சொன்னவாறு சொல்லி, அவ்வளவு எளிதில் அவர் குணங்களை எடுத் துரைப்பது சாத்தியமன்று. அச் சங்காரத் தொழிலும தீயதன்று. ஏனெனில், உயிர்கள் ஓயாமல் செத்தும் பிறந் தும் வருந்தி அலைவுறுவதைக் கண்டு மனமிரங்கி அவைக ளுற்ற இளைப்பை ஆற்றுவதற்காகவே சர்வேசுவரன் அவைகளை மாய்க்கிறார். சிவபெருமானை முதல்வராகக் கருதாமல் இகழ்வோருக்குத் தண்டனை கிடைக்குமென வேதங்கள் கூறுகின்றன. அத் தண்டனை உனக்கு விரை

விற் கிடைக்கட்டும்" என்று கூறிவிட்டுத் தன் பரிஜனங்களுடன் அவ்விடம்விட் டகன்று திருக்கைலாயத்துக்குச் சென்றாள்.

## பதினோராவது அத்தியாயம்

### தக்ஷனது யாகத்தை வீரபத்திரர் அழித்தல்

திருக்கைலாயத்தை யடைந்ததும், உமாதேவி எம பெருமான் திருமுன்னர் சென்று அவரைப் பணிந்து, "எம்பெருமானே! அற்பனான தக்ஷன் தேவரீரை மிகவும் இகழ்ந்தானதலால், அவன் செய்யும் வேள்வியை அழித்து விடவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். எத்தேவர்க்கு எவர் அளிக்கும் அவிர்ப்பாகமும் சகலவுயிர்களுக்கும் உயிரான எம்பெருமான திருக்கரத்தில் வந்து பொருந்து மாதலால், தக்ஷன் வேள்வியில பிரமன் மகாவிஷ்ணு முதலியோருக்கு அளித்த அவிர்ப்பாகங்கள் அவர் கரத்தில் வந்து சேர்ந்துவிட்டன ஆதலால் எம்பெருமான் அம்மொழிகளைச செவிசாற்றுதவராய்ச சும்மாவிருந்தார். அதுகண்ட உமாதேவி, "எனது நாயகனே! தேவரீருக்கு விருப்பு, வெறுப்பு இரண்டுமில்லையே யெனினும், தேவரீரிடத்தில் அன்புடைய அடியேனுக்காக அவன் செய்யும் தீயவேள்வியை அழித்துவிடவேண்டும்" என வேண்டினாள்.

அப்போது சிவபெருமான் உமாதேவியின் இச்சை நிறைவேறுமாறு மனத்தினில் சற்று நினைத்த மாத்திரத்தில், பிறைச் சந்திரனைச் சூடிய செஞ்சடாமுடியை யுடைய ஆயிரந்தலைகள் விளங்கவும், ஆயிரமுகங்களிலும் மும்மூன்று கண்கள் தீப்பொறிகள் சிந்தவும், இரண்டாயிரம் கரங்களிலும் பல்வகைப் படைகள் தோன்றவும்,

பாம்புகளையும், எலும்புமாலைகளையும் சிரமாலைகளையும் அணிந்துகொண்டும், எந்தையின் வடிவத்தையுடைய வராய் வீரருக்குள் முதல்வராகிய வீரபத்திரர் எந்தையின நெற்றிக் கண்ணினின்றும் தோன்றினார்.

அப்பொழுது உமாதேவி தனது கோபத்தினால் ஆயிரந் தலைகளும இரண்டாயிரங் கைகளுமுடைய பத்திர காளியைச் சிருஷ்டிக்க, அவள் வீரபத்திரக் கடவுளை யணுகி அவருக்குத் துணையாக நின்றாள். வீரபத்திரர் பத்திரகாளியுடன் சிவபெருமானையும் உமாதேவியையும் வலம் வந்து வணங்கி எம்பெருமானை நோக்கி, "எந்தாய்! தேவரீர் என்னைச் சிருஷ்டித்தது எக்காரியத்துக்காக வென்று தெரிவித்தருளவேண்டும்" என்று விநயத் துடன் கேட்டார். சிவபெருமான் வீரபத்திரரை நோக்கி, "தக்ஷன் எம்மை விலக்கி வேள்வி செய்கிறான். அங்கு நீ சென்று எமக்குரிய அவிர்ப்பாகத்தைத் தாவென்று கேள்! அவன் அதைக் கொடுத்தால் நீ இங்கு வந்து விடுவாயாக! கொடுக்காவிட்டால், அவன் தலையினைக் கொய்து, அவனிடத்து அன்பு பாராட்டி அவனுடன் கூடி யிருக்கும் அனைவரையும் அழித்து, அவன் புரியும் யாகத் தையும் கலைத்துவிடுவாயாக! அச்சமயம் நாம் அங்கு வந்துசேர்வோம்! நீ இனி அங்கே செல்வாயாக!" என்று கட்டளையிட் டருளினார்.

வீரபத்திரர் பத்திரகாளியுடன் அப்பாற் சென்று, எம்பெருமானை யிகழ்ந்த தக்ஷனை யழிக்கவேண்டுமென்று நினைத்துச் சீற்றங்கொண்டு எண்ணிறந்த பூதர்களைப் படைத்தார். அவ்வாறே பத்திரகாளி கணக்கில்லாத காளி களைச் சிருஷ்டித்தாள். உடனே அவர்களிருவரும் அப் பூதர்களும் காளிகளும் தம்மை நெருங்கிச் சூழ்ந்து வரப் புறப்பட்டுச் சென்று தக்ஷனது யாகசாலையை அடைந்து,



வீரபத்திரனுக்கும், மகாவிஷ்ணுவுக்கும் சண்டை

பல பூதர்களையும் காளிகளையும் அந்த யாகசாலையைச் சுற்றிக் காவலாக வைத்துவிட்டு, சில பூதர்களுடனும் காளிகளுடனும் யாகசாலைக்குள் நுழைந்தனர். அவர்கள் வரவைக்கண்ட யாவரும் அஞ்சி நடுங்கி ஒடுங்கினர். வீர பத்திரர் தக்ஷனை யணுகிச் சிவபெருமானுக்குரிய அவிர்ப் பாகத்தைத் தரும்படி கேட்க, அவன் அஞ்சாதவன்போல் நடித்து, "சுடுகாட்டில் பேய்களோடு ஆடல் செய்யும் பித் தனுக்கு நான் அவிர்ப்பாகம் அளிக்கமாட்டேன்" என்று கூறினான்.

வீரபத்திரர் தேவர்களை நோக்கி, "இவன் நிம லராகிய எம்பெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்காமல் அவரை இகழ்வது உங்களுக்குச் சம்மதந்தானோ?" என்று கேட்க, அவர்கள் அம்மொழிகள் தங்கள் செவிக ளிற் படவில்லைபோல் சும்மாவிருந்தார்கள். வீரபத்திரர் கடுஞ்சினங்கொண்டு ஒரு கதையினால் தக்ஷன் மார்பு பிளவுபடுமாறு அடித்தார். தக்ஷன் மூர்ச்சையடைந்து திருமாலின் முன் வீழ்ந்தான். பிறகு வீரபத்திரர் பிரம தேவரது தலையில் ஒரு கையினாற் குட்டினார். பிரமதேவ ரும் மூர்ச்சித்து வீழ்ந்தார். பிறகு வீரபத்திரர் தேவர்க ளெல்லோரையும் பிடித்து மாய்க்கத் தொடங்கினார். தக்ஷன் மூர்ச்சை தெளிந்தெழுந்து பூதங்களால் காக்கப் பட்ட யாகசாலையைவிட்டுத் தப்பியோடுவது சாத்திய மில்லையெனக்கண்டு, கீரனைப்போல் நடித்து வீரபத்திரர் முன் சென்று நின்றான். வீரபத்திரர் தமது வாளினால் அவன் சிரத்தை யறுத்து, அது கீழே விழுமுன் அதைப் பிடித்து ஓமத்தீயிலிட்டார். அது கணப்பொழுதில் நீறா யிற்று. வீரபத்திரரும், பத்திரையுமாகச் சேர்ந்து எல் லாத் தேவர்களையும் தேவமாதர்களையும் மாய்த்தனர்.

யாக நாயகனை அமர்த்திப் பூஜிக்கப்பெற்ற திருமால்

தம்மால் அந்த யாகத்தைக் காப்பாற்ற முடியாமற் போனதையன்றி வெட்கமடைந்து மயங்கிக் கோபங் கொண்டு வீரபத்திரரை எதிர்த்துப் போர்செய்தார். ஆனால் வீரபத்திரர் அவருடைய சக்கராயுதத்தையும் விழுங்கி அவரைத் தியக்கமுறச்செய்தார். திருமால் தமது வாளை ஓங்கினர். அப்போது வீரபத்திரர் கடுங்கோபத்துடன் ஹுங்காரஞ் செய்தார். மாயவன் கையும் வாளுமாகச் சித்திரம்போல் செயலற்று நின்றார். அப்போது, "மிக்க கோபத்தினை விட்டுவிடு!" என்று எந்தையின் மொழி ஆகாயத்தில் கேட்டது. அதுகேட்டு வீரபத்திரர் கோபத்தைத் தவிர்த்து நின்றார்.

அப்போது சிவபெருமான் உமாதேவியுடன் இடப வாகனத்தின்மீது எழுந்தருளி அங்கு வந்து, உமாதேவி தன்னால் யாவரும் அழிந்தாரென்ற அபகீர்த்தி தன்னைச் சாராமலிருக்கும்பொருட்டு மாய்ந்தோர் அனைவரையும் உயிர்ப்பிக்கும்படி வேண்டியாகற்கு இசைந்து, வீரபத்திரரை நோக்கி யாவரையும் உயிர்ப்பிக்கும்படி கட்டளையிட்டார். வீரபத்திரர் அருளினால் யாவரும் துயிலினின்று எழுபவர்போல் எழுந்து எம்பெருமானை வணங்கித் துதித்தனர். தக்ஷன் மட்டும் எழாததைக்கண்ட பிரமதேவர் அவனுக்கும் அருள்புரியும்படி எம்பெருமானை வேண்ட, வீரபத்திரர் தலையில்லாத தக்ஷன் உடலத்தில் யாகத்தில் கொல்லப்பட்ட ஒரு ஆட்டின் தலையைப் பொருத்தி உயிர்ப்பித்தார். பிறகு எம்பெருமான் உமாதேவி, வீரபத்திரர், பத்திரகாளி முதலியோர்களுடன் திருக்கைலாயத்துக்கு ஏகினர். தக்ஷன் அகங்காரம் ஒழிந்து அறிவுபெற்று எம்பெருமானைக் காசியில் ஆராதித்து, அவரது கருணையினால் கணநாதரை யிருக்கும் தகைமையைப் பெற்றான்.

# பன்னிரண்டாவது அத்தியாயம்

## சூரர்களின் பிறப்பும் தவமும்

அறுபத்தாறுகோடி அசுரர்களுக்கும் அரசனாயுள்ள அசுமேசன் மங்கலகேசி என்னும் இராக்ஷத ஸ்திரீயை மணந்துகொண்டு, அவளிடம் சுரசை என்னும் மகளைப் பெற்றான். அவள் தக்க வயதடைந்ததும், அசுர குருவாகிய சுக்கிராசாரியர் தீயவைகளான மாயவித்தைகள் யாவையும் அவளுக்குக் கற்பித்து, அவள் அவ்வித்தைகளில் அடைந்த தேர்ச்சியைக்கண்டு வியப்புற்று அவளுக்கு மாயை என்று காரணப்பெயரிட்டு, பிறகு அக்காலத்தில் அசுரர்கள் அடைந்திருந்த தாழ்ந்த நிலைமையையும், தேவர்கள் பெற்றிருந்த பெருமையையும், பிரமதேவர் செய்த வேள்வியில் தக்ஷன் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்கக்கூடாதென்று விதித்தபோது திருநந்திதேவர் வெகுண்டு தக்ஷனுக்குக் கொடிய சாபமிட்டுப் பிறகு, "உன்னைச் சார்ந்துள்ள தேவர்களும் ஒருகாலத்தில் வளங்களை யிழந்து எண்ணிறந்த யுகங்கள் சூரன் என்னும் அசுரனால் துன்புறுத்தப்பட்டுத் துயர்க்கடலில் மூழ்கியிருப்பாராக!" என்று தேவர்களுக்கிட்ட கொடிய சாபத்தினையும் நினைத்து, அசுமேசன் மகளாகிய அம்மாயையை அழைத்து, "பெண்ணே! உன்னால்தான் அசுரர்குலம் மேன்மையடைந்து தழைத்தோங்கும். நீ காசிப முனிவரிடத்தில் சென்று அவரை மயக்கி அவரை மணந்துகொண்டு, சிறந்த புதல்வரைப் பெறுவாயாக! பிறகு அளவற்ற செல்வங்களைப் பெற அசுரர்கள் தொன்றுதொட்டு இயற்றிவரும் வேள்வியையும் விரதத்தையும் அப்புதல்வர்களுக்குத் தெரிவித்து, பிறகு நின் குழந்தைகள் யாவரும் பெருஞ்செல்வமடையவும், அசுரர்களது

பகைவர்களெல்லோரும் சொல்லுவதற்கரிய பழியில் மூழ்கவும் அருந்தவமியற்ற இங்கு மீண்டும் வருவாயாக!" என்று மிக்க ஆதரவுடன் மொழிந்தார்.

அப்படியே மாயை சென்று, தவஞ் செய்துகொண்டிருந்த காசிப முனிவரது மனத்தை மயக்கி, அவர் தம்மை மணந்துகொள்ளும்படி செய்தாள். அவர்கள் சூரபதுமன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் என்னும் புதல்வர்களையும், அஜமுகி என்னும் புதல்வியையும் பெற்று அவர்களுக்குத் துணையாகப் பலகோடி அசுரர்களைப் படைத்தார்கள். சூரபதுமன் தனது தம்பிமார்களுடன் தன் தாய்தந்தையர்களைப் பணிந்து தாங்கள் செய்யவேண்டுவது யாதென வினவினன்.

## திமூன்றுவது அத்தியாயம்

### முத்திநெறியும், மாயையின் உபதேசமும்

அப்போது காசிபமுனிவர் அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினர் "பிள்ளைகளே! என்றும் தவறாத உண்மையை உரைக்கிறேன், கவனித்துக் கேளுங்கள்! நீங்கள் மூவரும் சிறந்த தவநெறியில் நின்று ஒழுகுவீராக! அதற்குக் காரணமுங் கூறுகிறேன், கேளுங்கள்! பெரியோர்கள் ஆராய்ச்சி செய்யத்தக்க பொருள்கள் மூன்றுண்டு; அவை பதி, பசு, பாசம் என்னும் மூன்றேயாகும். சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், மெய்யுணர்வொளித்தல், பேரருள் உதவுதல் ஆகிய பஞ்சகிருத்தியங்களையும் செய்கிற நீலகண்டராகிய சிவபெருமானே பதியென்று வேதங்கள் கூறுகின்றன. விருப்பும் வெறுப்பு மில்லாத சிவபெருமானது தன்மை யின்னதென்று உரைக்க யான் வல்லவனல்லேன்.

ஆணவம், காமியம், மாயை யென்னும் பாசங்களாகிய மூன்று தளைகள் பூட்டப்பெற்ற பசுக்களும் பதியைப்போலவே கேடற்றவைகளாய் அநாதியா யிருக்கின்றன. ஆனால், அவைகள் நல்வினை தீவினைகளின் பயனை ஓய்வில்லாமல் மாறி மாறிப் பிறந்து இறக்கும். சாஸ்திரவுணர்ச்சியும், கற்பும், வீரமும், பெருஞ் செல்வமும், வல்லமையும், மற்றவைகளும் நீரில் அலைபடும் நீர்க்குமிழி போன்றவைக ளாதலால், அவைகள் நிலையான பொருள்களாக மதிக்கத் தக்கவையன்று.

"தருமமென்று ஒரு பொருளுண்டு: அவிரோத புத்தியுடன் யாவற்றையும சமமாகக் கருதுபவர்க்கல்லாமல் மற்றெவருக்கும் அது இன்னதென் றுணர்வது சாத்தியமன்று. ஒருவன் அத்தருமத்தைச் செய்வானாகில், அவன் சர்வேசுவர னுடைய அன்புக்குப் பாத்திரனாகி, அவரது அருளைப் பெறுவான். அப்போது அவன் செய்யும் தருமம் தவத்தின் சிறப்பை யடையும். அதன் பின் அவன் ஞானம் பெற்றுச் சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களை யடைவான். அப்போது அவனுடைய பிறவி நோயும், முத்திநெறியிற் சேரவொட்டாமல் அவனைத் தடுத்துவந்த ஆணவம் காமியம், மாயை என்னும் மூவகைப் பாசங்களும் நீங்கும்; அவன் பேரின்பத்தில் மூழ்கிக் களிப்பான்.

"ஆகையினால் பெருந்தவமொன்றே உயிர்களுக்கு உற்ற துணையாகும். தவம் பிறவியை நீக்கி, உயர்ந்த முத்தியை யளித்து மேலான பதவியிற் சேர்க்கும். அன்றியும், அது இம்மையில் நாம் இச்சிக்கும் இன்பங்களை யெல்லாம் தந்து உதவும். ஆதலால், புதல்வர்களே! நீங்கள். தருமத்தைச் செய்யுங்கள்; தீயகுணங்களை அகற்றுங்கள்; சிவபெருமானை நோக்கித் தவம்புரியுங்கள். தவ

மியற்றுவோர் உலகெலாம் புகழுமபடி வாழ்வார்கள் பகைவர்களை யழிக்கும் திறமையுடையவர்களா யிருப்பார்கள்; தாம் இச்சிக்கும் பொருள்கள் எவ்வளவு அருமையானவைகளா யிருப்பினும், அவைகளனைத்தையும் அடைவார்கள்; என்றும் அழிவற்று வாழ்வார்கள். தவத்தின் மகிமையை விளக்குவதற்கு மார்க்கண்டர் சரித்திரம் ஒன்றே போதுமானது. மார்க்கண்டர் நிகரற்ற தவமியற்றி எம்பெருமான் அருள்பெற்று விதியை வெல்ல எவராலும் முடியாதென்று அகங்காரங் கொண்டிருந்த இயமனது அகங்காரத்தை யழித்து, 'இறைவனருளினால் விதியையும் வெல்லலாம்!' என்னும சிறந்த உண்மையைச் சகல ஜீவராசிகளுக்கும எடுத்துக் காட்டி உபதேசித்து, மூப்படையாத வரம் பெற்று, தேவர்களைக் காட்டிலும சிறப்புற்று விளங்குகிறார். ஆகையினால் நீங்கள் அருமையான தவத்தைப் புரியுங்கள்!"

காசிபமுனிவர் இவ்வாறு கூறியதைக்கேட்டு மாயை நகைத்து, "முனிவரே! தாங்கள் என்றும உறுதியாயுள்ள உண்மையை உரைத்தீர் என்பதற் கையமில்லை. ஆயின் முத்தியடைய விரும்பும் முனிவர்களுக்கேயன்றி, நமது புதல்வர்களுக்கு அந்நெறி தகுந்ததன்று. நமது புதல்வர்கள் பெருஞ்செல்வத்தையும், குற்றமற்ற வெற்றியையும், சுகத்தையும், முடிவில்லாத ஆயுளையும, நிலைபெற்ற பெருங்கீர்த்தியையும், துன்பமற்ற வாழ்க்கையையும் அடையவேண்டுமாதலின், அவைகளைப் பெறும் நெறியை அவர்களுக்குப் போதிக்கவேண்டும்" என்றுரைத்தாள். அதற்குக் காசிபமுனிவர், "உனது எண்ணம் அப்படியாயின், நீயே அவர்களுக்குத் தகுந்த நெறியைப் போதிப்பாயாக!" என்று கூற, மாயை தன் புதல்வர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினாள்.

"எனதருமைப் புதல்வர்காள்! உயிர்களெல்லாம் பிறப்பினால் அடையத்தக்க சிறந்த பலன்கள் சாஸ்திர ஞானமும் குறைவில்லாத செல்வமுந்தாம். அவ்விரண்டையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, கல்வியினும் செல்வமே சிறந்ததென எளிதில் விளங்கும். ஆதலால், அதைப் பெற நீங்கள் மூவரும் முயற்சி செய்யவேண்டும். இதற்கு வடக்குத் திக்கில் அசுரர்கள் யாகஞ் செய்வதற்கென்று ஏற்பட்ட இடமிருக்கிறது. ஆங்கு நீங்கள் உங்கள் பரிஜனங்களுடன் சென்று, ஓமகுண்டம் அமைத்து, நஞ்சுடன் கலந்த விறகைக் கொளுத்தி அக்கினியுண்டாக்கி, உதிரம், மாமிசம் முதலிய பொருள்களை அவ்வக்கினியில் ஆகுதிசெய்து, சிவபெருமானைத் துதித்துக் கொடிய யாகத்தைச் செய்யுங்கள். சிவபெருமான கருணைகூர்ந்து உங்கள்முன் தோன்றி நீங்கள் விரும்பிய பொருள்கள் யாவும உங்களுக்கு இம்மையிலேயே கிடைக்கும்படி அருள்புரிவார். அந்த யாகத்துக்கு வேண்டிய பொருள்களெல்லாம் அங்கு வந்துசேரும்படி நான் ஏற்பாடு செய்கிறேன்."

மாயை இவ்வாறு கூறி சூரபதுமன் முதலியோர்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, காசிப முனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு சென்று, தன் புதல்வர்கள் செய்யவேண்டிய தவத்துக்கு வேண்டிய பொருள்களை உதவவேண்டுமென்று பரமசிவனை நோக்கித் தவமியற்றினாள்.

---

## பதினொன்காவது அத்தியாயம்

## சூரபதுமன் தவமும், சிவபெருமான் அருளும்

சூரபதுமன் தன் துணைவர்களுடனும் பரிஜனங்களுடனும் யாகஞ் செய்யவேண்டிய இடத்துக்குப் போய்க் கொண்டிருக்கையில், அசுர குருவான சுக்கிராசாரியர்

அவர்கள் எதிரில் சென்று, சூரபதுமனால் வணங்கட பெற்று, சிவபெருமானது மந்திரமொன்றை அவனுக்கு உபதேசஞ் செய்து, “ கூற்றுவனை வென்று அடக்கிய சிவபெருமானது பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிப் பிறகு இம்மந்திரத்தை ஜபித்து, ஐம்புலன்களையும் மனத்து டன் ஒன்றுபடுத்தி, பொய், கொலை, களவு, காமம் முத லியவைகள் உன்னை யணுகாதபடி தடுத்துக்கொண்டு தவமியற்றுவாயாக !” என்று புத்தி கூறிவிட்டுச் சென் றார்.

மாயையானவள் சிவபெருமா னருளினால் அங்கு சேர்பபித்த ஏராளமான பொருள்களைக்கொண்டு சூரபது மன் சிவபெருமானை நோக்கிப் பன்னெடுங்காலம் அரு தவம் இயற்றினான். சிவபெருமான் எழுந்தருளாததைக் கண்டு, சூரபதுமன் ஆகாயத்தில் எழும்பிசசென்று தன் தேகத்திலுள்ள மாமிசத்தை வாளினால் அரிநது யாகா கினியில் அவிர்ப்பாகமாகச் செலுத்தி மழைபோற் சொரி யும் உதிரத்தை நெய்போல் ஆகுதிசெய்து சிறந்த வீர யாகம் செய்தான். அவன் தன் தேகத்திலுள்ள சதையை அறுக்க வறுக்க அது வளர்ந்துகொண்டே வநதது. அவ் வாறு வளரும் தசையை மீண்டும் மீண்டும் அறுத்து அவிர்ப்பாகமாக அளித்து அவன் ஆயிர வருஷ காலப் கொடியதவ மியற்றினான். அப்பொழுதும சிவபெருமான் வாராமையினால் மிகவும் வருத்தமுற்று சூரபதுமன் ஓம குண்டத்தின் நடுவில் தீயினால் சூழப்பட்டு நின்ற வஜ்ர தம்பத்தின்மேல் குதித்து, அதைத் தழுவியபடியே உள் ளங் துடிக்கச் சரீரம் பொடிப் பொடியாகக் கீழே யிறங்கி ஓமத்தீயில் எரிந்து மாய்ந்தான்.

அதுகண்ட சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் துய ருற்றுச் சிறிது நேரம் புலம்பி, பிறகு சிங்கமுகாசுரன்

தனது ஆயிரம் சிங்கத்தலைகளையும் தாரகாசுரன் தனது பெரிய யானைத் தலையையும் அறுத்து ஓமத்தீயிலிட்டு, அவைகள் மீண்டும் மீண்டும் வளர அவைகளையும் அறுத்து அறுத்து ஓமத்தீயிலிட்டுப் பலகாலம் வீரயாகம் செய்தார்கள். அப்போதும் சிவபெருமான் எழுந்தருளாததைக் கண்டு, சிங்கமுகாசுரன் தானும் தன் அண்ணனைப் போலவே யாகத்தீயிற் குதித்து உயிர் துறக்க வேண்டுமென நிச்சயித்தான்.

அப்போது சிவபெருமான வயதுமுதிர்ந்த பிராமண வடிவங்கொண்டு ஒரு திருக் கரத்தினால் ஊன்றுகோலையும் ஊன்றிவந்து, சிங்கமுகாசுரனை யணுகி அவனைக் கேட்டு அவர்கள் வரலாற்றைத் தெரிந்துகொண்டு, "உங்கள் தமயன் இறந்த துக்கத்தினால் நீங்களும் உயிர் துறக்கவெண்ணம், அவனை இப்போதே இவ்வோமத் தீயினின்றும் எழுப்பித் தருகிறேன்" என்று கூறி, கங்கா நதியை நினைக்க, அது விண்ணுலகத்திலிருந்து விரைந்து வந்து அவ்வோம குண்டத்தின் நடுவே பாய்ந்தது. உடனே அதிலிருந்து சூரபதுமன் ஆரவாரித் தெழுந்தான்.

அச்சமயத்தில் வேதியர் உருவத்துடன் எதிரில் நின்ற சிவபெருமான் அவ்வுருவத்தை மறைத்து அவர்கள் தம்மை அறியக்கூடிய உருவத்துடன் ஆகாயத்தில் இடபத்தின்மீது உமாதேவியாருடன் தோன்றி யருளினார். சூரபதுமன் தன் தமபியர்களுடன் பூமியில் விழுந்து நமஸ்கரித்தெழுந்து, பன்முறை வணங்கித் துதித்து நின்றான். அப்போது சிவபெருமான், "சிறந்த யாகத்தினைச் செய்து இளைத்தாய்! உனக்கு வேண்டும் வரம் யாதெனச் சொல்வாயாக!" என்று திருவாய்மலர்ந்தருள, சூரபதுமன் சிவபெருமானை நோக்கி, "பூமி முதல

லான பல புவனங்களடங்கிய அண்டங்களுக் கெல்லாம அடியேன் அரசனாயிருக்கவேண்டும. அவைகளைக் காப்ப தற்கு வேண்டிய ஆக்ஞா சக்கரமும கிடைக்கவேண்டும். நினைக்கு முன் அவ்வண்டங்கள்தோறும் செல்லத்தக்க வாகனங்களையும் அடியேனுக்குத் தந்தருளவேண்டும. எந நாளும் அழியாத தேகத்தையும் அடியேனுக்கு உதவியருள வேண்டும். திருமால் முதலியோர் போர்செய்தாலும் அவர் களுடன் போர் செய்து வெல்லக்கூடிய பேராற்றலை அடி யேனுக்குத் தந்தருளவேண்டும. அடியேன் என்றென் றைக்கும் அழியாமல் இருக்கவேண்டும்'' என்று பிரார்த் தித்தான்.

சிவபெருமான் திருவருள் சுரந்து, "பிரபஞ்சத்தி லுள்ள ஆயிரக்கோடி அண்டங்களில் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் ஆள்வாயாக!" என்று கூறி, அவ்வண்டங்களுக் கெல்லாம் செல்லத்தக்க இந்திரஜாலம் என்னும் இரதத்தையும், அவ்வாயிரத்தெட்டு அண்டங்களைப் பாதுகாக்கும் வல்லமை பொருந்திய ஆக்ஞா சக்கரத்தையும், ஆண் சிங்க வாகனத்தையும் அளித்து, சகல தேவர்களுக்கும தலைவனாயிருக்கும் பதவி யையும் தந்து, பாசுபதாஸ்திரம முதலான சகல தெய்வப் படைகளையும் கொடுத்து, எந்நாளும் அழிந்திடாமல் மேன்மையடையும் வஜ்ரத்துக்கு நிகரான அழகிய தேகத் தையும் உதவி யருளினார்; பிறகு பதினாயிரக் கோடி வெள்ளம சதுரங்க சேனையையும் அளித்தருளினார். பிறகு சிவபெருமான் சிங்கமுகாசுரனையும் தாரகாசுரனை யும் நோக்கி, "நீங்களும் சூரபதுமனுடைய இரண்டு தோள்களைப் போலவே வீரமுற்று விளங்கி, தேவர்கள் யாவரையும் வென்று புறங்காட்டி யோடச் செய்யும் வல் லமையுடன் நூற்றெட்டு யுகங்கள் சிறப்புடன் வாழக்

கடவீர்கள்! தேவர்கள் யாவராலும் தொழப்படும் சிறப்புற்று விளங்கும் உங்கள் மூவரையும் அழிவில்லாத எமது சத்தியேயன்றி எவரும் வெல்ல வல்லவர்களன்று!" என்று கூறிவிட்டு மறைந்தருளினார்.

---

## பதினைந்தாவது அத்தியாயம்

### அசுர குருவின் துர்ப்போதனை

பிறகு சூரபதுமன் தன் தம்பிமார்களுடனும் சேனா சமுத்திரத்துடனும் சென்று தன் தந்தை காசிப முனிவர் தவஞ் செய்துகொண்டிருந்த விடத்தை யடைந்து, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி யெழுந்து, அவரிடம் விடை பெற்றுக்கொண்டு அசுரகுல குருவாகிய சுக்கிராசாரியரிடம் சென்று அதுவரை நிகழ்ந்தவை யாவற்றையும் அவரிடம் தெரிவித்து, தாங்கள் அதற்குமேல் செய்யவேண்டியது யாதென்று தெரிந்துகொள்ள வந்ததாகக் கூறினான்.

அப்பொழுது தேவர்கள், முனிவர்கள் முதலியோருக்குத் தீங்கு செய்யவேண்டுமென்று வெகு காலமாய் உத்தேசித்திருந்த சுக்கிராசாரியர் சூரபதுமனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

"அசுரேசனே! பிரபஞ்சத்தில் பதி, பசு, பாசம் என மூன்று பொருள்கள் உண்டெனச் சிலர் கூறுவார்கள். ஆனால் உண்மை அப்படியல்ல. பரமேசுவரன் சகலத்தையும் மாயையைக்கொண்டு படைத்தார். பிறகு அவா பரமாத்மாவாகிய தமது அம்சத்தைப் பிரித்து சரீரத்தோடும் இந்திரியங்களோடும் ஜீவாத்மாக்களாக விளங்கி வருகிறார். அவ்வாறு செய்வதனால் அவர் பெறக் கருதும் பலன் விளையாட்டேயன்றி வேறொன்றுமல்ல. குடத்துக்

குள் தோன்றும் ஆகாயம், குடமுடைந்தவுடன் பேரா காயத்தோடு சேர்ந்து ஒன்றாகி விடுவதுபோல, ஒருவருடைய தேகத்துக்கு அழிவு நேர்ந்தக்கால் அத்தேகத்திலிருந்த ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிய பரமேசுவரனோடு கலந்துகொள்கிறது. ஒருவர் செய்யக்கூடிய வினைகளை நல்வினையென்றும் தீவினையென்றும் இரண்டாக வகுத்து ,அவைகளின் பயனாகப் பிறவியும் இன்பமும் துன்பமும் உண்டாகுமென்றும் சிலர் கூறுவார்கள். போதலும், வருதலும், அழகாகத் தோன்றுதலும், அழிதலும், செயல்களும் தேகங்களுக்குரிய காரியங்களேயன்றி தேகங்களிலுள்ள ஆத்மாக்களுக்குச் சம்பந்தப்பட்டவையல்ல.

" கருமமே மறுமைக்குற்ற துணையென்று எண்ணி அதை இடைவிடாது செய்வதும், பாவம் தீதென எண்ணி அதற்கு அஞ்சி நடுங்குவதும் அறிவின்மையாகும். சிவபெருமானால் மாயையைக்கொண்டு சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் யாவும் பொய்யாகையினால், புண்ணிய பாவங்களும் பொய்யேயாகும். ஆகையினால் அவைகளைச் செய்வதனால் யாதொரு பயனும் விளையத்தக்கதில்லை. சிலரைச் சிறியரென்றும், சிலரைப் பெரியரென்றும் கூறுதல் தகுதியன்று. எண்ணிறந்த ஜீவராசிகளிலும் இயங்கும் உயிர் ஒன்றேயென்னும் உண்மையை அறிய வேண்டும். இதுவே சத்தியம் !

" இனி உங்கள் அசுரகுலத்தின் வழக்கத்தை உரைக்கிறேன், கேள் ! உனக்குக் கிடைத்த மேன்மையைக் கவனித்து நீயே பிரமமென்று தெளிவாய் உணர்வாயாக ! ஆதலின், பிரமன் முதலியோரைப் பொருட்டாக மதிக்காதே ! அவர்கள் பெரியோரென்று மயங்கி அவர்களைப் பணியாதே ! தேவர்கள் உங்கள் குலத்துக்குப் பகைவர்கள். ஆகையினால் விரைவில் அவர்களது செல்வத்தை யழித்து

அவர்களைத் துன்புறுத்துவாயாக! அவர்களை உனது ஏவலாட்களாகச் செய்துகொண்டு அவர்களுடைய பதவிகளை அசுரர்களுக்கு அளித்து உதவுவாயாக! கொலை, களவு, காமம், மற்றுமுள்ள வஞ்சகங்கள் இவைகளையெல்லாம் இடைவிடாது புரிவாயாக! அவைகளைச் செய்வதனால் பின்னாளில் உனக்கு யாதொரு தீயபலனும் உண்டாகாது. நீ அவைகளைப் புரியாவிட்டால், உன்னைக் கண்டு எவரும் அஞ்சமாட்டார்கள். உனது ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் இன்றே சென்று அரசனுக்குரிய அதிகாரத்தைச் செலுத்தி எண் திக்குகளும் புகழத் திரும்பிவந்து இவ்வண்டத்திலேயே யிருப்பாயாக!''

சுக்கிராசாரியர் சூரபதுமனுக்கு இவ்வாறு துர்ப்புத்தி கூறி, பிறகு அவ்வண்டங்களின் நிலைமைகளை வித்தாரமாய் எடுத்துரைத்தார்.

## பதினாறுவது அத்தியாயம்

### சூரபதுமன் திக்குவிஜயம்

பிறகு சூரபதுமன் தன் தம்பிமார்களுடனும் சேனைகளுடனும் திக்குவிஜயஞ் செய்யப் புறப்பட்டுக் குபேரனது நகரமாகிய அளகாபுரிக்குச் சென்றான். சூரபதுமன் முதலாயினோரை எதிர்ப்பது தனக்குச் சாத்தியமன்று என்பதை யுணர்ந்த குபேரன் சென்று சூரபதுமனது பாதங்களைப் பணிந்தான். சூரபதுமன், "நீ சுகமாக இருப்பாயாக!'' என்றான். அசுரசேனைகள் அளகாபுரிக்குட் சென்று அங்குள்ள நிதிகளையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டன.

பிறகு சூரபதுமன் ஈசான நகரத்தையடைந்து, அது சிவசாரூப்பிய பதவியையடைந்த ஈசான மூர்த்தி வசிக்

கும் நகரமென வுணர்ந்து, அந்நகரைவிட்டு மகா கோபத் துடன் இந்திரனது நகரமான அமராவதி நகரத்துக்குச் சென்றான். அதுகேட்ட இந்திரன் துயரத்துடன் தன் நகரத்தைவிட்டு விண்ணுலகைத்துக்குச் சென்றான். சூரபது மன் அமராவதி நகரத்தைத் தீக்கிரையாக்கிவிட்டு அக்கினி தேவனுடைய நகரத்துக்குச் சென்றான்.

அது கேட்ட அக்கினி தேவன் மகா கோபங் கொண்டு, அவனை எதிர்த்துப் போர்செய்தான். அக்கினி தேவனது சேனைகள் தோல்வியடையவே, அவன் ஊழிக் காலத்தில் உலகங்களை யெல்லாம் அழிக்கும் பேருருவம் எடுத்துக் கொண்டு அசுரசேனையின் ஊடே பரவியும் அதைச் சூழ்ந்து நின்றும் அதை யழிக்கத் தொடங்கினான். அதுகண்ட தாரகாசுரன் பாசுபதாஸ்திரத்தைப் பூஜித்துத் துதித்துக் கையிலெடுத்தான். அதுகண்ட அக்கினிதேவன் அது உலகமனைத்தையும் தன்னையும் அழித்துவிடுமே யெனப் பயந்து, தனது உருவத்தைச் சுருக்கிக்கொண்டு தனது இருகரங்களையும் சிரமேற் குவித்துத் தாரகனை யணுகி வணங்கி,தன்னை மன்னித்து அந்த அஸ்திரத்தைப் பிரயோகிக்காம லிருக்கும்படி பிரார்த்தித்தான் "நீ நமக்கு ஏவல் செய்வாயாக! இப்போது நீ உன் நகரத்துக்குச் செல்லலாம்!" என்றான் தாரகாசுரன். அசுரசேனைகள் அக்கினி தேவனது நகரத்துக்குள் புகுந்து பொருள் களைக் கொள்ளையடித்தன.

பிறகு சூரபதுமன் இயமனது நகரத்துக்கும் நிருதி யின் நகரத்துக்கும் சென்று, அவர்களால் வணங்கப் பெற்று, தன் சேனைகள் அந்நகரங்களைக் கொள்ளையடித்த பின்னர், வாயு, வருணன் இவர்களுடைய நகரங்களுக்குச் சென்றான். அவர்கள் தங்கள் நகரங்களைவிட்டு ஓடி யொளிந்தனர். சூரபதுமன் அந்நகரங்களிலுள்ள செல்



முருகன் திரு அவதாரம் — சரவணப் பொய்கை

வங்களைக் கொள்ளை யடித்துக்கொண்டு, பிறகு பாதாள லோகத்துக்குச் சென்று அங்குள்ள அசுர அரசர்களிடத் தில் கருணைகாட்டிப் பிறகு ஆதிசேஷன் உலகத்துக்குச் சென்று தன்னை யெதிர்த்த ஆதிசேஷனை வென்று, அவ னிடத்தில் முன்னாளில் பாதுகாப்புக்காகக் கொடுக்கப் பட்ட அமுதத்தைப் பிடுங்கித் தன் தம்பிமார்களுடன் அதனையுண்டு, பிறகு நிலவுலகத்துக்கு மீண்டு திருப் பாற்கடலின் நடுவுக்குச் சென்றான்.

அங்கு பள்ளிகொண்டிருந்த திருமால் விழிப்புற்று, தம்மையும் அசுரர் எதிர்க்கத் துணிந்ததை யுன்னி ஊழித் தீயும் அஞ்சுமாறு கோபித்துச் சீறி, கருடன்மீ தேறிப் பஞ்சாயுதங்களுடனும் சென்று அசுர சேனைகளின்மீது பாணங்களை மழைபோற் சொரிந்தார். அசுர சேனைகள் அழிந்து சிதறின. அப்போது தாரகாசுரன் தன் சேனை களுக்குத் தைரியஞ் சொல்லி அவைகளை மீண்டும் அழைத்து வந்து, திருமாலுடன் கடுமையாகப் போர்செய் தான். கடைசியாக தாரகாசுரன் ஒரு தண்டாயுதத்தை யெடுத்துக்கொண்டு தேரைவிட்டுக் கீழேயிறங்கி நடந்து திருமாலைத் தாக்கச் சென்றான். அப்போது திருமால் தமது சக்கராயுதத்தைப் பிரயோகித்தார். அச் சக்கராயுதம் விரைந்து சென்று, தாரகன் கழுத்தை யடைந்ததும, சிவ பெருமானது திருவருட் பெருமையினால் செம்பொன்னா லாகிய ஆரமாக மாறி அவன் கழுத்தில் ஆபரணமாக விளங்கித் தவத்தின் பெருமையை உலகத்துக் கெல்லாம் உணர்த்தி நின்றது. அதுகண்ட திருமால் ஆச்சரியமுற் றுத் தாரகாசுரனை நோக்கி, "அப்பா! போரில் உனக்கு நிகரானவர் தக்ஷன் வேள்வியைத் தகர்த்த வீரபத்திரக் கடவுள் ஒருவர்தாம்! உங்களை வெல்ல வல்லவர் எவரு

யில்லை. நீங்கள் எனக்கு உறவினர்கள்!" என்று சொல்லி ஆசிமொழிகளைக் கூறிச் சென்றார்.

பிறகு சூரபதுமன் நிலவுலக முழுவதும் சுற்றிப் பார்த்து வந்து, அதன் பிறகு சுவர்க்கத்துக்குச் சென்றான். அதுகேட்ட இந்திரன் தன்னைச் சூரபதுமன் சிறையி லடைப்பானென்று பயந்து, இந்திராணியுடன் குயிலுருவ மெடுத்துக்கொண்டு ஆகாயத்திற் பறந்து சென்றான். அசுரர்கள் தேவேந்திரனை எங்கும் காணாதவராய்ச் சினங்கொண்டு மற்றந் தேவர்களைப் பிடித்துப் பல விதமாய்த் துன்புறுத்தி, அவர்களைக் கட்டிச் சூரபதுமன் முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். தேவர்கள் சூரபதுமனை வணங்கி, "ஐயனே! இன்று முதல் என்றென்றைக்கும் தாங்களே எங்களுக்குற்ற கடவுள். எங்களை இரக்ஷிக்கிற அரசனும் தாங்கள்தாம். ஆதலின் நாங்கள் அனைவரும் தங்கள் ஏவலை முறைப்படி செய்கிறோம்" என்று கூறினார்கள். சூரபதுமன், "நன்று. நீங்கள் நமது ஏவலைச் செய்து வாழுங்கள்!" என்று கூறி, அவர்கள் கட்டுகளை அவிழ்த்துவிடும்படி கட்டளையிட்டான்.

பிறகு சூரபதுமன் அமராருலகத்திலுள்ள செல்வங்களையெல்லாம் கொள்ளை யடித்துக்கொண்டு, அங்கிருந்து புறப்பட்டுப் பிரமலோகத்துக்குச் சென்று, பிரமதேவரால் ஆசீர்வதிக்கப்பெற்றுப் பிறகு சிவலோகத்துக்குச் சென்று எந்தை திருமுன்னர் சென்று அவரது பாதமலர்களை வணங்கி விடைபெற்று அவ்விடம்விட் டகன்று, ஏனைய அண்டங்களுக்கும் சென்று மேற்கூறியவாறே திக்கு விஜயஞ்செய்து வெற்றிபெற்று ஆங்காங்குள்ள செல்வங்களையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு, ஆங்காங்கு அநேக அசுரர்களைத் தனது அரசாட்சியை நடத்தி வரும்படி கட்டளையிட்டு, மீண்டும் நிலவுலகத்தை யடைந்தான்

## பதினேழாவது அத்தியாயம்

### சூரபதுமன் கொடுங்கோன்மை

சூரபதுமன் தேவத்தச்சனை விசுவகர்மாவை யழைத்துத் தான் வசிக்கத்தக்க அலங்காரமான நகரமொன்றை விரைவில் நிருமிக்கும்படி கட்டளையிட்டான். உடனே அவன் தென்றிசைக் கடலில் எண்பதினாயிரம் யோஜனை விஸ்தீரணமுள்ள ஒரு அற்புத நகரத்தை மனத்தினால் சிருஷ்டித்து, அந்நகரத்துக்கு வீரமகேந்திரம் என்று பெயரிட்டான். பிறகு அவன் வீரமகேந்திரத்துக்குச் சமமான விஸ்தீரணமுள்ள நகரமொன்றை வடகடலின் நடுவில் சிங்கமுகாசுரனுக்கென்று சிருஷ்டித்து அதற்கு ஆசுரம் என்று பெயரிட்டான். பிறகு அவன் பல கடல்களிலும் பல விடங்களில் அசுரசேனைகள் இருப்பதற்கு அநேக பெரிய நகரங்களை யுண்டாக்கி, மேருமலையின் தென்புறத்தில் சம்புத்தீவில் ஏமகூட பருவதத்தின் அருகில் மாயாபுரி யென்னும் அழகிய நகரமொன்றைத் தாரகாசுரனுக்காகச் சிருஷ்டித்து, நகரங்கள் சிருஷ்டிக்கப்பட்ட சங்கதியைச் சூரபதுமனிடம் தெரிவித்தான்.

உடனே சூரபதுமன் தன் சேனைகளுடன் புறப்பட்டுச் சென்று வீரமகேந்திரபுரிக்குள் பிரவேசித்துத் தன் அழகிய அரண்மனையை யடைந்தான். திருமாலின் கட்டளைப்படி அவருடன் புறப்பட்டு வீரமகேந்திரத்தை யடைந்த பிரமதேவர், இந்திரன் முதலிய தேவர்கள் சூரபதுமனுக்கு மகுடாபிஷேகஞ் செய்ய நிச்சயித்து, வேண்டிய உபகரணங்களைச் சேகரித்து, சூரபதுமனுக்கு கடல் நீரினால் அபிஷேகஞ் செய்து, அவனை இரத்தினங்களிழைத்த பொற் சிங்காதனத்தில் அமர்த்தினார்கள். அப்போது பிரமதேவர் திருமால் சூட்டிக்கொள்ளத் தக்க

மகுடமொன்றை அவனுக்குச் சூட்டினர். திருமாலும் பிரமதேவரும் அருகிலுள்ள ஆசனங்களில் அமர்ந்தனர். இந்திரன் முதலான தேவர்கள் படிகமேந்தியும், அடப்பை யேந்தியும், சாமரை வீசியும், குடை பிடித்தும், மற்றும் பலவித ஊழியங்களைச் செய்தும் நின்றனர். அப்போது சூரபதுமன் திருமால் முதலியோரை தான் நினைத்த மாத்திரத்தில் தன்னிடம் வந்துசேரும்படி கட்டளையிட்டான். அவர்கள் அவ்வாறே செய்வதாகச் சொன்னார்கள்

அவ்வாறு தேவர்களை ஏவல்கொண்டு சிறப்பாய் அரசு புரிந்துவரும் நாளில் சூரபதுமன் தேவத்தச்சனாகிய விசுவகர்மன் மகள் பதுமகோமளையை வேத விதிப்படி மணந்துகொண்டு, பிறகு தேவர்கள், அசுரர்கள் முதலாயினோர் பெண்கள் பலரையும கலியாணஞ் செய்து கொண்டு, சிங்க முகாசுரனுக்கு இயமன் புதல்வியான விபுதை யென்பவளையும், தாரகனுக்கு நிருதியின் புத்திரி யான சவுரி யென்பவளையும் மணமபுரிவித்து, பிறகு தம்பி மார்களை அவரவர்கள் நகரங்களுக்கு அனுப்பிவிட்டு, துர்க் குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக் கிரபாலன், மகிடன் முதலாயினோரை அமைச்சராக வைத்துக்கொண்டு அரசு செலுத்திவந்தான்.

ஒருநாள் சூரபதுமன் தன் ஏவல்களைக் குறிப்பா லுணர்ந்து சித்தமாகச் செய்துவந்த இந்திராதி தேவர்களை யும் முனிவர்களையும் கடலிலுள்ள மீன்களைத் தினந்தோ றும் ஏராளமாய்ப் பிடித்துவருமபடி கட்டளையிட்டான். தேவர்களும், முனிவர்களும் அவ் இழிதொழிலைத் தாங் கள் செய்யும்படி நேர்ந்ததை யுன்னி மனம் வருந்தி, சமுத்திர ராஜனாகிய வருணனைக் கடலிலுள்ள மீன்களை அலையினால் மோதிக் கரையிற் சேர்க்கும்படி வேண்டி, அவன் அவ்வாறு கரையில் வீசிய மீன்களை மூட்டை

யாகக் கட்டித் தலைமீதேற்றிச் சுமந்துகொண்டு தினந் தோறும் சூரபதுமன் அரண்மனைக்கு அசுரர்கள் கண்டு நகைக்கச் சென்று குற்றேவல் செய்துவந்தனர்.

அக்காலத்தில் சூரபதுமனுக்குத் தொட்டிலிற் கிடக்கும் பருவத்திலேயே சூரியனைக் கோபித்துப் பிடித்து வந்து தொட்டிற்காலிற் கட்டிய பானுகோபன், அக்கினி முகாசுரன், இரணியன், வஜ்ரவாகு என்னும் புதல்வர்கள் பிறந்தார்கள். சிங்கமுகனுக்கு அதிசூரன் என்ற புதல்வனும், மற்றும் நூறு பிள்ளைகளும் பிறந்தார்கள். தாரகனுக்கு அவன் பண்டுசெய்த சிறந்த தவத்தின் பயனாக அசுரேசன் என்ற ஒரு சற்புத்திரன் பிறந்தான்.

சூரபதுமனது தங்கையான அஜமுகி (ஆட்டு முகமுடையவள்) என்பவள் தூர்வாசமாமுனிவரை யடைந்து அவரிடம் அம்முனிவரைப் போல் ஒரு பிள்ளையையும் தன்னைப்போல் ஆட்டுமுகத்தையுடைய ஒரு பிள்ளையையும் பெற்று, அவர்களுக்கு முறையே வில்வலன் என்றும் வாதாபி யென்றும் பெயரிட்டாள். அப்புத்திரர்கள் தங்கள் தந்தையாகிய துருவாசமாமுனிவரை அவரது தவத்தை யெல்லாம் தங்களுக்குத் தரும்படி கேட்டு, அவர் அதற்கு இசையாததால் அவரைக் கொல்லுவதற்காக அவர்மீது பாய்ந்தார்கள். அப்போது தூர்வாசர் வெகுண்டு, "நீங்கள் குற்றமற்ற முனிவர்களுக்கே நாள்தோறும் இடையூறுகள் செய்து, கடைசியில் அகத்தியமா முனிவரால் அழியுங்கள்!" என்று அவர்களைச் சபித்து, மாயையினால் தம் உருவத்தை மறைத்துக்கொண்டு அவ்விடம் விட்டகன்றார்.

வில்வலன், வாதாபி இருவரும் பலகாலம் பிரமதேவரை நோக்கிக் கொடிய தவம் புரிந்தனர். பிரமதேவர் பிரத்தியக்ஷமாகாதபடியால், வில்வலன் தன் தம்பியாகிய வாதாபி

யை வாளினால் வெட்டிக் கொன்று அவன் மாம்சத்தை யும் இரத்தத்தையும் அவிசும் நெய்யுமாக உபயோகித்துக் கொடிய யாகஞ்செய்தான். பிரமதேவர் அவன் முன்னே தோன்றி அவன் கருதிய வரத்தைச் சொல்லும்படி கட்டளையிட, அவன் முதலில் தன் சகோதரனை வாதாபி மீண்டும் உயிர்பெற் றெழவேண்டுமென்று கேட்டு, பிரம தேவர் அவ்வரத்தை யளித்தபின்னர், தன் மனத்தில் ஒரு கெட்ட சூழ்ச்சியைச் செய்து, தன் தம்பியான வாதாபி பின்னுளில் தேகம வெட்டப்பட்டு உயிரிழந்தாலும், தான் அன்புடன் அவனை 'உயிர்பெற் றெழுவாயாக!' என்று கூறியவுடனே அவன் பழைய வுருவத்துடன் தன்முன் வரவேண்டுமெனப் பிரார்த்தித்தான். அப்போது பிரம தேவர், "அவ்வாறே பலகாலுமாருக!" என்று கூறி மறைந்தருளினர்.

பிறகு வில்வலன், வாதாபி இருவரும் சூரபதும னிடம் சென்று அவனிடம சில காலமிருந்து பிறகு குடகுதேசத்தில் நான்கு வழிகள் கூடும் இடுக்கான இடத் தில் வளப்பமிக்க காட்டில் ஒரு ஆசிரமத்தைக் கட்டிக் கொண்டு, வில்வலன் தவமுனிவன் போலவும், வாதாபி பொன்மயமான ஆட்டுக்கிடாவாகவும வேடந் தரித்துக் கொண்டார்கள். தவமுனி வேடம் தரித்த வில்வலன் அங்கு வரும் முனிவர்களை வணங்கி அன்புடன் தன் ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று, பல போஜனபதார்த் தங்களையும் தன் தம்பியான ஆட்டை வெட்டிக் கொன்று சமைத்த கறியையும் அவர்களுக்கு அளித்து, அவர்கள் உண்டபின் தன் தம்பியை அன்புடன் அழைப்பான். வாதாபி முனிவர்கள் வயிற்றை கிழித்துக்கொண்டு வெளியே வருவான். பிறகு இருவரும் இறந்துபோன முனிவர்களை உண்பார்கள்.

இவ்வாறு அசுரர்களானவர் தேவர்கள், முனிவர்கள் முதலாயினோரைத் துன்புறுத்தியும் அவர்கள் சிறிதும நீங்குறா வண்ணம் சூரபதுமன் அரசு செலுத்தி • வந் தான் ஒரு நாள் சூரபதுமன் தன் சேனாதிபதிகளில் ஒருவனை யழைத்து இந்திரனை உடனே பிடித்துக்கொண்டு வநது தன் முன்னே நிறுத்தும்படி கட்டளையிட்டுப் பிறகு ஒன்பதுகோடி அசுரஸ்திரீகளை யழைத்து இந்தி ராணியைய பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட் டான். அவாகள் வருகையைப்பற்றிக் கேட்ட இந்திரன அவாகள் நோக்கம் இன்னதென் றுணர்ந்து இந்திரா ணியை அழைதது்க்கொண்டு மாயையினால் மறைந்து பூலோகத்துக்குச் சென்றான். அசுரர்களும, அசுர ஸ்திரீகளும அமராவதி நகர முழுவதும் தேடியும் இந்திரனையும் இநதிராணியையும் காணமல், தேவர்களைப் பிடித்து வருத்திக்கேட்டும் அவர்கள் சென்றவிடத்தை அறியமுடியாமல், சூரபதுமனிடம் சென்று நடநததைத் தெரிவித்தார்கள் சூரபதுமன் கோபித்துத் தனது தூது வர்களில் பலரை இந்திரனும் இந்திராணியும இருந்த விடத்தைத தேடி யறிநதுவரும்படி கட்டளையிட்டான்.

வைகுண்டத்துக்குச் சென்ற உபேந்திரனைக் காணப் போன ஜயந்தன் வைகுண்டத்தி லிருந்தவாறே பொன னுலகத்தின் நிலைமையை யறிந்துகொண்டு, தன் தந்தை யாகிய இந்திரன் இல்லாத காலத்தில் பொன்னுலகத்தைக் காப்பது தன் கடனே யாகுமெனக் கருதி, பொன்னுலகத் துக்குச் சென்று தேவர்களைச் சிறிது தேற்றினான்.

அசுரர்களுக்கு அஞ்சிப் பூமிக்குச் சென்ற இந்திரன் இந்திராணியுடன் சீகாழிப் பதியை யடைந்து, ஆங்கு ஒரு நந்தவனத்தை யுண்டாக்கி, அதில் புஷ்பித்த மலர் களைப் பறித்துச் சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களை

அருச்சித்து வந்தான். அப்போது சூரபதுமனால் அனுப்பப்பட்ட தூதர்கள் தன்னைத் தேடிக்கொண்டு பூமிக்கு வந்த சங்கதி யறிந்து இந்திரன் இந்திராணியுடன் மூங்கிலுருவங்கொண்டு தவம் புரிந்துவந்தான். சூரபதுமனது தூதர்கள் அவர்களைக் காணாமல் பூவுலகத்தைவிட்டு அகன்றனர்.

அசுரர்களது கொடுங்கோன்மையினால் மழை பெய்யாமற் போகவே, இந்திரனது நந்தவனத்திலுள்ள பூச்செடிகள் தீப்பட்டாற்போல வாடின. அதுகண்ட இந்திரன் கவலையுற்றுச் சிவபெருமானைத் துதித்தான். "இந்திரனே! இச்சிறந்த தலத்தில் ஒரு புனித நதி வந்து சேரும!" என்று ஓர் அசரீரிவாக்குக் கிளம்பி இந்திரன கவலையை யொழித்தது.

## பதினெட்டாவது அத்தியாயம்

### விந்தமலையை அகத்தியர் அடக்கியது

உலகத்திலுள்ளவர்களுடைய நன்மையைக் கருதியே சதாகாலமும உலகமெங்கும் சஞ்சரிக்கும் நாரதமாமுனிவர் ஒருநாள் விந்தமலையினிடம் சென்று, தெய்வ வடிவம் எடுத்துக்கொண்ட அம்மலையினால் வணங்கப்பெற்று, மேருமலையானது தனக்கு இணையானவர் எவருமில்லையெனச் செருக்குற்றிருந்ததாகச் சொல்லி, அது அப்படி எண்ணியதற்குரிய காரணங்களையும எடுத்துக்கூறினார். அதுகேட்ட விந்தமலை மிகுந்த வீராப்புடன் பெருமூச்செறிந்து நகைத்து, வாயுவினால் தன் குவடுகள் பல அப்பால் எறியப்பெற்றும், ஒரு யானையின் கொம்பினால் பாரதம எழுதப்பட்ட ஏடாகியும, பெண்ணைப்போல் வணங்கியில்லாக வளைந்தும் தான் வலிமை யற்றவன் என்பதை யாவர்க்கும் விளக்கி நிற்கும் இமயமலை செருக்குற்றது

நகைக்கத் தக்கதென்றும், அதன் அகங்காரத்தை ஒரு நொடியில் குலைத்து விடுவதாகவும் கூறி, தன் தெய்வ வுருவத்தை விட்டு, ஒரு மாயவித்தையினால் உயர்ந்து வளர்ந்து பிரமலோகத்தை யளாவி நின்றது.

விந்தமலை உயர்ந்து ஆகாய வீதியை அடைக்கவே, நவக்கிரகங்கள் தங்கள் கதியிற் செல்ல மார்க்கமில்லாதது கண்டு, சற்று ஆலோசித்து, விந்தமலைக்கும் இமயமலைக் கும நாரதமாமுனிவரால் ஏற்பட்ட மனஸ்தாபமே அதற் குக் காரணமென் றுணர்ந்து, குறுமுனிவரான அகத்திய மாமுனிவர் அவ்விடம் வந்தால்தான் விந்தமலை ஒடுங்கு மெனத் தெளிந்து, அம்முனிவரைத் தோத்திரஞ் செய்து தங்களைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டார்கள். அகத்திய மாமுனிவர் அதனையுணர்ந்து, விந்தமலையின் வலிமையை யழித்து ஆகாய வழியைப் பண்டுபோல் செய்து அண்டர்களுடைய குறையைத் தீர்க்கவேண்டு மென்று நினைத்து, கண்களினின்றும ஆனந்த பாஷ்பம் சொரியவும், கரங்களை தொழவும், மனம் எலும்புடன் உருக வும், அங்கமெல்லாம் உரோமஞ் சிலிர்ப்பவும சிவபெரு மானைத் தியானித்துப் புகழ்ந்தார்.

உடனே சிவபெருமான் அவர் முன்னே தோன்றி அவர் கருத்துக்கிசைய விந்தமலையை அழிக்கும் சக்தியை அவருக்கு அளித்து, தென்றிசையிலுள்ள பொதிய மலை யில் வசிக்கும்படி அவரைக் கட்டளையிட்டார். பிறகு அம் முனிவர் எம்பெருமான் பூஜைக்கு இடையூறு உண்டாகாம லிருக்கும்பொருட்டு ஒரு புனித தீர்த்தத் தைத் தனக்கு உதவியருளவேண்டுமெனப் பிரார்த்தித்த தற்கு இயைந்து, சிவபெருமான் திருக்கைலாயத்திலுள்ள சப்தநதிகளில் மிகவும் தூய்மை பொருந்தியதான காவிரி யை வரவழைத்து அகத்தியமாமுனிவருடன் தென்திசைக்

குச் செல்லும்படி கட்டளையிட்டருளினார். அப்போது காவிரி நதியானது எம்பெருமானை நோக்கி, "இம் முனிவரை விட்டு நான் பிரியுங்காலம் யாது?" என்று கேட்க, சிவபெருமான், "இம்முனிவன் எந்தக் காலத்தில் உன்னை நோக்கிப் போவென்று கூறுகிறானோ அப்பொழுது இவனை விட்டு விலகி நிலவுலகத்திற்சென்று வசிப்பாயாக!" என்று கூறியருளினார். பிறகு சிவபெருமான் பணித்தபடி, காவிரி நதியானது அகத்திய மாமுனிவரது கமண்டலத்துக்குட் செல்ல, சிவபெருமான் அகத்திய மாமுனிவருக்குத் தென்றிசைக்குப் போக விடையளித்து விட்டு மறைந்தருளினார்.

அகத்திய மாமுனிவர் புறப்பட்டுத் தென்றிசையை நோக்கிச் செல்லுகையில், வழியில் சூரபதுமன் தம்பியாகிய தாரகாசுரனது நகரமான மாயாபுரியை யணுக, அங்கு வசித்துவந்த கிரௌஞ்சம் என்னும் அசுரன் அவர் வரவைக்கண்டு, மாயையில் தனக்குள்ள திறத்தினால் விந்த மலையைப் போல் பல சிகரங்களையுடைய ஒரு மலையின் உருவத்தை யெடுத்துக்கொண்டு, தனக்குட் செல்ல ஒரு வழியுடன் நின்றான். அகத்தியமாமுனிவர் அவ் வழியே சென்று அம்மலையைக் கடக்கலாமென்று எண்ணி, அதனுள்ளே நுழைந்து நடந்தார். அப்போது அவ்வழியும் மறைந்து, திரும்பி வரமுடியாமல் முன்பு போன வழியும் மறைந்துபோய், சுழற்காற்றுடன் பெரு மழை பொழிந்தது. அது கண்ட அகத்திய மாமுனிவர் சிறிது ஆலோசித்து, அது ஒரு அசுரனது மாயையென வுணர்ந்து, கோபத்துடன் சிரித்து, "நல்லுணர்வில்லாத கொடியோனே! நீ உனது பழைய அசுரவடிவம் நீங்கப் பெற்று பெரிய மலையுருவத்துடன் இங்கேயே நின்று, அசுரர்களுக்கெல்லாம் வாசஸ்தானமாகி, தேவர்களுக்கும

முனிவர்களுக்கும் பலகாலம் கொடுமைக ளிழைத்துவரக் கடவாய்! இறுதியில் எம்பெருமானை எமக்களித்தருளும் சுப்ரமண்யக் கடவுளது கைவேலினால் அழிவடையக் கடவாய்!" என்று சாபங்கொடுத்து, மந்திரத்தை யுச்சரித்து தமது கமண்டலத்திலுள்ள காவிரி நீரை அம்மலை மீது தெளித்து அதன் மாயையை அகற்றி அவ்விடம் விட்டுத் தென்திசையை நோக்கிச் சென்றார்.

பிறகு அகத்தியமாமுனிவர் விந்தமலையை யடைந்து, தமக்கு வழிவிடும்படி அம்மலையைக் கேட்க, அம்மலை அவரை நோக்கி, "திருவிக்கிரமாவதாரங்கொண்ட திருமாலைப்போல் உயர்ந்திருக்கும் நான் குறியவனாகிய உனக்கோ அஞ்சி வழிவிடுவேன்? ஒரு நாளுமில்லை. ஆகையினால் நீ வந்த வழியே திரும்பிப்போவாயாக!" என்று கர்வத்துடன் கூறிற்று. அதுகேட்ட அகத்தியமாமுனிவர் சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் தியானித்து, முன்னாளில் இந்திரனது வேண்டுகோளுக்கிணங்கி கடலையடக்க நீட்டிய தமது கரத்தினை நீட்டி, விந்தமலையின் உச்சியில் தமது உள்ளங்கையை வைத்து வலிமையுடன் ஊன்ற, அம்மலையானது விரைவாகத் தாழ்ந்து பாதாளத்துக்குச் சென்றது. அப்போது விந்தமலையானது பயந்து குறுமுனிவரை நோக்கி, "வள்ளலே! தமியேன் செய்த குற்றத்தை மனத்தில் வைக்காமல், யான் எப்போது மேலெழுவது என்று உரைத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தது. அகத்திய மாமுனிவர், "யாம் போய் இவ்வழியே திரும்புவோமாயின், நீ மேலே எழுவாய!" என்று கூறிவிட்டுத் தென்றிசையை நோக்கிச் சென்றார்.

## பத்தோன்பதாவது அத்தியாயம்

### காவிரி நதியின் உற்பத்தி

அகத்திய மாமுனிவர் மலைகள் நெருங்கிய குடகு தேசத்தையடைந்து, வில்வலன், வாதாபி என்னும் அசுரர்களது இருப்பிடத்தை யணுக, வில்வலன் வழக்கம்போல் தவமுனிவன் வேடத்துடன் அவரை எதிர்கொண்டு சென்று, அவரைத் தனது ஆசிரமத்துக்கு அழைத்துப் போய், தன் தமபியை வெட்டிச் சமைத்த ஆட்டுக்கறியுடன் பலவகைப் போஜன பதார்த்தங்களை யளித்து, அவர் அவைகளை யுண்டபின் தன் தம்பியை அன்புடன் அழைத்தான். உடனே அகத்திய மாமுனிவர் வயிற்றினுள் ஆட்டினுருவத்தையடைந்த வாதாபி, "அண்ணா! ஆலோசனையின்றி முன்பு கடல் நீரைக் குடித்ததுபோல் என் மாமிசத்தையும் உண்ட இக்கொடியவனுடைய உயிரை வாங்கி இவனது சிறிய வயிற்றைக் கிழித்துக் கொண்டு இதோ வருகிறேன்" என்று சொல்லிக் கர்ஜ்ஜித்தான். அப்போது அகத்தியமாமுனிவர் அவ்வசுரர்கள் செய்த மாயையை யுணர்ந்து சினங் கொண்டு, "மாமிசக் கறியாக நான் உண்ட வாதாபியானவன் நான் உண்டபொழுது உயிரிழந்தவனாயிருந்த வண்ணமே அழியக்கடவன்!" என்று சொல்லித் தமது வயிற்றைத் தமது கரத்தினால் ஒரு முறை தடவ, வாதாபி அழிந்தான். அதையறிந்த வில்வலன் உக்கிரமான கோபங் கொண்டு ஒரு தண்டாயுதத்தைக் கையிலேந்தி அம்முனிவர்மேற் பாய, அவர் ஒரு தருப்பைப் புல்லைக் கையிலெடுத்து மந்திரத்தை யுச்சரித்து அதைச் சிவாஸ்திரமாகச் செய்து அவன்மீது பிரயோகிக்க, அவனும் இறந்தான்.

பிறகு அகத்தியமாமுனிவர் அவ்விடம்விட்டுப் புறப்

பட்டுக் கொங்கு தேசத்தை நோக்கிச் சென்றார். அப்போது வில்வலன், வாதாபி இருவர்களும் பைசாச உருவங்களுடன் தம்மைக் கொல்லவந்ததைக் கண்டு, அகத்திய மாமுனிவர் அவர்கள் துருவாச மாமுனிவருடைய புத்திரர்களாதலால் அவர்களைக் கொன்ற தம்மைப் பிரும்மஹத்தி சூழ்ந்ததெனவுணர்ந்து, அது நீங்குவதற்காகக் கொங்கு தேசத்துக் கருகில ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து, நெடுங்காலம் தமது கமண்டலத்திலுள்ள புனித நீரினால் அபிஷேகஞ்செய்து அருச்சனை செய்து எம்பெருமானைத் துதித்துப் பிரார்த்தித்தார்.

அப்படி அவர் ஆராதனை செய்து வந்தகாலத்தில், நாரதமாமுனிவரால் தூண்டப்பட்ட இந்திரன் விநாயகப் பெருமானை நோக்கித் தவம்புரிந்தான். விநாயகப்பெருமான, இந்திரன் முன்னே தோன்றி அவன் இச்சையை யறிந்துகொண்டு, அவ்விச்சையைப் பூர்த்தி செய்வதற்காக அகத்தியமாமுனிவர் அப்படிச் சிவபெருமானை ஆராதித்துவந்த விடத்துக்குச் சென்று, காகவடிவம் எடுத்துக் கொண்டு, அகத்தியமாமுனிவருடைய கமண்டலத்தின் மீது உட்கார்ந்தார். சிவபெருமான் காவிரிநதிக்கு உரைத்த மொழிகளை யறிந்த விநாயகக் கடவுளின் சூழ்ச்சியை யறியாத அகத்தியமாமுனிவர் காகத்தை நோக்கித் தமது கரத்தைத் தூக்கிப் போவென்று அதை ஓட்டினார். உடனே விநாயகமூர்த்தி கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டு, "காவிரி நதியே! முன்னம் சிவபெருமான் அருளிச்செய்தபடி அகத்தியர் தமது கரத்தைத் தூக்கி உன்னை நோக்கிப் போவென்று உரைத்தபடியால், நீ இனிமேல் பூமியின் மீது செல்வாயாக!" என்று கூறினார். உடனே காவிரி நதி பெருகி விரைவாய்ப் பாய்ந்துசென்றது.

அப்போது விநாயகக் கடவுள் காகவடிவத்தை விட்டு

ஒரு பிராமணச் சிறுவன் வடிவத்தை எடுத்துக்கொண்டு, அவ்விடம்விட் டகன்றார். அது கண்ட அகத்திய மாமுனி வர் கோபத்துடன் அச்சிறுவன் தலையிற் குட்டத் தமது இருகரங்களையும் முஷ்டியாக மடித்துக்கொண்டு அவனைத் துரத்திச் செல்ல, விநாயகப் பெருமான் அவரை வெகு நேரம் அலைக்கழித்துப் பிறகு தமது திருவுருவத்தைக் காட்டியருளினார். அகத்திய மாமுனிவர் அப்பெருமானை வணங்கித் தாம் அறியாமையினால் அப்பெருமானைக் குட்டத் துரத்தியதற்குத் தம்மை மன்னித்தருளும்படி பிரார்த்திக்க, அப்பெருமான் அவரைத் தேற்றி, அவரது கமண்டலத்தைத் திரும்பவும் நிரப்பிக்கொடுத்து, அம் முனிவர் வேண்டிக்கொண்டபடி அம்முனிவரைப்போல் தமது சந்நிதானத்தில் நின்று இருகரங்களையும் மடக்கி முஷ்டிகளால் நெற்றியில் குட்டிக்கொள்பவரது குறை களைத்தீர்த்துத் தாயைப்போல் பரிந்து அருள்புரிவதாகத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

பிறகு அகத்தியமாமுனிவர் தென்றிசையை நோக்கி நடந்து பொதியமலையை யடைந்து சிவபெருமானது பாதத் தாமரைகளைத் தியானித்து மெய்த்தவம் இயற்றி வந்தார்.

அகத்தியமா முனிவரது கமண்டலத்திலிருந்து கிளம்பிய காவிரிநதியானது கிழக்கு முகமாக விரைந்து சென்று சீகாழிப்பதியில் இந்திரன் அமைத்த நந்தவனத் தைச் செழிப்புறச் செய்தது. அது கண்ட இந்திரன் வியப்புற்று விநாயகக் கடவுளது அருளைப் புகழ்ந்து, நாள் தோறும் விடியுமுன் எழுந்து மலர்களைப் பறித்துக் கொண்டுவந்து சிவபெருமானது பாதமலர்களை முறைப்படி அருச்சித்து ஒப்பற்ற தவத்தைச் செய்துவந்தான்.



சிவபெருமானுக்குக்
குமாரக்கடவுள் ஞானோபதேசஞ் செய்தது

## இருபதாவது அத்தியாயம்

### அஜமுகிக்கு நேர்ந்த அவகேடு

அக்காலத்தில், சூரபதுமனுக்குக் குற்றேவல் செய்து இளைத்துப்போன சில தேவர்கள் மனந்தளர்ந்து, சீகாழிப்பதியிலுள்ள தங்கள் அரசனாகிய இந்திரனிடம் சென்று, "எமது இறைவனே! அவுணர்களுக்கு அடங்கித் தொண்டுசெய்யும்படி எங்களை விட்டுவிட்டுத் தேவரீர் இவ்விடம் வந்திருப்பது நியாயமா?" என்று கேட்க, இந்திரன், "தேவர்காள்! கொடிய சூரபத்மன் என்னை இழிதொழில்களைச் செய்யச் சொன்னதுடன் திருப்தியடையாமல், என்னை அநியாயமாகச் சிறையிலிட்டு இந்திராணியை அபகரித்துக்கொள்ள வெண்ணித் தன் சேனைகளைப் பொன்னுலகத்துக்கு அனுப்பினான். அவனுடைய கெட்ட எண்ணத்தை யறிந்துகொண்ட நான், அவனுடைய சிறையில் நான் அடைபட்டால் மீண்டு வெளியே வருவது அசாத்தியமாதலால் நாம் அசுரர்களை யழித்து வெற்றி பெறுவதற்குச் சர்வேசுவரரான சிவபெருமானை நோக்கித் தவமியற்ற மார்க்கமில்லாமற் போகுமேயென்று சிந்தித்து, உங்களைவிட்டு இங்குவந்து மறைந்திருந்து எம்பெருமானை ஆராதித்துத் தவம் இயற்றிவந்தேன். இனி, நாம் திருக்கைலாயத்துக்குச் சென்று எம்பெருமானிடம் நமது குறைகளைக் கூறி நம்மை உய்விக்கும்படி பிரார்த்திப்போம், வாருங்கள்!" என்றான். அது கேட்ட தேவர்கள் பரமானந்தமடைந்து இந்திரனைப் புகழ்ந்தார்கள்.

உடனே இந்திரன் தேவர்களை ஆங்கே நிறுத்தி, இந்திராணியினிடம் சென்று, தான் தேவர்களுடன் திருக்கைலாயத்துக்குச் செல்வதாக நிச்சயித்ததை அவளுக்குத் தெரிவித்து, காளகண்டராகிய சிவபெருமானுடைய

புதலவரும், ஹரிஹர புததிரா, மகாசாத்தா எனனும பல திருநாமங்களை உடையவரும, நிகரறற சூரருமான ஐய னாரை அவளுக்குத துணையாக வைததுவிட்டுப போவ தாகவும், அவளுக்குச சிறிதும பயம் வேண்டாமென்றும் சொலலி, ஐயனாரைத தியானிததான். உடனே ஐயனா மேகத்தை யொதத கொடிய யானையின்மீது பூரணை, புட் கலை யெனனும இருதேவிமாாகளுடன பல பூதஙகள தம மைச சூழ்நதுவர இநதிரனமுன் தோன்றினா. உடனே இநதிரன் அவரை வணஙகி, தான் திருககைலாயததுக்குச சென்று சிவபெருமானைத தரிசிததுவிட்டுத திரும்பும வரையில் இநதிராணியை அசுராகள கையிலகபபடாமல காப்பாற்றவேண்டு மெனறு பிராாததிததான. ஐயனா, "இநதிரனே! நாம் உன் மனைவியைக் காபபோம. நீ கவலையின்றிச செல்!" என்று கூறி மறைநதருளினா

பிறகு இநதிரன தேவாகளுடன் திருக்கைலாயத்துக குச சென்று, எம்பெருமான் திருக்கோவிலின் வாயிலில காவலாயிருநத நநதி யெம்பெருமானிடம் தாஙகள சிவ பெருமானைத தரிசிக்கவநத காரணததைத தெரிவிக்க, அவா எம்பெருமான் சனகர் முதலிய முனிவாகளுக்கு ஞானோபதேசம் செய்துகொண டிருநததனால், எவரும திருககோயிலுககுள் செலல முடியாதென்று தெரிவித் தாா. அதுகேட்டு இநதிரன முதலிய தேவாகள் அவவாயி லின் ஒரு புறததே காததிருநதனர்.

அப்படி யிருககையில சூரபதுமன தஙகையான அஜமுகி தன தோழி துன்முகியுடன பூவுலகததில உலவி வருகையில சீகாழிப்பதியை யடைநது, அங்கு இநதிர னது நந்தவனத்தின் மகிமையைக் கண்டு, அது இநதிர னால் உண்டாக்கப்பட் டிருக்கலாமென்றும அங்கு இநதி ரன ஒளிநது வசிததுவரலா மென்றும் சநதேகிததது, அதற்

குள் நுழைந்து பார்க்கையில் இந்திராணி அங்கு தவஞ் செய்துகொண் டிருந்ததைக் கண்டு, அவளை யணுகி, சூர பதுமனுக்குப் பட்டமகிஷியாக விருக்கும் பாக்கியம் அவளுக்குக் கிடைக்குமென்று சொல்லி, அவளைத் தன் னுடன் வரும்படி அழைத்தாள். இந்திராணி கற்புடை மையைப் பற்றிப் பல வுண்மைகளை எடுத்துரைத்தும், அஜமுகி அவைகளை இலக்ஷியஞ் செய்யாமல், அவள் கரத்தைப்பற்றி பலாத்காரமாக இழுத்தாள்.

இந்திராணி நடுங்கி ஐயனாரைத் தியானித்து, "தேவர்களுக்குள் முதல்வரே ஓலம்! வாரணத்திறைவரே ஓலம்!" என்றுகூவ, ஐயனாரால் இந்திராணிக்குக் காவலாக வைக்கப்பட்டிருந்த சிறந்த வீரரான வீரமாகாளர் கரத்தில் வாளேந்தி இடியோசைபோல ஆரவாரித்துக்கொண்டு வந்து, அஜமுகியை நில் என்று சொல்லித் தடுத்து, இந்திராணியை விட்டுச் செல்லும்படி சொன்னார். அஜ முகி அவர் இந்திரனது ஏவலாளென எண்ணி அவரைப் பயமுறுத்த முயன்று, அவர் தன்னைச் சிறிதும் மதிக்காத தனால் கோபமுற்று, அவர்மீது தன் சூலத்தையும், பிறகு தோழியின் சூலத்தையும் பிறகு ஒரு மலையையும் வீசி எறிந்தாள். வீரமாகாளர் அவைகளைத் தமது வாளினால் வெட்டி எறிந்தார். மலையை வெட்டியதில், அவரது வாளும் ஒடிந்தது. அப்போது அஜமுகி இந்திராணியைத் திருட் டுத்தனமாய் இழுத்துச் செல்ல முயலுவதைக் கண்டு அவர் தமது உடைவாளை யுருவிக்கொண்டு அஜமுகியை யணுகி இந்திராணியைப் பிடித்திருந்த அவளது கையை வெட்டித்துணித்துப் பிறகு சற்றுநேரம் இந்திராணியைப் பிடித்திருந்த துன்முகியின் கரத்தையும் வெட்டித் துணி த்து, அஜமுகியையும் துன்முகியையும் காலினால் உதைத் துத் தள்ளி உருட்டினார். அஜமுகி எழுந்து, வீரமாகா

ளரையும் தேவர்களையும் சிறையிலடைப்பதாக வீரம்பேசி விட்டு, தன் தோழியுடன் வீரமகேந்திரபுரத்தை நோக்கி நடந்தாள். வீரமாகாளர் இந்திரன் வரும்வரையில் தாம் அவளைக் காப்பாற்றுவதாக இந்திராணியினிடம் சொல்லி விட்டு மறைந்தார்.

அங்கு நிகழ்ந்தவைகளை நாரத முனிவர் ஞான திருஷ்டியினால் கண்டு திருக்கைலாயத்துக்குச் சென்று இந்திரனுக்குத் தெரிவிக்க, இந்திரன் தேவர்களோடு திருநந்தி தேவரிடம் சென்று, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு சீகாழிப்பதிக்குச் சென்றான். ஆங்கு அஜமுகி தேவர்களனைவரையும் பிடித்துச சிறையிலடைப்பதாகச் சபதங்கூறிச் சென்றதை இந்திராணி சொல்லக்கேட்டு, அதன்மேல் அங்கிருப்பது தகுதியன்றெனத் தீர்மானித்து, இந்திராணியையும் தன்னுடன் வந்த தேவர்களையும் அழைத்துக்கொண்டு அவ்விடத்தினின்றும் நீங்கி, மேருமலைக்குச் சென்று, அங்கு மறைந்து தவமியற்றி வந்தான்.

---

## இருபத்தோராவது அத்தியாயம்
### தேவர்கள் சிறைப்படுகிறார்கள்

வீரமாகாளரால் கைதுணிக்கப்பட்டு சீகாழிப் பதியைவிட்டுப் புறப்பட்ட அஜமுகி தன் தோழி துன்முகியுடன் வீரமகேந்திரபுரத்திலுள்ள புகுந்து, தேவர்களும அசுரர்களும் கைகட்டி வாய் புதைத்து நிற்கவும, முனிவர்கள் ஆசிகூறவும், அரமபை மாதர்கள் நடனஞ்செய்யவும சூரபதுமன் கோலாகலமாய்ச் சபையில் வீற்றிருக்கும் சமயத்தில் சபையில் நுழைந்து, தன் வெட்டுண்ட கையைக் காட்டித் தரையில் விழுந்து புலம்பிப் புரண்டாள். அதைக் கண்ணுற்ற சூரபதுமன் கரைகடந்த கோபங்கொண்டு, அவளுக்கு அக்கொடுமையை யிழைத்தது யாரென்று

வினவ, அஜமுகி தான் இந்திராணியை அவனுக்கு மனைவி யாக்கக் கருதி அவளைப்பிடித் திழுத்ததாகவும், அப்போது ஒரு தேவன் வந்து தங்கள் கைகளை வெட்டிவிட்டதாக வும் கூறினாள்.

அதுகேட்ட சூரபதுமன் பெருமூச் செறிந்து, கோபத்தினால் உதடுகளைக் கடித்துப் பற்களைக் கறகற வென்று கடித்து, "இனி மனிதர்களும் நம்மைக் கொல் லத்தொடங்குவார்கள். நாம் யாவரும் இருந்து என்ன பிரயோஜனம்? இவர்கள் கைகள் வெட்டப்பட்டபோது சிந்திய இரத்தத்துளிகள் என பெருங்கீர்த்தியை அழித்து விட்டன. ஆகா! என் அரசாட்சி முறைமை மிகவும் நன்றாயிருக்கிறது!" என்றான். உடனே அவனது குமா ரன் பானுகோபன் எழுந்து, "தந்தாய்! நான் சென்று, இவர்கள் கைகளை வெட்டித் துணிந்த ஆண்மகனையும், தாங்கள் மனைவியாக அடைய விரும்பும் இந்திராணியை யும், இந்திரனாகிய கள்வனையும், தேவர்களையும் பிடித்துக் கொண்டு வந்து, தங்கள் முன்னே நிறுத்துகிறேன். தாங் கள் தயவுசெய்து கோபத்தைத் தணித்துக் கொள்ளவேண் டும்" என்று சொல்லிச் சபையை விட்டு நீங்கித் தன் இருப்பிடத்துக்குச் சென்றான். பிறகு சூரபதுமன் பிரம தேவரை யழைத்து, அஜமுகி துன்முகி இவர்களுடைய கைகளை முன்போல் படைக்கும்படி கட்டளையிட்டு, அவர் அவை யுண்டாகும்படி நினைத்து அவர்கள் மீண்டும் கைகளைப் பெற்றபின், துன்முகியை நோக்கி, "நீ பானுகோ பனுடன் சென்று, உங்கள் கைகள் வெட்டப்பட்ட இடத் தைக் காட்டிவிட்டு வரக்கடவாய்!" என்று கட்டளை யிட்டான்.

சபையை விட்டுச் சென்ற பானுகோபன் தனது சேனைகளுடனும் துன்முகியுடனும் புறப்பட்டுச் சென்று

துன்முகி காட்டிய சீகாழிப்பதியிலுள்ள நந்தவனத்துக் குட்சென்று, அதை யழித்து வெட்டவெளியாக்கி, அதில் எவரையும் காணுமையால் உலக முழுவதும தேடிப் பிறகு தேவலோகத்துக்குச் சென்றான். அவன் வரவை ஒற்றர்களால் அறிந்த இந்திரன் மகனை ஜயந்தன் தேவர்களை நோக்கி, "இனி அசுரர்களுக்குப் புறங்காட்டுவது மில்லை, அவர்களை வணங்கித் துதிப்பதுமில்லை, அவர்களை யெதிர்த்துப் போர்செய்து வெற்றியடைந்து பிழைப்பது அல்லது உயிரிழப்பது என்று என் மனத்தில் நான் உறுதி செய்துகொண்டேன். நீங்கள் யாவரும் அச்சத்துடன் ஓடிவிட்டாலும், நான் சிறிதும் மனத்தளர்ச்சி யடையாமல் போர்புரிவேன்" என்று கூறினான். தேவர்கள் தாங்களும் அவ்வாறே உறுதி செய்துகொண்டதாகத் தெரிவிக்க, ஜயந்தன் வெள்ளையானையின்மீதேறி தேவர்கள் கூட்டம் தன்னைச் சூழ்ந்துவர முரசொலியுடனும் ஆரவாரத்துடனும் அசுரர்களை எதிர்க்கச் சென்றான்.

தேவசேனையும் அசுரசேனையும் ஒன்றை யொன்று தாக்கின. சிறிதுநேரத்தில்தேவர்கள் வலிமையற்றவர்களாய் ஓடினார்கள். அசுரர்கள் அவர்களைத் துரத்திச்சென்று, தங்கள் விற்களின் நாண்களினால் அவர்களது புயங்களைக் கட்டி யிழுத்துக்கொண்டு திரும்பினார்கள். அது கண்ட ஜயந்தன் வெகுண்டு தன் வில்லைக் கையிலெடுத்து வளைத்துப் பாணங்களை மழைபோல் சொரிந்தான். ஜயந்தனது நிகரற்ற வல்லமைக்குமுன் அசுரசேனைகள் நிற்க முடியவில்லை. அநேக கோடி அசுரர்கள் மாண்டனர். கடைசியாக நீலகேசன் என்னும் அசுரன் ஜயந்தனுடைய வில்லின் நாணினை அறுத்தான். அப்போது ஜயந்தன் ஒரு மாய மந்திரத்தை யுச்சரித்துப் பல மாய வுருவங்களை எடுத்துக்கொண்டு அசுர சேனைகளைப் பலவிதமாகக்

கொல்ல ஆரம்பித்தான். பானுகோபனது சேனைகள் பயந்து நடுங்கி ஓடத்தொடங்கின. அப்போது பானுகோபன் முன்பு சுக்கிராசாரியர் தனக்கு உபதேசித்த மூல ஞான மந்திரத்தை விதிப்படி மனத்தினில் நினைத்தான். உடனே மாயையினாலுண்டான பல வுருவங்களும் நீங்க, ஜயந்தன் தனது சுயவுருவம் ஒன்றுடன் மகா கோபத்துடன் ஐராவதத்தின்மீது தோன்றினான்.

ஜயந்தனுக்கும் பானுகோபனுக்கும் கொடிய போர் நிகழ்ந்தது. கடைசியில் ஜயந்தன் மூர்ச்சை யடைந்து ஐராவதத்தின்மீது சாய்ந்தான் உடனே ஐராவதம் பானு கோபன் தேரின்மீது பாய்ந்து அவன தேரிற் கட்டிய குதிரைகளையும் சாரதிகளையும அழித்து, தன்னைத் தாக்க வந்த பானுகோபன் மார்பின்மீது பாய்ந்தது. உடனே அதன் நான்கு தந்தங்களும் ஒடிநதன. பானுகோபன் அதன் துதிக்கையைப் பிடித்துக்கொண்டு அதன் கன்னத்தில் ஓர் அறை அறைந்தான். உடனே அது தரையில் வீழ்ந்து மூர்ச்சை யடைநதது. ஜயநதன் தரையில் விழுந்து மயக்கந்தெளிநது, யாவும் விதியின் பயனென்று சொல்லித் தன்னைத் தானே தேற்றிக்கொண்டான.

உடனே அசுரத்தலைவர்கள் சென்று ஜயந்தனைப் பிடித்து, அவனை அடிக்கத் தொடங்கினார்கள். அப்போது பானுகோபன் அங்கு விரைந்து சென்று, அசுரர்களை நோக்கி, "இநத ஜயநதன நான் பிரயோகித்த பாணங்களினால் அடிபட்டு மயங்கி மிகவும் தேகந் தளர்ந்தான். ஆதலின் இவனைப் பகைவனாகக் கருதி வருத்தாதீர்கள். இவனைத் தேவர் கூட்டத்துடன் சிறைசெய்யுங்கள்!" என்றான்.

தேவர்களும் தேவ மாதர்களும் யாவரும் சிறைப் பட்டனர். பொன்னகரம் தீக்கிரையாகிச் சாம்பராயிற்று.

பானுகோபன் தான் சிறைபிடித்த தேவர்களையும் தேவ மாதர்களையும் கொண்டுபோய்ச் சூரபதுமன் முன்னே நிறுத்தினன். சூரபதுமன் மகிழ்ந்து தன் புதல்வனைத் தழுவிப் பிறகு வாளைக் கையிலேந்திய காவலாளர்களைத் தேவர்களது அங்கங்களைத் துணிக்கும்படி கட்டளையிட்டான். தேவர்கள் செய்திருந்த தவமகிமையினால், அவர்களுடைய அங்கங்களை அசுரர்கள் வெட்ட வெட்ட அவைகள் உடனுக்குடனே திரும்பவும் உண்டாயின. அது கண்ட சூரபதுமன் ஆச்சரியத்துடனும் கோபத்துடனும் காவலாளர்களை நோக்கி, "இத்தேவர்களை என்றும் மீளவொண்ணாத நரகம் போன்ற சிறையி லிடுங்கள் !" என்று கூற, காவலாளர்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டுபோய்ச் சிறையில் அடைத்தார்கள். தேவமாதர்கள் அவ் வீரமகேந்திரபுரத்தில காவல் செய்யப்பட்டு இழிவான ஏவல்களைச் செய்துவந்தார்கள.

## இருபத்திரண்டாவது அத்தியாயம்
## உமாதேவி பார்வதிதேவி யாகிறார்

திருக்கைலாயத்தில செம்பொன் மயமாய் விளங்கும் திருக்கோயிலில் இரத்தினங்களிழைத்து அமைக்கப் பெற்ற மண்டபத்தில் சிங்காதனத்தின மீது வேதகாபகராகிய சிவபெருமான் உமாதேவியார் தமது வாமபாகத்திலுற எழுந்தருளியிருந்தார். எமபெருமானது திருப்புகழை துமபுரு நாரதர்களும் வித்தியாதரர்களும் தாளத்துக்கிசையப் பாடிக்கொண் டிருந்தனர். சிவசாரூப்பிய பதவியை யடைந்து எம்பெருமானது திருவுருவத்தைப் பெற்றவர்களும், பூதகணங்கள் முதலியவர்களும் எமபெருமான் திருமுன்னர் துதித்து நின்றார்கள். அப்போது உமாதேவி சிங்காதனத்தைவிட் டிறங்கி, சிவபெருமா

னுடைய திருவடிகளை வணங்கி நின்று, "எம்பெரு மானே! யான் தேவரீரையிகழ்ந்த தக்ஷனிடத்தில் பல நாள் வளர்ந்து அவன் புதல்வியென்னும் பெயரையும் பெற்றேன். அப்பெயரையும் அவனிடத்தில் வளர்ந்த சரீரத்தையும் இதுகாறும் தாங்கினேன. இனிமேல் அவைகளைத் தரிப்பதற்கு அச்சமாயிருக்கிறது. அவை களை நீக்கிக்கொள்ள விரும்புகிறேன். அவவாறே கட் டளையிட்டருளவேண்டும்" என்று சொல்லிப் பிரார்த் தித்தாள்.

அதுகேட்ட சிவபெருமான, "சக்தியே! இது நல்ல காரியந்தான். இது நிறைவேறவேண்டு மாயின், உன்னைப் புத்திரியாக வளர்த்து அன்புடன் நமக்கு அளிக்கவேண்டுமென்ற கருத்துடன் எம்மை நோக்கிக் கொடுந்தவம் புரிந்துவரும் இமயமலை யரசனிடம் நீ குழந்தை வடிவமாகச் சென்று, அவன் மனம களிப் படையுமாறு அவனிடம ஐந்துவருஷ காலம் வளர்ந்து பின்னர் எமமை நோக்கித் தவம்புரிவாயாக! அப்போது யாம அங்கு வந்து உன்னை மணந்து இங்கு அழைத்து வருவோம்!" என்று கூறியருளினர்.

உமாதேவி மகிழ்ச்சியுற்று எம்பெருமான் திருவடி களை வணங்கி, அவ்விடம்விட்டு நீங்கி, இமயமலையின் உச சியிலுள்ள தடாகததில் அருந்தவம புரிந்துகொண்டிருந்த இமயமலை யரசன் காணும வண்ணம் அத்தடாகத்தில் மலர்ந்திருந்த ஒரு தாமரை மலரின்மீது பச்சிளங் குழந்தை வடிவத்துடன் தோன்றினள். அக்குழந்தை யைக்கண்ட பர்வதராஜன் எமபெருமானுடைய கருணை யைப் புகழ்ந்து, அக்குழந்தையை யணுகி வணங்கி, ஆனந்தத்தினால் உரோமஞ்சிலிர்ப்பக் கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் சொரியத் துள்ளிக்குதித்துப் பாடியாடி

அக்குழந்தையை எடுத்துத் தன் சிரமேல் வைத்துக் கொண்டு தன் அரண்மனைக்குச் சென்று தன் மனைவி யாகிய மேனையின் கையிற் கொடுத்தான். மேனையான வள் அக்குழந்தையை அன்புடன் வாங்கிக்கொண்டு, சிவபெருமான் கருணையை யுன்னி உளமகிழ்ந்து அக் குழந்தைக்குப் பார்வதி என்னும் திருநாமமிட்டு, அக் குழந்தையை நவரத்தினங்களிழைத்த செம்பொன் ஆபர ணங்களினால் காலோடுதலை அலங்கரித்தும், செம்பொன் தொட்டிலில் இட்டு அளவற்ற ஆர்வத்துடன் ஆட்டியும், தன கைகளில் தாங்கிச் சீராட்டியும் மிகவும் செல்வமாக வளர்த்துவந்தாள்.

அவ்வாறு பர்வதராஜனாலும், அவன் மனைவியினாலும் ஐந்துவருஷ காலம் செல்வமாக வளர்க்கப்பட்ட பின், பார்வதிதேவி சிவபெருமான் தன்னை மணந்துகொள்ளும் பொருட்டுத் தான் தவமியற்றவேண்டு மென்றும், ஏவல் புரிவதற்குக் கன்னியர்களுடன் தன்னை அமமலையில் தகுந்த இடமொன்றுக்கு அனுப்பவேண்டு மென்றும் தன்னை வளர்த்துவந்த தாய்தந்தையர்களிடம தெரிவிக்க, அவர்கள் அவளது இளம்பருவத்தை யுன்னி முதலில் மறுத்தனர். பிறகு அத்தேவி தன் கருத்து சிவபெருமான் திருவருளுக் கிசைந்ததெனத் தெரிவித்ததன் மேல், பர்வத ராஜன் அவள் இஷ்டப்படி இமயமலையின் ஓர் புறத்தில் சிறந்த தவச் சாலை யொன்றை அமைப்பித்து, தன் உறவினரது தவப் புதல்விகள் பலரை யழைத்துத் தன் புதல்விக்கு ஏவல் செய்யும்படி பணித்து அவர்களுடன் பார்வதி தேவியை அத் தவச்சாலைக்கு அனுப்பினான். அத் தவச் சாலையை யடைந்ததும், பார்வதி தேவி எம்பெருமானை நோக்கி அருந்தவம் புரியலானாள்.

# இருபத்துமூன்றாவது அத்தியாயம்

## தேவர்களின் சூழ்ச்சி

இனி, சூரபதுமனது கோபத்துக்குப் பயந்து சீகாழிப்பதியை விட்டு இமயமலைக்குச் சென்ற இந்திரன் கதி என்னவாயிற்று என்று கவனிப்போம.

இமயமலைச் சாரலில் அசுரர்களுக்குப் பயந்து ஒளிந்து கொண்ட இந்திரன் ஒருமை மனத்துடன் பல நாள் சிவபெருமானை நோக்கித் தவமியற்றியபின், சிவபெருமான் அவன் முன்னே எழுந்தருளி, யாதுமறியாதவர் போல் அவன் கருதியது யாதென்று வினவ, இந்திரன் தனக்கும் அமரர்களுக்கும் சூரபதுமனால் இழைக்கப் பட்ட கொடுமைகளையெல்லாம் எடுத்துரைத்து, அச்சூர பதுமனை யழித்துத் தங்களைக் காத்தருளவேண்டு மென்று பிரார்த்தித்தான். அது கேட்ட சிவபெருமான், "சத்தியம தவறிய தக்ஷனது யாகத்தில் அவனுடன் சேர்ந்திருந்த பாவமானது உம்மிடத்தில் பொருந்தி யிருக்கிறது. அக் காரணத்தினால் நீங்கள் அசுரரால் துன்பமடைந்தீர்கள். இனி வருங்காலத்தில் எம்மிடத்தில் ஒரு புத்திரன் அவதரித்துச் சூரபதுமனைக் கொன்று உங்களைக் காப்பான்" என்று கூறி மறைந்தருளினார்.

இந்திரன் அம் மொழிகளைக் கேட்டு மகிழ்வடைந் தானே யெனினும், சிவபெருமான் சனகர் முதலான முனிவர்களுக்கு ஞானோபதேசம் செய்ய மோன நிலையில் அமர்ந்ததையும், உமாதேவி அவரை விட்டுப் பிரிந்து பர்வத ராஜன் மகளாய்ப் பிறந்து தவஞ் செய்துகொண்டிருந்ததையும உன்னி, எம்பெருமான் ஒரு புதல்வனைத் தந்தருளுவது எங்ஙனமோவென்று ஏக்கமுற்று, இந்திராணியைப் பிரகஸ்பதியின் மனைவியான தாராதேவியினிடத்தில்

வைத்துவிட்டு, தேவர்களை யழைத்துக்கொண்டு பிரம லோகத்துக்குச் சென்று, பிரமதேவர் வீற்றிருந்த சபையை யடைந்து அவரது பாதமலர்களை வணங்கி, நிகழ்ந்தவைகளைக் கூறி, தேவர்கள் கடைத்தேறும் வழி யாதென வினவினன்.

அது கேட்ட பிரமதேவர், " யாவர்க்கும் முதல்வராகிய சிவபெருமான் திருவருளுடையவரும், தம்மை யடைந்தோர்க்கு உதவிசெய்து அருளுபவரும், வினைகளுக்குரிய போகங்களை முறைப்படி அனுபவிக்கச் செய்பவருமாதலால், நம்மை யாளும் நோக்கத்துடன் தவசியைப் போல் தக்ஷிணாமூர்த்தியாக விளங்குகிறார். சூரபதுமனால் நமக்குத் துன்ப முண்டாக்குவதற்குக் காரணம், நீக்க முடியாத பாவத்தின் பயனை அனுபவிக்கச் செய்து நமக்கு முத்தி தந்தருளவேண்டுமென்ற கிருபாநோக்கந்தான். நமது தீவினைப் பயனெல்லாம் முடியும் காலம் சிறிது சமீபித்திருப்பதனால் சர்வக்ஞரான எம்பெருமான் ஆதரவுடன் உன்னிடத்தில் வந்து, சிறந்த புத்திரனைத் தந்து நமது குறைகளை நீக்குவதாகச் சொல்லியருளினார். இனி நாம் துக்கக்கடலைக் கடப்பது நிச்சயம். ஆனால் நாம் சிறிது முயற்சி செய்யவேண்டும் அதைத் திருமாலுக்குத் தெரிவித்துத்தான செய்யவேண்டுமாதலின், நாம் அவரிடத்துக்குச் செல்வோம், வாருங்கள் !" என்று கூறி எழுந்து இந்திரன் முதலிய தேவர்களுடன் வைகுந்தத்துக்குச் சென்று, ஸர்ப்பாசனத்தில் திருமால் எழுந்தருளியிருந்த கொலுமண்டபத்தை யடைந்து, அவரை வணங்கித் துதித்துநின்றார்.

அப்போது திருமால் அவர்கள் வந்த காரிய மின்னதெனக் கேட்டுத் தெரிந்துகொண்டு, யாவரும் மயங்குமாறு புஷ்பபாணங்களைப் பிரயோகிக்கும் மன்மதனைச் சிவ

பெருமான்பால் தேவர்கள் அனுப்பினால், சிவபெருமான் சனகர் முதலிய முனிவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்யும் மோனநிலை நீங்கி உமாதேவியைத் திருமணம் புரிந்து கொண்டு, தேவர்கள் வாழ்வடையுமாறு ஒரு புத்திரனைத் தந்தருளுவாரென்று உரைத்தருளினார். பிரமதேவர் அப்படியே மன்மதனைச் சிவபெருமானிடம் அனுப்புவதாகச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு தேவர்களுடன் தம் நகரத்துக்குச் சென்றார்.

பிரமதேவர் தமது மனோவதி நகரத்தையடைந்து தமது திருக்கோயிலுக்குட் புகுந்து கமலாசனத்தில் அமர்ந்து, மன்மதன் வருமபடி தம் மனத்தினில் நினைத்தார். உடனே விஷ்ணுபுத்திரனாகிய மன்மதன் தன் பரிவாரங்களுடன் விரைந்துவந்து பிரமதேவருக்கு எதிரில் வணங்கிநின்றான். அப்போது பிரமதேவர் அவனை நோக்கி, "மன்மதனே! கங்காதரராகிய சிவபெருமான் பார்வதிதேவியை மணஞ் செய்யும் பொருட்டு உனது புஷ்ப பாணங்களைப் பிரயோகித்து அவரது மௌன நிலையை நீக்குவாயாக" என்றுரைத்தார். அக்கொடிய மொழிகளைக் கேட்ட மன்மதன், "ஐயனே! அறிவுடையோர் தம்மை யணுகும் கொடியவர்களுக்கும் அவர்கள் கடைத்தேறுவதற்குரிய நல்ல நெறியை உணர்த்துவார்கள். தேவரீரோ யான் அழிந்துபோவதற்குரிய நெறியிற் செல்லுமாறு போதித்தீர். இது தகுதியோ? தாருகவனத்து முனிவர்கள் எம்பெருமானை யழிக்க விடுத்த ஓமாக்கினியைத் தாங்கும் திருக்கரத்தையும், திரிபுரங்களை யெரித்து நீறாக்கிய திருநகையையும், மிகுந்த ஒளி வீசும் திரிநயனங்களையும், செந்தழலை யொத்த திருமேனியையும் உடைய சிவபெருமான்மீது என் புஷ்ப பாணங்களை எய்யும் நோக்கத்துடன் நான் செல்வேனாயின், நான் என்னுயிருடன்

திரும்புவதற்கு வழி யுண்டோ சொல்லும். ஐயனே விருப்பு வெறுப்பில்லாத எம்பெருமானை மயக்குவது எப்படி ? யுகமுடிவில் காளகண்டராகிய எம்பெருமானது நயனத்தினின்று சிந்தும் ஒரு தீப்பொறியினல் உலகங்க ளெல்லாம் அழியுமென்பது தேவரீருக்குத் தெரியாதோ முன்னளில் உலகங்களைப் படைக்கும் பொருட்டு தம்மை விட்டு நீங்காத திருவருளையே ஒரு பெண்ணைச் செய்து அப்பெண்ணைத் தாமாகவே தமது வாமபாகத்தில் வைத் துக்கொண்ட சிவபெருமானது மனத்தினில் அற்பனகிய நானே பெண்ணைசை உதிக்கச்செய்ய வல்லவன் ?" என்று வருத்தத்துடனும் கோபத்துடனும் கூறினன்.

மன்மதன் தம் வார்த்தைக்கு இணங்காமல் பேசிய தைக் கேட்ட பிரமதேவர் வருத்தமுற்று, அவன் கூறி யவை யெல்லாம் உண்மையென வுணர்ந்து பெருமூச் செறிந்து, "மன்மதனே ! நீ கூறியது உண்மைதான் ; சிவபெருமானுடன் போர் செய்தல் எளிதான காரிய மன்று; ஆயினும் தம்மை யடைந்தவர்களுடைய துன் பத்தை யொழிக்கும் சிவபெருமானது பெருங்கருணை யினல் இக்காரியத்தை உன்னல் நிறைவேற்ற முடியும். அக் காரியத்தை நிறைவேற்ற வல்லவர் உன்னை யன்றி வேறு எவருமில்லை. அன்றியும், யாராயினும் ஒருவர் சகிக்கமுடியாத துன்பத்தை யடைந்து மற்றொருவரைத் தமக்கு உதவிபுரியும்படி இரந்து கேட்டால், அவர் உதவி செய்யமுடியா தென்று மறுத்துத் தம்முயிரையே பெரி தாகக் கருதி காத்துக்கொள்ளுதல் தகுதியோ? தேகம் அழியும், கீர்த்தியே நிலைபெற்றிருக்கும். ஆகையால், இனித் தடுத்துப் பேசாமல் எங்கள் காரியம் நிறைவேறும் பொருட்டு நீ செல்வாயாக !" என்று கூறினர்.

மன்மதன் சிவபெருமான்மீது போர் தொடுக்கத்



குமரக்கடவுள்

தான் செல்லமுடியாதென்று திரும்பவும் மறுத்துப்பேச, பிரமதேவர் கோபத்துடன், "நாம் சொன்னபடி நீ செய்யாவிட்டால், உனக்கு நாம் கொடிய சாப மிடு வோம்!" என்றார். மன்மதன் வருத்தமுற்றுச் சற்று ஆலோசித்து, பிரமதேவரால் சபிக்கப்பட்டுத் துயருற்று மடிவதைக் காட்டிலும் சிவபெருமான்மீது அம்புகளை எய்து அப்பாவத்தினால் உயிர் துறப்பதே நலமென்று தீர் மானித்து, தான் அன்றைக்கே சிவபெருமானுடன் போர் புரியச் செல்வதாகக்கூறி, விடைபெற்றுக்கொண்டு அவ் விடம விட்டு நீங்கினான்.

---

## இருபத்து நான்காவது அத்தியாயம்

### மன்மதன் சாம்பராகிறான்

மனமதன் தன் நகரத்தையடைந்து, கரும்பு வில்லை யும் புஷ்ப பாணங்க ளடங்கிய அம்புறாத் தூணியையும், மாவிலையாகிய வாளையும் எடுத்துக்கொண்டு, குயில்கள் எக்காளங்களாகவும சமுத்திரங்கள பேரிகைகளாகவும முழங்கவும, மீன் ஒன்று கொடியாக மேலே பறக்கவும, சந்திரன் குடையாக நிழல்செய்யவும, பரிஜனங்கள் புடை சூழ்ந்துவரவும், கிளிகளால் இழுக்கப்பெற்ற தென்றற் காற்றாகிய தேரின்மீது இரதி தேவியுடன் ஏறித் தன் நகரத்தைவிட்டுப் புறப்பட்டுத் திருக்கைலாயத்துக்குச் சென்று, தேரைவிட் டிறங்கி அம்மலையை வணங்கி, தன் பரிஜனங்களை நிறுத்திவிட்டு, இரதி தேவியைமட்டும் அழைத்துக்கொண்டு, தன் வில்லுடனும் அம்புறாத்தூணி யுடனும், தூங்கும் வேங்கைப்புலியை எழுப்பச் செல் லும் மானைப்போல் துணிந்து அம்மலையின்மீது ஏறிச் சென்றான்.

அவன் வருகையைக் கண்ட நந்தியெம்பெருமான் கோபத்துடன் அவன் அங்குவந்த காரணம் யாதென்று வினவ, மன்மதன் நடுநடுங்கி அவரை வணங்கித் துதித்து, பிரமதேவரது சபையில் நடந்தவைகளை யெல்லாம் உண்மையாக எடுத்துரைத்தான். பிறகு நந்தியெம்பெருமான், மன்மதனைமட்டும் திருக்கோவிலுக்குள் விடும்படி சிவபெருமான் கட்டளையிட்டபடி, மன்மதனை மேற்குத் திருவாயிலின் வழியே நுழைந்து எமபெருமான் சந்நிதியை யடையும்படி கட்டளையிட்டார். மன்மதன் அவ்வாறே மேற்குத் திருவாயிலின் வழியே திருக்கோவிலுக்குள் நுழைந்து, தேவாதிதேவராகிய சிவபெருமான் நீறுபூத்த நெருப்புமலையைப்போல் மௌனமாய் வீற்றிருந்ததைக் கண்டு அச்சமுற்று மெய்யெலாம் வியர்க்க நடுங்கித் தன் கையிலேந்திய வில்லுடனும் பாணத்துடனும் தரையில் வீழ்ந்து மூர்ச்சை யடைந்தான்.

மூர்ச்சையடைந்த மன்மதன் இரதிதேவியின் சைத்தியோபசாரங்களினால் சிறிதுநேரத்துக்கெல்லாம் மூர்ச்சை தெளிந் தெழுந்து, யாவும எமபெருமான் திருவிளையாடலே யாகுமெனத் தேர்ந்து மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, எம்பெருமானை யணுகி புஷ்ப பாணங்கள் ஐந்தையும் எம்பெருமான்மீது பிரயோகித்தான். மன்மதனுடைய பாணங்கள் எம்பெருமான்மீது படுதலும், எம்பெருமான் தமது நெற்றிக் கண்ணைச் சற்றுத் திறந்து மன்மதனைப் பார்த்தருளினார். உடனே அந்த நெற்றிக் கண்ணின் கடுமையாகிய அனலினால் மன்மதன் எரிந்து சாம்பராயினான்.

இரதி தேவியானவள் தன் நாயகன் வெந்து தூளானதைக்கண்டு சோர்வுற்று மூர்ச்சித்துப் பிறகு உணர்ச்சி பெற்றெழுந்து துயர்க்கடலில் தத்தளித்து, "திருமாலின்

புத்திரனே! அடியாளுக்கு உயிர்போன்றவனே! சம்பரா சுரனை யழித்த சூரனே! செம்பவளக் குன்றை யொத்த சிவபெருமான் திருவிழியினுல் வெந்து சாம்பராயினையே! உன்னை இங்கு அனுப்பிய தேவர்கள் இப்போது உன் னைக்காக்க வராமல் தூங்குகிறார்களோ? தாமே உன்னைச் சபிப்பதாகப் பயமுறுத்தி உன்னை யனுப்பிய பிரமதேவ ரது மனம் இப்போது திருப்தி யடைந்ததோ? திரிபுராந் தகர்மீது போர் செய்யச் செல்லுதல் தகுதியன்றென அடியாள் உரைத்ததைக் கேட்கமாட்டேன் என்றாயே! தேவர்கள் ஏவலைச் செய்யத் துணிவு கொண்டாயே! தேவர்கள் சூழ்ச்சி செய்து உன்னைக் கொல்லாமற் கொன் றார்களே! ஐயோ! நமது இன்ப வாழ்க்கையும் பொய் யாகிச் சொற்பனங்கண்ட கதையாயிற்றே! நானும் கொடுந்துயரத்தினுல் வெந்து உன்னிடம் வந்து சேரு கிறேன்" என்று புலம்பிக் கதறினள்.

மன்மதன் எம்பெருமானுடன் செய்யும் சிறு போரைக் காண வந்து திருக்கோயிலின் முன்னே கூடி நின்ற பிரமன் முதலிய தேவர்கள மன்மதன் அழிந் ததை நந்தி யெம்பெருமானுல் அறிந்து, தாங்கள் பிழைக்க வழிகாணுமல் வருந்தி அத்திருவாயிலிலேயே நின்று எம்பெருமானைத் துதித்துத் தங்கள் கஷ்டங்களை நீக்கியருளும்படி பிரார்த்தித்தனர். அப்போது எம்பெரு மான் அவர்களிடத்துக் கிருபை கூர்ந்து நந்தி தேவரை நினைத்து, அவர் தமது திருமுன்னா வந்ததும, தேவர் களை உள்ளே அழைத்து வருமபடி கட்டளையிட்டருளி னுர். நந்திதேவா உடனே சென்று தேவர்களை அழைத்து வந்து எம்பெருமான் திருமுன்னர் நிறுத்தினுர். தேவர் கள் எம்பெருமானைத் தரிசித்துப் பரமானந்த மடைந்து

அவரது பாதமலர்களில் வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து துதித்து நின்றார்கள்

அப்போது எமபெருமான் யாது மறியாதவர்போல் அவர்கள் வேண்டிய தென்னவென்று வினவ, தேவர்கள், "கொடிய சூரபதுமனைக் கொல்வதற்கு ஒரு புத்திரனை எங்களுக்குத் தந்தருளுவதற்காகத தேவரீர் இப்போது இமயமலையரசன் புதல்வியாக இமயமலையில் தவஞ்செய்து கொண்டிருக்கும் பார்வதி தேவியாரைத் திருமணஞ்செய் துக்கொண் டருளவேண்டும" எனப் பிரார்த்தித்தார்கள். அப்போது சிவபெருமான், "தேவர்கள்! நீங்கள் யாவரும் இனி வருந்தாதீர்கள்! உங்கள் துயரம் நீங்கும் பொருட்டு யாம பார்வதி தேவியைத் திருமணம் புரிவோம். நீங்கள் இனிச் செல்லலாம்!" என்று கூறியருளினுர். தேவர்கள் விடைபெற்றுச் சென்றனர். பிறகு இரதிதேவி அதுவே தக்க தருணமென்று நிச்சயித்து எம் பெருமானை யணுகி, "எமதிறைவனே! இது முறையோ! முறையோ! தேவர்கள் சூழ்ச்சியினுல் என் நாயகன் செய்த பிழையைப் பொறுத்து அவனுக்குத் திருவருள் புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். அப்போது எம் பெருமான், "பெண்ணே! நீ வருந்தாதே! யாம பார்வதி தேவியைத் திருமணஞ் செய்து கொள்ளும் காலத்தில் உன் நாயகனைத் தருவோம். நீ போகலாம்!" என்று சொல்லியருளினுர். இரதிதேவி எம்பெருமானைப் பணிந்து அவ்விடம் விட்டு நீங்கி இமயமலையின் ஒரு பாகத்துக் குச் சென்று அங்கு வசித்துவந்தாள்.

## இருபத்தைந்தாவது அத்தியாயம்

### சிவபெருமான் பார்வதிதேவியை மணந்துகொள்கிறு

தேவர்களும் இரதிதேவியும நீங்கிய பின், எம்பெரு மான் தம்மிடத்தில் ஞானோபதேசம பெற வந்த சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் என்னும நான்கு முனி வர்களையும அருளுடன் நோக்கி, "சிறுவர்களே! ஞானோப தேசம் சொற்களினால் செய்யக் கூடியதன்று. துயரத்தை யொழித்து மனேலயத்துடனும் மவுனத்துடனுமிருந்து எமமைத தியானித்தலே ஞானமாகும்!" என்று போதித்து அவர்களுக்கு விடைகொடுத் தனுப்பினார்.

பிறகு சிவபெருமான் பார்வதி தேவிக்குத் தம்மிடத் துள்ள நிகரற்ற அன்பையும் விருப்பத்தையும யாவர் க்கும் காட்டவேண்டுமென எண்ணி. விருத்த வேதியரைப் போல் வேடந் தரித்துக்கொண்டு, பார்வதிதேவி தவம் புரிந்துகொண்டிருநத கன்னி மாடத்துக்குச் சென்று, அவளது சேடியர்களால் உள்ளே அழைத்துச் செல்லப் பெற்று, பார்வதி தேவியினிடம் சிவபெருமானை நிந்தித்து, தவத்தை விட்டுத் தம்மை மணநது கொள்ளும்படி சொல்லியருளினார். உடனே பார்வதி தேவி கடுஞ்சினங் கொண்டு அக்கிழவரை இகழ்நது பேசி அவ்விடம் விட்டுச் செல்லப் புறப்பட்டாள். அப்போது எமபெருமான் பிரா மண வேடத்தை விட்டு, இடப வாகனத்தின் மீது சிவ கணங்கள் தம்மைச் சூழ்ந்து நிற்க ஆகாயத்தில் திவ்வி யக் காட்சி தநதருள, பார்வதி தேவியார் எமபெருமானைத் தரிசித்துப் பன்முறை வணங்கிக் கைகூப்பி நின்று துதி த்து, தான் எம்பெருமானை அறிந்து கொள்ளாமல் நிந் தித்த பிழையைப் பொறுத்தருளும்படி பிரார்த்தித்தாள். எம்பெருமான் அன்புடன் பார்வதிதேவியை நோக்கி

"யாம் பொறுத்தருளுவதற்கு நீ யாதொரு குற்றமும் செய்யவில்லை. இனி நீ கொடிய தவத்தினால் வருந்தாதே. யாம் உன்னை மணஞ் செய்துகொள்ள நாளைக்கு வருவோம்!" என்று கூறி மறைந்தருளினார்.

உடனே பார்வதி தேவியின் சேடியர்களிற் சிலர் இமயமலை யரசனிடம் சென்று நிகழ்ந்தவைகளைத் தெரிவிக்க, அவன் மனச்சஞ்சலத்தை யொழித்து, கன்னிமாடத்துக்குச் சென்று, பார்வதி தேவியைத் தனது அரண்மனைக்கு அழைத்துப்போனான். அவன் அரண்மனையை யடைந்ததும், பார்வதி தேவியைத் தமக்குத் திருமணஞ்செய்துகொடுக்கும்படி கேட்கச் சிவபெருமான் அனுப்பிய சப்தரிஷிகளைக்கண்டு அவர்களை வணங்கி அவர்கள் கோரியபடி பார்வதிதேவியை எம்பெருமானுக்கு திருக்கலியாணஞ் செய்து கொடுப்பதாக வாக்களித்தான். சப்தரிஷிகளும் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு எம்பெருமானிடம் சென்று, பர்வதராஜன் எம்பெருமான் கருத்துக்கு இசைந்ததைத் தெரிவித்து விடைபெற்றுச் சென்றனர்.

இமவான் தனது புதல்வியின் திருமணத்துக்காகத் தன் நகரத்தை அலங்கரிக்கவேண்டுமென்று கருதி, தேவத்தச்சனை மனத்தினால் நினைத்து வரவழைத்து, தன் நகரத்தைப் பொன்னகரம்போலச் செய்யும்படி அவனை வேண்டிக் கொண்டான். உடனே தேவத்தச்சன் தேவர்கள் யாவரும் வந்து தங்குமாறு அநேக அற்புதமான மாளிகைகளையும், மிகவும் விசித்திரமான திருக்கலியாண மண்டபத்தையும், ஆடல் பாடல்களுக்காகப் பல சிங்கார மண்டபங்களையும் அமைத்து அப்பழைய நகரத்தைப் பொன் மயமாய் விளங்கச்செய்தான். பிறகு இமவான் தேவர்களையும் இருடிகளையும் அவர்கள் பத்தினிமார்களுடன்

அழைத்து வருமபடி பலதூதுவர்களை யனுப்பினான். மறு நாள் அவன் தன் பந்துக்களுடன் திருக்கைலாயத்துக்குச் சென்று, திருநந்திதேவரால் உள்ளே யழைத்துச் செல்லப் பெற்று, சிவபெருமானது திருவடித் தாமரைகளை வணங்கி, பார்வதி தேவியாரை எம்பெருமான் மணந்து கொள்வதற்குப் பங்குனி மாதத்தில் உத்திர நக்ஷத்திரம் கூடிய அன்றைய தினமே சுபதினமாதலால், எம்பெரு மான் திருமணத்துக்காக அப்பொழுதே இமயமலைக்கு எழுந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, எமபெருமான் தாம் பின்னே வருவதாகக் கூறி, அவனை முன்னே செல் லும்படி கட்டளையிட்டார்.

பிறகு எமபெருமான் பணித்தபடி திருநந்திதேவர் திருமால் முதலிய தேவர்களும் உருத்திர கணங்களும் உடனே திருக்கலியாணத்துக்காகத் திருக்கைலாயத்துக்கு வரவேண்டுமென நினைக்க, அவர்கள் யாவருமே விரைவில் அங்கு வந்து எமபெருமான் திருமுன் வணங்கி நின்றார் கள். அப்போது பிரமதேவர் மகுடம் முதலிய பல திவ் வியாபரணங்களைத தம் மனத்தினால் சிருஷ்டித்து ஒரு பொன்னாலாகிய தட்டினமீது வைத்து எமபெருமான் திருமுன் கொண்டுவந்து, அவைகளை அணிந்துகொண் டருளும்படி பிரார்த்திக்க, எம்பெருமான அவைகளைத் திருக்கரத்தினால் தொட்டு, "பிரமனே! நீ அன்புடன் அளித்தமையால் யாம் இவைகளை யணிந்துகொண்டாற் போல மகிழ்வுற்றோம்!" என்று புன்னகையுடன் கூறி, தமது சர்ப்பாபரணங்களே திவ்யாபரணங்களாக ஆக வேண்டுமெனத் திருவுளங்கொண்டார். உடனே அவை கள் திவ்யாபரணங்களாக மாறித் துலங்கின.

பிறகு எம்பெருமான் சகலருமே தம்மைச் சூழ்ந்து வர இமயமலைக்கு எழுந்தருளி, இமயமலை யரசன் அஷ்ட

மங்கலங்களுடன் எதிர்கொண்டழைக்கத் திருக்கலியாண மண்டபத்துக்குச்சென்று, இடபத்தினின்றும் இறங்கி பிரமதேவரும் திருமாலும் கைலாகு கொடுக்க மெல்ல நடந்து திருக்கலியாண மண்டபத்தினுள் நுழைந்து நீலரத்தினங்களினாற் செய்த அழகிய ஆசனத்தின்மீது அமர்ந்தார். பிறகு தேவர்கள் தக்க ஆசனங்களில் அமர்ந்தார்கள். அச்சமயத்தில் யாவரும வந்து பூமியின் வடபாகத்திலுள்ள இமயமலையிற் கூடியதனால் தென்பாகம உயர்ந்து வடபாகம் தாழ்வுற, இமயமலை சலிக்கத் தொடங்கிற்று. அப்போது சிவபெருமான் குறுமுனிவராகிய அகத்தியரை யழைத்து, “தவத்திற் சிறந்தவனே! நீ தென்பாகத்திலுள்ள பொதிய மலைக்குச் சென்று அங்கேயே சிலகாலமிருந்து பிறகு எம்மிடத்தில் வரக் கடவாய்! நீ சென்றாலல்லது பூமி முன்போல் சமமாகாது. ஆதலின், நீ அங்கு செல்! யாம அங்கு வந்து உனக்குத் திருமணக்கோலக் காட்சி தந்தருளுவோம்” என்று கூறியருள, அகத்தியர் தென்றிசைக்குச் சென்று பொதிய மலையில் அமர்நதருளினார். உடனே பூமி சமமுற்றது. அது கண்ட யாவரும் குறுமுனிவரது பெருமையை யுன்னி வியப்புற்றனர்.

அப்போது துர்க்கை, லக்ஷ்மி முதலியோர் தன்னைப் புடைசூழ்ந்துவர பார்வதிதேவி அம்மண்டபத்தினுள் நுழைந்து சிவபெருமானது திருவடிகளை வணங்க, எம்பெருமான் பார்வதிதேவியைத் தமக்குப் பக்கத்தில் அமரும்படி கூறியருளினார். பார்வதிதேவி எம்பெருமான் பக்கத்தில் அமர்ந்தபின், இமயமலையரசன் எம்பெருமான் பாதமலர்களைப் பரிசுத்தமான தீர்த்தத்தினால் விளக்கி அலங்கரித்து அருச்சித்துப் பிறகு பார்வதிதேவியின் திருக்கரத்தை எம்பெருமான் திருக்கரத்தில் வைத்து

வேதமந்திரங்களை யுச்சரித்துத் தாரைவார்த்துக் கொடுத்தான். பிறகு எம்பெருமான், பிரமன் முதலிய தேவர்கள் வேண்டுகோளுக் கிணைங்கி, வேத முறைப்படி எமதன்னையாகிய பார்வதிதேவியை மணந்துகொண்டார்.

திருமணச் சடங்குகள் எல்லாம முடிந்தபின், இரதிதேவி எம்பெருமான் திடிவடிகளை வணங்கி, தன் குறையை நீக்கி யருளும்படி பிரார்த்திக்க, எம்பெருமான் மன்மதன் தோன்றும்படி நினைத்தருளினர், உடனே மன்மதன் தோன்றி எமபெருமான் திருவடிகளை வணங்கித் துதித்து, "எம்பெருமானே! அடியேன் பிழையைப் பொறுத்தருள வேண்டும!" என்று பிரார்த்தித்தான். அப்போது சிவபெருமான் அவனை அன்புடன் நோக்கி, "குழந்தாய்! உன்மீது எமக்குச் சிறிதும் கோபமே கிடையாது. ஆகையினல் நீ வருந்தாதே! எமது பார்வையினல் நின்னுடல் சாம்பராயிற் றாகையினல், நீ இரதி தேவிக்கு மட்டும் உருவமுடையவனுபும மற்றவர்களுக்கு அருபியாயும் இருநதுகொண்டு உனது அரசாட்சியை நடததுவாயாக!" என்று கூறி மன்மதனுக்கும் இரதி தேவிக்கும் விடைகொடுத் தனுப்பினர்.

பிறகு சிவபெருமான் பார்வதிதேவியாருடன் இடப வாகனத்தின்மீதேறி, தேவர்களும் சிவகணங்களும் இமவானும் தம்மைப் புடைசூழ்ந்து வர இமயமலையினின்றும் நீங்கித் திருக்கைலாயத்தை யடைந்து, விடையினின்றும் இறங்கி, யாவர்க்கும் விடைகொடுத் தனுப்பிவிட்டுத் தமது திருக்கோயிலுனுட் சென்று, தமது சிங்காதனத்தின்மீது பார்வதி தேவியார் இடது பக்கத்திலிருக்க அமர்ந்தருளினர்.

## இருபத்தாறுவது அத்தியாயம்

### ஷண்முகக் கடவுள் அவதரிக்கிறார்

சிவபெருமான் பார்வதி தேவியை மணந்து வெகு காலமாயிற்று. ஆகியும், அப்பெருமான் ஒரு புத்திரனை யுதவி தங்கள் துயரம் நீங்க வழி செய்யாததைக்கண்ட பிரமாதி தேவர்கள் வருத்தமுற்று, திருக்கைலாயத்துக் குச் சென்று எம்பெருமானிடம் தங்கள் குறைகளைக் கூறித் திருவருள் புரியும்படி விண்ணப்பஞ் செய்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, வாயுதேவனைத் திருக்கைலாயத்துக்குச் சென்று எம்பெருமான் என்ன செய்துகொண் டிருந்தாரென்று அறிந்து வரும்படி கேட் டுக்கொண்டனர். முன்னம் மன்மதன் சென்று சாம்ப ரானதை நினைத்து வாயுதேவன் உள்ளமும் உடலும நடுங்கத் தன்னால் அக்காரியத்தைச் செய்ய முடியாதென்று சொல்லி மறுத்தான். அப்போது பிரமதேவர், தேவர்கள் துயரம் நீங்குவதற்காக வாயுதேவன் தன்னுயிரைக் கொடுத்தேனும் அப்பேருதவியைச் செய்யவேண்டுமென வேண்டிக்கொள்ள, வாயுதேவன் உயிருக்குத் துணிந்து திருக்கைலாயத்துக்குச் சென்று, குளிர்ச்சியும் நறுமண மும் பொருந்திய இளந் தென்றற்காற்றாகத் திருக்கோயி லுக்குள் நுழைய முயன்றான். அது கண்ட நந்தியெம் பெருமான் வெகுண்டு வாயுதேவனை அதட்ட, வாயு தேவன் வலிமைகுன்றி அவரது பாதங்களை வணங்கி, தன் பிழையைப் பொறுத்தருளும்படி பிரார்த்தித்தான். நந்தி யெம்பெருமான், "உன்னுயிரைக் கொடுத்தோம். இனி நீ இங்கே நில்லாமற் போகக்கடவாய்!" என்று கூறியருளி னார். வாயுதேவன் அவரை வணங்கி, அச்சத்துடன் அவ்

விடம் விட்டு நீங்கி, தேவர்கள் கூடியிருந்த விடத்துக்குச் சென்று நிகழ்ந்ததைத் தெரிவித்தான்.

அதுகேட்ட தேவர்கள் தாங்கள் அனைவரும் கூடி எம்பெருமானிடம் செல்வதே நலமெனத் தேர்ந்து, மேரு மலையை விட்டுத் திருக்கைலாயத்துக்குச் சென்று, நந்தி யெம்பெருமானால் எமபெருமான் திருமுன்னர் அழைத்துப்போகப் பெற்று, எம்பெருமானை நமஸ்கரித்தெழுந்து துதித்தனர். அப்போது சிவபெருமான் அத்தேவர்களது முகங்களைக் கருணையுடன் நோக்கி, "தேவர்காள்! நீங்கள் துனபத்தினால் மிகவும் மனத்தளர்ச்சி யடைந்திருக்கிறீர்கள்! நீங்கள் யாது வரம வேண்டினும் இப்போதே தருவோம். நீங்கள் விரும்பும் வரத்தைக் கேளுங்கள்!" என்று கூறியருள, தேவர்கள், "ஆதியும் நடுவும் ஈறும் உருவமும் ஒப்பும் ஏதுவும் போக்கும் வரவும் இன்பமும் துன்பமும் இன்றி வேதங்களையும் கடந்துநின்ற விமலனே! தேவரீர்பால் தேவரீரையே நிகர்த்த குமாரன் ஒருவனைத் தந்தருளவேண்டும்!" என வேண்டிக்கொண்டார்கள்.

அப்போது சிவபெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் வருந்தாதீர்கள்! இப்போதே நாம் ஒரு குமாரனைத் தந்தருளுவோம்!" என்று கூறியருளி, மெய்ஞ்ஞானிகளால் தியானிக்கப்படும ஈசானம், தற்புருஷம், வாமதேவம், அகோரம, சத்யோஜாதம், அதோமுகம என்னும் பழைய திருமுகங்கள் ஆறையும கொண்டருளி, ஆறு திருமுகங்களினுமுள்ள நெற்றிக்கண்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தீப்பொறியை அளித்தார். அந்த ஆறு தீப்பொறிகளும் தேவர்களும் தாங்கமுடியாத வெப்பத்துடன் உலகமெங்கும் பரவின. உடனே வாயுக்கள் வலிமைகுன்றி, வீசாது ஓய்ந்தன; கடல்கள் வற்றின; பூமி பிளவுபட்டது; மலைகள் நெகிழ்ந்தன; ஜீவராசிகளனைத்தும நடுங்கின. ஆனால்

அத்தீப்பொறிகள் உயிர்களை இரக்ஷிக்கும்பொருட்டு உண்டாயின வாகையால் ஓர் உயிரையும் அழிக்கவில்லை.

சிவபெருமானருகில் வீற்றிருந்த உமாதேவியாரும அத் தீப்பொறிகளின் வெப்பத்தைத் தாங்கமாட்டாமல் தேகம் வியர்த்து மனங்கலங்கி அச்சமுற்றெழுந்து தமது திருவடிகளிலணிந்த பொற்சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்கும்படி ஓடி அந்தப்புரத்தை யடைந்தார்.

திருமால் முதலிய தேவர்களும் அப்பொறிகளின் வெப்பத்தைத் தாங்க மாட்டாதவர்களாய் துன்புற்றுப் பயந்து எம்பெருமான் சந்நிதியினின்றும் ஓடிப் பலவுலகங்களுக்கும் சென்று அலைந்து சிவபெருமானது சந்நிதானத்துக்கே மீண்டு, சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே! அடியேங்கள் அசுரர்களை யழிக்க ஒரு புத்திரனைத் தந்தருளும்படி பிரார்த்திக்க, தேவரீர் சகல புவனங்களையும் அடியேங்களையும அழிக்கத் தக்கதும கொடியதும் எல்லையற்றதுமான அக்கினியைத் தந்தருளினீர். அடியேங்கள் பிழைப்பதெப்படி? எங்களுக்குப் புகலிடம் தேவரீர் திருவடிகளைத் தவிர வேறுண்டோ? ஆதலின் தேவரீர் கருணை கூர்ந்து நிலவுலகத்தையும் விண்ணுலகத்தையும் அழிக்கின்ற அக்கினியை விலக்கி அடியேங்கள் குறைகளை நீக்கி யாளவேண்டும்" என்று கூறிப் பிரார்த்தித்தார்கள்.

அப்போது சிவபெருமான் அஞ்சாதேயுங்கள் என்று அவர்களுக்குத் தைரியஞ் சொல்லி, புதிதாகத் தோன்றிய தமது ஐந்து திருமுகங்களையும் மறைத்துக் கொண்டு பண்டுபோல் ஓரே திருமுகத்துடன் அமர்ந்து, புவனமெங்கும் வியாபித்த ஆறு தீப்பொறிகளும் தமது திருமுன்னே வரும்படி நினைத்தருளினார். உடனே அத்தீப் பொறிகள் எம்பெருமான் திருமுன் வந்தடைய, எம்


பெருமான் அவைகளை மகிழ்வுடன் நோக்கி, பிறகு வாயு தேவனையும் அக்கினி தேவனையும் கருணையுடன் நோக்கி, "நீங்கள் இருவரும் இத் தீப்பொறிகளைச் சுமந்து சென்று கங்காநதியில் விடுங்கள்; அவள் அவைகளைச் சரவணப் பொய்கையிற் சேர்ப்பாள்!" என்று கூறி, அது கேட்டு நடுநடுங்கி நின்ற அவர்களிருவருக்கும் அவைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வலிமையைக் கொடுத்தருளினார்.

பிறகு சிவபெருமான் தேவர்களை நோக்கி, "இத்தீப் பொறிகள் சரவணப் பொய்கையை யடைந்து ஒரு குழந்தையாக ஆகிச் சூரபதுமனுடைய வமிசத்தை நாசஞ்செய்யும் இனிக் கவலை யொழிந்துச் செல்லுங்கள்!" என்று தேவர்களுக்கு விடைகொடுத் தனுப்பினார். வாயுதேவன் அத் தீப்பொறிகளை யெடுத்துத் தன் தலைமேல் வைத்துச் சுமந்து கொண்டு, அக்கினிதேவன் தன்னைப் பின்தொடர்ந்து வர, கங்கையை நோக்கி நடந்தான். தேவர்கள் தாங்களும் சரவணப் பொய்கைக்குச் சென்று தங்களை உய்விக்க வந்த கருணாசாகர மூர்த்தியைக் காணவேண்டுமென்று ஆவல்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள். வாயுதேவன் ஒருநாழிகை அப்பொறிகளைச் சுமந்து நடந்து, பிறகு அவைகளின் வெப்பத்தைத் தாங்கமாட்டாதவனாய் அவைகளை அக்கினி தேவனிடம் ஒப்புவிக்க, அவன் அவைகளை ஒருநாழிகை சுமந்து சென்று கங்கையிற் சேர்த்தான். உடனே கங்காநதி வற்றிப்போயிற்று. கங்காதேவியானவள் அவைகளைத் தன் சிரமேல் தாங்கிச் சென்று சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். உடனே கங்காநதி முன்போல் நீர் நிறைந்து ஓட ஆரம்பித்தது. அப்பொழுதே அந்த ஆறு தீப்பொறிகளும் மலர்ந்த செந்தாமரை மலர்களைப்போல் அமரவும், அவைகளினின்றும்,

"அருவமு முருவுமாகி யநாதியாய்ப் பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்
[கொண்டே
யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய!"

கருணைபொழியும் ஆறு திருமுகங்களையும் பன்னிரண்டு கரங்களையும் கொண்டு அநாதியாயுள்ள பரம்பொருளானவர் திருமுருகனாக வந்து தோன்றினார். உடனே தேவதுந்துபிகள் முழங்கின; வேதங்களெல்லாம் ஆரவாரித்தன; பிரமதேவர், திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் மலர்களைத் தூவித் துதித்துத் தம்மை யாட்கொள்ளும்படி பிரார்த்தித்தார்கள். உலகத்திலுள்ள உயிர்த்தொகைகளுக்கெல்லாம் நன்மையைக் காட்டும் குறிகளும் அசுரர்களுக்கெல்லாம் மரணத்தைக் காட்டும் குறிகளும் தோன்றின.

வேதங்களின் முடிவினாலும் வாக்கினாலும் மனத்தினாலும் அளவிடமுடியாதவராய் எங்கும் நிறைந்து வியாபித்திருக்கும் நிமல மூர்த்தியாகிய சிவபெருமானே ஆறு திருமுகங்களையுடைய திருவுருவத்துடன் தோன்றி அருளோடு சரவணப் பொய்கையில் நறுமணங்கமழும் செந்தாமரை மலரின்மீது வீற்றிருந்தருளினார். அப்போது திருமால் முதலிய தேவர்கள் கார்த்திகைப் பெண்கள் ஆறு பேர்களையும் அழைத்து, குமாரக்கடவுளுக்குப் பால் கொடுத்து வளர்த்து வரும்படி கட்டளையிட, அவர்கள் மனமகிழ்ந்து, சரவணப் பொய்கையில் குழந்தையாக எழுந்தருளியிருந்த அக்கடவுளை யடைந்து துதிக்க, தம்மை யடைந்தவர்களுக்கு வேண்டியவற்றை வேண்டியவாறு வேண்டியபொழுதே உதவியருளும அப்பெருமான் அந்த ஆறு பெண்களும் மகிழ்வுறுமாறு ஆறு குழநதை



பழனியாண்டவர்

களின் உருவங்களை எடுத்துக்கொண் டருளினார். ஆறு கார்த்திகைப் பெண்களும் பேருவகையடைந்து அந்த ஆறு குழந்தைகளுக்கும் தங்கள் பாலமுதத்தை யூட்டி அன்புடன் வளர்த்துவந்தனர். அப்போது குமாரக் கடவுள் அவர்கள் அளவற்ற ஆநந்தத்தை யனுபவிக்குமாறு பல திருவிளையாடல்களைப் புரிந்தருளினார்.

---

## இருபத்தேழாவது அத்தியாயம்

### இலக்கத்தோன்பது வீரர்களின் அவதாரம்

நிற்க, அத் தீப்பொறிகள் எம்பெருமானுடைய நெற்றிக்கண்களினின்றும் உதித்து எங்கும் பரவிய காலத்தில் உமாதேவியார் அச்சமுற்று எம்பெருமான் பக்கத்தைவிட்டு நீங்கி ஓடியபொழுது, அத்தேவியாரின் கால்களிலுள்ள சிலம்புகள் ஒன்றோடொன்று மோத, அவைகளிலுள்ள நவரத்தினங்கள் சிதறிவிழுந்தன. அந்த நவரத்தினங்களில் உமாதேவியாரது உருவம் பிரதிபலித்ததைக் கண்ட சிவபெருமான் அந்த இரத்தினங்கள் உமாதேவியாரது உருவத்தையுடைய கன்னிகைகளாக ஆகவேண்டுமென நினைத்தருளினார். அவைகள் அவ்வாறே கன்னிகைகளாக ஆயினபின், அக்கன்னிகைகளாகிய நவசக்திகள் எம்பெருமான் அருளினால் கருத்தரித்தனர். அப்போது அவர்கள் தேகங்கள் வியர்க்க, அவர்கள் வியர்வையினின்றும் எம்பெருமான் அருளினால் இலக்ஷம் வீரர்கள் செம்பொன் னுடைகளைத் தரித்துக்கொண்டும், கரங்களில் கத்திகேடயங்களைத் தாங்கிக்கொண்டும் உதித்தனர். அவர்கள் சிவபெருமானது திருவடிகளை வணங்கித் துதிக்க, எம்பெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் யாவரும் சூரபதுமனாதியர்களை யழிக்கப் பிறந்துள்ள எமது புதல்வனாகிய குமாரக் கடவுளுக்குப் படைகளாக

இருந்து வெற்றியடைவீர்களாக!" என்று திருவாய்மலர்ந் தருளினார்.

உமாதேவியாரது பாதங்களைப் பணிந்து அத்தேவி யாரின் அருளைப்பெற்ற நவசக்திகள் வேறோரிடத்துக்குச் சென்று புதல்வர்களைப் பெற்றார்கள். சிவபக்தியிற் சிறந்த வர்களும், எம்பெருமானது அருளைப்பெற்ற மெய்யன் பர்களும், நந்திகணத்தைச் சேர்ந்தவர்களுமான அப்புதல் வர்கள் வளர்ந்த அவயவங்களுடன் பொன்னுடையணிந்து அந்நவசக்திகளின் நாபியின் வழியே பிரமதேவரைப் போல் பிறந்து, சிவபெருமான் முன்பு தங்களுக்குத் தந் தருளிய வீரவாகுதேவர், வீரகேசரி, வீரமாமகேந்திரர், வீரமாமகேசுவரர், வீரமாபுரந்தரர், வீரராக்கதர், வீரமார்த் தாண்டர், வீராந்தகர், வீரதீரர் என்னும் திருநாமங்களை யே பெற்றார்கள்.

அந்த நவவீரர்களும் உமாதேவி சமேதரான சிவ பெருமானது திருவடிகளை வணங்கி நிற்க, எம்பெரு மான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாட் படையை யளித்து, "நவசக்திகளின் வியர்வையிலிருந்து உதித்த இலக்ஷம் வீரர்களுடன் நீங்களும் சேர்ந்து உங் களுள் முதல்வனாகிய குமாரசுவாமியைப் பிரியாமல் அவ னது ஏவல்களைச் செய்துகொண்டிருங்கள்!" என்று கூறியருளினார்.

பிறகு சிவபெருமான உமாதேவியாருடன இடப வாகனத்தின்மீ தேறி, சிவகணங்களும், திருமால் முதலிய தேவர்களும் புடை சூழ்ந்துவரப் புறப்பட்டுச் சரவணப் பொய்கைக்குச் சென்று, இடப வாகனத்தினின்றும் இறங்கி, அங்கு ஆறு கார்த்திகைப் பெண்களால் வளர்க் கப்பட்டு ஆறு குழந்தைகளாகத் திருவிளையாடல் செய்து வந்த தங்கள் அருமைப் புதல்வனை அழைத்து வரும்படி

உமாதேவியாரிடம் கூறியருள, உமாதேவியார் சென்று குமாரசுவாமியின் ஆறு திருவுருவங்களையும் தமது இரு கரங்களினாலும் அன்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டார். உடனே குமரக்கடவுள் ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் உள்ள ஒரு திருவுருவத்தைக் கொண்டருளினார்.

பிறகு உமாதேவியார் தாமே பாலை அக்கந்தவேளுக்கு ஊட்டியருளி, அவரைச் சிவபெருமான் திருமுன்னே வணங்கச் செய்ய, எம்பெருமான் அக்குழவியைத் தமது திருக்கரங்களில் வாங்கித் தமது மார்போடு அணைத்துக் கொண்டு விடையிலேறி, அவரைத் தமது பக்கத்திலிருத்திப் பிறகு உமாதேவியாருக்குக் கைலாகு கொடுத்துத் தூக்கித் தமது இடப்பாகத்தில் அமர்த்தியருளினார். அப்போது சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் மத்தியில் சுப்ரமண்யக் கடவுள் வீற்றிருந்த சச்சிதானந்த சொரூபத்தை யாவரும் கண்டு பரமானந்தத்தில் ஆழ்ந்தனர். பிறகு எம்பெருமான் யாவருடனும் திருக்கைலாயத்துக்கு மீண்டருளினார்.

## இருபத்தெட்டாவது அத்தியாயம்

### குமாரசுவாமியின் பால லீலைகள்

குமாரக்கடவுள் தமது தம்பியர்களான இலக்ஷத்தொன்பது வீரர்களுடன் பிரபஞ்சமெங்கும் உலாவி, அஷ்ட குலபர்வதங்களையும் ஓரிடத்தில் ஒன்றாகக் கூட்டுவார்; பின்பு அப்பர்வதங்களை இடம் மாறுதலாகப் பூமியில் வைப்பார்; எல்லாக் கடல்களையும் ஒன்றாகச் சேர்ப்பார்; பாதாளத்திலுள்ள சர்ப்பங்களையெல்லாம் பிடித்துக் கொண்டு வந்து பூமியிற் சேர்ப்பார்; பூமியிலுள்ள மலைகளையெல்லாம் பாதாளத்தில் அழுத்துவார்; ஆகாயத்

தில் செல்லும் விற்கள் இரண்டையும் பிடித்து வளைத்து, நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் உருண்டைகளாகக் கொண்டு, தேவர்களது முடி, தலை, மார்பு, தோள், கழுத்து, முகம் இவைகளின்மீது பிரயோகித்து, வில்வித்தையில் தமக்குள்ள திறமையைக் காட்டுவார். இவ்வாறு மானிடர்களும் தேவர்களும் அச்சங்கொண்டு மனமும் உடலும் நடுங்குதலன்றிச் சிறிதும் தீங்கடையாத வண்ணமாக குமாரக் கடவுள் தமது திருவிளையாடல்களைச் செய்தருளினார்.

அவரது திருவிளையாடல்களைக் கண்டு அவரது திருவுருவத்தைக் காணாது மயங்கி அஞ்சிய திக்பாலகர்கள், சூரியன், சந்திரன் முதலிய நவக்கிரகங்கள் முதலாயினோர் இந்திரனையடைந்து தங்கள் துயரத்தை எடுத்துக்கூற, இந்திரன் தானும் அவ்வாறே மயங்கித் துன்புற்றதாகக் கூறி, பிரமதேவரிடம் போவோம் வாருங்க ளென்று அழைத்துக்கொண்டு புறப்பட்டான். அப்போது அவர்களுடைய மனமயக்கத்தை நீக்கத் திருவுளங்கொண்ட ஷண்முகப் பெருமான் ஒரு திருமுகத்துடன் குழந்தையைப்போல ஒரு மலையில் அவர்கள் கண்களுக்குப் புலப்படுமாறு தோன்றி, தாமரைப் பூவின் இதழ்களைக் கிள்ளியெறிவதைப்போல் அம்மலையின் சிகரங்களைப் பிடுங்கியெறிய ஆரம்பித்தார். அதுகண்ட தேவர்கள் தங்களை மயக்கித் துன்புறுத்திய கொடியவன் அவனேயென்று கூறி, அவருடன் ஆங்கே போர்செய்து வெல்லவேண்டுமென்று தீர்மானித்தனர். உடனே இந்திரன் தனது ஐராவதமென்னும் யானையை நினைத்து, அது அங்கே வரவும் அதன்மீதேறிப் போர்க்கோலங் கொண்டு, தேவர்களுடன் சென்று குமாரக் கடவுளைச் சூழ்ந்துகொண்டான்.

தேவர்களுக்கும் குமாரக் கடவுளுக்கும் கொடும் போர் நடந்தது. இந்திரனுடைய வஜ்ராயுதம் பொடியாயிற்று. வெள்ளை யானை மடிந்தது; பிறகு இந்திரன் முதலான அநேக தேவர்கள் அழிந்தனர்; எஞ்சியிருந்த தேவர்கள் பயந்து ஓடத் தொடங்கினர். அதைப் பார்த்த நாரத மாமுனிவர் அதைத் தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவானுக்குத் தெரிவித்தார். பிரகஸ்பதி பகவான் குமாரக் கடவுளை அடைந்து, அவரது திருவடிகளை வணங்கி, "சூரபதுமன் முதலாயினோரை அழித்துத் தன் அரசாட்சியை மீண்டும் பெறத் தேவரீரது பாதகமலங்களில் அடைக்கலம் புகுந்திருக்கும் இந்திரனும் ஏனைய தேவர்களும் தேவரீரது மகிமையை அறிய மாட்டாதவராய்ப் பேதைமையினால் தேவரீருடன் போர் புரிந்தார்கள். அப்பெருங் குற்றத்தைத் தேவரீர் பொறுத்தருளவேண்டும்!" என்று கூறிப் பிரார்த்திக்க, குமாரக் கடவுள் கருணை கூர்ந்து அத் தேவர்களையும் வெள்ளை யானையையும் எழுப்பி, அவர்களுடைய மருட்சி முற்றிலும் நீங்கி அவர்கள் தம்மை நன்றாய் அறியுமாறு அவர்களுக்குத் தமது விசுவரூபத்தைக் காட்டியருளினர்

பிறகு தேவர்கள் திருக்கைலாயத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு பெரிய மலையில் ஓர் அற்புதமான திருக்கோவிலைக் கட்டுவித்து, அதில் முருகப் பெருமானை நவரத்தினங்களிழைத்த பொற்பீடத்தில் அமர்த்தி, ஆகாய கங்கையினால் அவருக்கு அபிஷேகஞ் செய்து, பீதாம்பரம் முதலியன சாத்தி, நறுமணம் மிக்க சந்தனம் பூசி, அழகிய ஆபரணங்களை அணிவித்து, தேன் பெருகும் மலர் மாலையைச் சூட்டி, முறைப்படி அப்பெருமானை அருச்சித்து ஆராதித்தார்கள். அன்றுமுதல் அம்மலைக்குக் கந்த வெற்பு என்னும் திருநாமம் வழங்கிவருகிறது.

குமாரக் கடவுள் திருக்கைலாயத்துக்குச் சென்றருள, தேவர்கள் தத்தம் நகரங்களுக்குச் சென்றார்கள்.

முருகப்பெருமான் திருக்கைலாயத்தி லிருக்கையில், நாரதமாமுனிவர் பல தேவர்களும் முனிவர்களும் தம்மைச் சூழ்ந்து அமர்ந்திருக்க ஒரு சிறந்த வேள்வியைச செய்தார். வேள்வி நடத்தும் முறையில் ஏதோ வொரு குற்றம் ஏற்பட்டதனால், யாகத்தில் தேவர்களுக்கு அவிர்ப் பாகம் அளித்த ஓமத் தீயினின்றும் ஒரு ஆட்டுக் கடாவானது எழும்பி ஆரவாரித்து உலகத்திலுள்ள உயிர்களை யெல்லாம் அழிக்கத் தொடங்கிற்று. அது கண்ட நாரதமாமுனிவர் மிகவும் மனம் வருந்தி, அவ்வாட்டுக்கடாவை அழித்தருளும்படி சிவபெருமானைப் பிரார்த்திக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் திருக்கைலாயத்துக்குச் சென்றார். அங்கு சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவிலுக்குச செல்லும் வழியில் குமாரக் கடவுளைக் கண்டு அம்முனிவர் களிப்புற்று, அந்த ஆட்டுக் கடாவை அழித்தருளும்படி அப்பெருமானையே பிரார்த்தித்தார். உடனே அப்பெருமான் தமது தம்பியர்களான நவ வீரர்களில் முதல்வரான வீரவாகு தேவரை அழைதது அக்கடாவைப் பிடித்து வரும்படி கட்டளையிட் டருளினார். வீரவாகு தேவர் உடனே புறப்பட்டுச் சென்று உலகங்களெல்லாம் திரிந்து கடைசியாகப் பிரமலோகத்தையடைந்து, அங்கு உலாவிக் கொண்டிருந்த கடாவைப் பிடித்துக் கொண்டுவந்து முருகப் பெருமான் திருமுன்னர் நிறுத்தினார். அப்போது நாரதமாமுனிவர் அக்கடாவை வாகனமாக்கிக் கொள்ளும்படி அப்பெருமானை வேண்டிக்கொள்ள, அப்பெருமான் அதற்கிசைந்து நாரத மாமுனிவருக்கு விடைகொடுத் தனுப்பினார்.

# இருபத்தோன்பதாவது அத்தியாயம்

## குமாரசுவாமி பிரமனுக்குப் புத்தி புகட்டியது

பிறகு ஒரு நாள் கைலாயத்தில் சிவபெருமானது திருக்கோவிலின் வாயிலில் குமாரக்கடவுள் தம் தம்பிமார்களுடன் விளையாடிக்கொண்டிருக்கையில், பிரமதேவர் எம்பெருமானைத் தரிசித்துவிட்டுத் திரும்பி வந்தார். பிரமதேவர் குமாரக் கடவுளைக் கண்டும், அவரைச் சிறுகுழந்தையாகக் கருதி, அவரை வணங்காமல் அகங்காரத்துடன் நடந்து சென்றார். உலகத்திலுள்ள அகங்காரத்தை யொழித்து ஞானத்தைப் புகட்டுவதற்காகவே திருவவதாரஞ் செய்த முருகப்பெருமான் அதுகண்டு, கருணை நோக்கத்துடன் பிரமதேவரை யழைத்துப் பிரணவத்தின் பொருளை யுரைக்கும்படி கேட்டருளினார். அகங்காரத்தினால் மயக்கமுற்றிருந்த பிரமதேவர் சகலத்துக்கும் காரணமான பிரணவத்துக்குப் பொருளுரைக்க முடியாமல் விழிக்கவே, குமாரசுவாமி பிரமதேவரைக் குட்டித் தண்டித்து, ஜீவராசிகளடைந்த துன்பங்களுக்கெல்லாம் காரணமான அஞ்ஞானத்துக்கு அவர்களைப் படைத்தவராகிய பிரமதேவரது அஞ்ஞானமே காரணமாதலால், அஞ்ஞானம்நிறைந்த மனத்தையுடைய பிரமதேவரை அதன்பிறகு சிருஷ்டிசெய்ய விடுவது தகுதியல்லவென்று தீர்மானித்து பிரமதேவரைத் தளையிலிடும்படி தம்பிமார்களுக்குக் கட்டளையிட்டு, கந்தவெற்புக்குச் சென்று, தாமே சிருஷ்டித்தொழிலை நடத்திவந்தார். அவ்விஷயத்தை மகாவிஷ்ணுவினால் அறிந்துகொண்ட சிவபெருமான் திருநந்திதேவரை யழைத்து, பிரமதேவரைச் சிறையினின்றும் விடுவிக்கும்படி தாம்கட்டளையிட்டதாக முருகப்பெருமானிடம் சென்று தெரிவிக்கும்படி கட்டளையிட்டருளினார். நந்தியெம்பெருமான் ஞானதேசிகனாகிய முருகப்பெருமானது திருமுன்னர் அச்சத்துடன்

சென்று வணங்கி, எம்பெருமான் கட்டளையைத் தெரிவிக்க, முருகப்பெருமான் பிரமதேவரைச்சிறையினின்றும் விடுவிக்க முடியாதென்று கண்டிப்பாய்க் கூறியருளினர்.

நந்தியெம் பெருமான் திருக்கைலாயத்துக்குத் திரும்பிச்சென்று சிவபெருமானிடம் முருகப் பெருமான் அளித்த விடையைத் தெரிவிக்க, சிவபெருமான் தாமே முருகப்பெருமானிடம் சென்று பிரமதேவரைச் சிறையிலிருந்து விடுவிக்காததற்குக் காரண மென்னவென்று வினவினர். அதற்கு முருகப்பெருமான் ஜீவராசிகளிடத்துத் தமக்குள்ள பரிவும், பிரமதேவர் தமது அஞ்ஞானத்தினால் அவைகளுக்கு இழைத்த பெருந்தீங்குமே அவரைச் சிறையிலிட்டதற்கும் சிறையினின்றும் விடுவிக்காததற்கும் காரணங்களெனப் பதிலுரைக்க, சிவபெருமான் குமாரசுவாமியை நோக்கி, "பிரணவத்தின் பொருளைக் கூறும்படி பிரமதேவரைக் கேட்டாயே; அதன் பொருள் உனக்குத் தெரியுமோ?" என்று கேட்டருளினர். அதன் பொருள் தமக்குத் தெரியுமென முருகப் பெருமான் உரைக்க, சிவபெருமான், "அப்படியாயின், அதைச் சொல், கேட்போம்!" என்று உரைத்தருளினர். அப்போது குமாரசுவாமி, "பிரணவத்தின் பொருள் ஒரு குருவே தமது சிஷ்யனுக்குப் போதிக்கத் தக்கது" என்றுரைக்க, சர்வேசுவரரான சிவபெருமான் தமது செல்வப் புதல்வனைக் குருவாக அமர்த்தித் தாம் சிஷ்யனாக வணங்கி நின்று, குமாரக் கடவுள் உரைத்த பொருளைக் கேட்டு மனமகிழ்ந்தார். பிறகு குமாரக்கடவுள் சிவபெருமான் பணித்தருளியபடி பிரமதேவரைச் சிறையினின்றும் விடுவித்து, அவருக்கு ஞானத்தைப் போதித்து, மீண்டும் சிருஷ்டித்தொழிலைச் சரியாக நடத்தி வரும்படி கட்டளையிட்டு, அவருக்கு விடைகொடுத் தனுப்பினர்.

# முப்பதாவது அத்தியாயம்

## ஷண்முகநாதன் மகிமை

முருகக் கடவுள், பிரணவத்தின் பொருளையறியாமல் தாமே பரம் பொருளென்று அகங்காரமடைந்த பிரம தேவரைச் சிறையிலடைத்து, தாமே சிருஷ்டி கர்த்தாவாக விருந்து சிருஷ்டித்து வந்ததைச் சிவபெருமான் உமாதேவியினிடம் சொல்ல, உமாதேவி மிகுந்த ஆச்சரியத்துடன் சிவபெருமானை நோக்கி, "மகாபிரபு! ஷண்முகனுடைய உருவம் எப்படிப்பட்டது? அவன் பராக்கிரமம் எப்படிப்பட்டது? அவன் யார்? அவன் மகிமையென்ன? இவைகளையெல்லாம் அடியேனுக்கு உரைத்தருளவேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்தித்தாள்.

அப்போது சிவபெருமான் முருகக் கடவுளது பெருமையைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாயினார்.

"நமது குமாரனாகிய ஷண்முகன் பாவங்களை யழிப்பவனும், இரஜோகுண மற்றவனும், என்றும் அழிவில்லாதவனும், சோகமற்றவனும், சமுசாரமாகிய வியாதிக்கு ஒரே வைத்தியனும், தாபமற்றவனும், சத்தியபுருஷனுமா யிருக்கிறான். மகா சேனைகளாகிய ஆன்ம கோடிகள் மெய்யன்போடு அவனை வணங்கி அவன் சுவாதீனத்திலிருப்பதனால் அவனுக்கு **மகாசேனன்** என்னும் திருநாமமுமுண்டு. தேவசேனைகளை அவன் துக்கத்தினின்று விடுவித்தபடியால், அவன் **சேனானி** என்னும் திருநாமம் பெற்றான். கந்தனுடைய எண்ணிறந்த திருநாமங்களில் ஒன்றையேனும் ஒருவர் உரைத்திடுவாரேயாகில், அவருக்கு இவ்வுலகத்தில் தருமம், அர்த்தம்,

காமியம், மோக்ஷம் என்னும் நான்கு வத புருஷார்த்தங்களும் கைகூடுவது மன்றி, அவரைப் பிரமஹத்தி முதலிய பாவங்கள் கூட அணுகமாட்டா.

“நமது ஷண்முகன் ஒளிப் பொருள்கள் யாவற்றையும்விட மிகுந்த ஒளியுடையவனும், உவமையற்ற பரஞ்சோதிப் பொருளுமாய் இருக்கிறான். பரப்ரும்மமாகிய குமாரஸ்வாமி ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு புயங்களும் பதினெட்டு விழிகளும் பொருந்திய அழகிய திருமேனியை உலகத்துக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டிய நோக்கத்துடன் அங்கீகரித்தான். அத்திருவுருவத்தைத் தியானிப்பவர்கள் சகல பாக்கியங்களையும் பெற்று யாவராலும் புகழப்படுவார்கள்; அவர்களால் அவர்கள் வசிக்கும் நாடுகளை பரிசுத்தமாகும்; அவர்கள் தேவர்களாலும் பூஜிக்கப்படத் தக்கவர்கள்.

“வாயுதேவன் காற்று வீசுவதும், சூரியன் ஒளி வீசுவதும், அக்கினிதேவன் தேவர்களுக்குரிய அவிர்ப்பாகங்களையும் பிதுருக்களுக்குரிய கவ்வியங்களையும் அவரவர்களுக்குச் சேர்ப்பிப்பதும், சகல பதார்த்தங்களையும் பக்குவப்படுத்துவதும், இயமன் பாவஞ்செய்தவர்களைத் தண்டிப்பதும், பிரமன் உயிர்களைச் சிருஷ்டிப்பதும், நாராயணன் ஜகங்களைப் பரிபாலனஞ் செய்வதும், காலாக்கினி ருத்திரன் பிரளயகாலத்தில் சகல ஜகங்களையும் அழிப்பதும், பரப்ரும்ம சொரூபியாகிய சுப்ரமண்யனுடைய ஆக்ஞையின்படியே யாகும். பூமி, மலைகள், சமுத்திரங்கள், சூரியன், சந்திரன் முதலிய ஒளித்திரள்கள், விஷ்ணு முதலிய தேவர்கள், சகல சராசரமான ஜகங்கள் இவைகளெல்லாம் சுப்ரமண்

யனுடைய திருவாக்கின் கட்டளை வசமாகவே இருக்கின்றன.

“கந்தன் ஸகல தேவ ஸ்வரூபனும், ஸகல லோக ஸ்வரூபனும், ஸகலப்பிராணி ஸ்வரூபனும், நித்தியமான ஸாக்ஷாத் ப்ருஹ்ம ஸ்வரூபனுமாகிறான். அளவற்ற உருத்திர கோடிகளில் இவனே காலாக்கினி ருத்திரன். சங்கம், சக்கரம், கத்தி இவைகளைத் தரித்த அநேக விஷ்ணுக்களில் இவன் மகாவிஷ்ணு விஷ்ணுவினுடைய நான்கு மூர்த்திகளில் இவன் வாசுதேவமூர்த்தி அவருடைய பத்து அவதாரங்களில் இவனே ஸ்ரீராமன். வேதங்களுக்கு அதிபதியும் பிரமனும் இவனே. ஏகாதச ருத்திரர்களில் இவன் சங்கரன் அசுரர்களில் இவன் பிரகலாதன். உலகினில் தேவர்கள், மானிடர்கள், விலங்கினம் முதலியவைகளில் எங்கு பராக்கிரமம், ஸம்பத்து, காந்தி, கல்வி, அறிவு இவைகள் அதிகமாகக் காணப்பட்டாலும், அவைகள் ஷண்முகனது மகிமையினால் ஏற்பட்டவைகள் என்று அறிந்து கொள்!

“முருகன் ஞான சொரூபனும், சச்சிதானந்த சொரூபனும், களங்கமற்றவனுமாயிருக்கிறான். ஒரு விளக்கினின்று மற்றோர் விளக்கு ஏற்படுவது போல் ஒருவனுடைய ஆத்மாவே அவனுடைய புத்திரனாகிறது. அவ்வாறு நம்மிடத்துண்டான இப்புத்திரன் மிகுந்த மகிமையுள்ளவன். நமது மைந்தனுடைய மகிமையை நூறுகோடி வருஷ காலம் இடைவிடாது சொன்னாலும், சொல்லி முடிப்பது சாத்தியமன்று.”

இவ்வாறு சிவபெருமான் உலகத்துக்கு உதவிபுரியும்

பொருட்டு குமாரக் கடவுளின் மகிமையை உமாதேவி யாருக்கு எடுத்துரைத்தார். இதைப் படிக்கும் எல்லோரும் முருகக்கடவுளின் தன்னருளைப்பெற்று உய்வாராக!

## முப்பத்தோராவது அத்தியாயம்

## முருகப்பெருமான் போருக்குச் செல்லுகிறர்

பிரமதேவரைச சிறையினின்றும் விடுவித்து, அவருக்கு ஞானோபதேசஞ் செய்து அவருக்கு விடைகொடுத் தனுப்பிய பிறகு, முருகபெருமான் தம்மை மணந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் சரவணப் பொய்கையில் தம்மை நோக்கி அருந்தவம் புரிந்துகொண்டிருந்த சுந்தரவல்லி, அமுதவல்லி என்னும் திருமாலின் புத்திரிகளின் முன்னே *தோன்றி, "மூத்தவளாகிய அமுதவல்லியே! நீ இந்திரனுக்கு மகளாகி வளர்ந்து கொண்டிரு! இளையவளாகிய சுந்தரவல்லியே! நீ நிலவுலகத்தில் சாந்த குணத்தினையுடைய சிவமுனிவரது புத்திரியாகப் பிறந்து வேடர் மகளாக வளர்ந்துகொண்டிரு! யாம் வந்து உங்களை மணந்து கொள்வோம்!" என்று கூறி அவர்களுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டு, கந்த வெற்புக்குச் சென்று அங்கு சிலகாலம் எழுந்தருளியிருந்து, பிறகு திருக்கைலாயத்துக்குச் சென்று பார்வதி பரமேசுவரர்களை வணங்கி அவர்களுக்கு மத்தியில் அருளுடன் எழுந்தருளியிருந்தார்.

அப்போது இந்திரன், திருமால் பிரமதேவா முதலிய தேவர்களுடன் திருக்கைலாயத்தையடைந்து, முக்கணெந்தையை வணங்கி, தன் குறைகளை நீக்கியருள வேண்டுமென்று பிரார்த்திக்க, கருணைக்கடலாகிய சிவபெருமான் முருகக் கடவுளை நோக்கி, "குமரனே! உலகத்தை வருத்திப் பல உயிர்களுக்கும் துன்பத்தைச்

செய்து, தேவர்களது பொன்னுலகத்தைத் தீக்கிரையாக்கி, அழியாத வலிமையுடன் வாழ்ந்துவரும் சூரபதுமனை அவனுடைய அசுரக் கூட்டங்களுடன் அழித்து, வேதத்திற் கூறியுள்ள நெறியை நிலைநிறுத்தி, இந்திரனுக்கு அவனரசை மீண்டும் அளித்து, தேவர்களது துன்பத்தை யொழித்து மீண்டு வரக்கடவாய் !'' என்று திருவாய்மலர்ந்தருளினர். பிறகு சிவபெருமான் பதினொரு உருத்திரர்களையும் எறியீட்டி, கொடி, வாள், வஜ்ராயுதம், அம்பு, அங்குசம், கண்டாமணி, தாமரைபோன்ற ஓர் ஆயுதம், தண்டம், வில், மழு என்னும் பதினொரு சிறந்த படைக்கலங்களாகச் செய்து அவைகளை ஷண்முகப்பெருமானுக்கு அளித்தார். பிறகு அப்பெருமான், பிரயோகித்தால் வெகுகாலமாயுள்ள அண்டங்களிலுள்ள பஞ்சபூதங்களையும் அழிக்கத்தக்கதும், சகல ஜீவராசிகளையும் ஒரே நொடிப்பொழுதில் அழிக்கத்தக்கதும், எவர்மேல் பிரயோகித்தாலும் அவரது திறமையையும் வரங்களையும் அழித்து அவருயிரை உண்ணத்தக்கதும், எல்லாப் படைக்கலங்களுக்குள்ளும் முதன்மையானதாக உள்ளதுமான ஓர் ஒப்பற்ற வேலாயுதத்தைப் படைத்து குமாரக் கடவுளது திருக்கரத்திற் கொடுத்தருளினர்.

பிறகு சிவபெருமான இலக்ஷத்தொன்பது வீரர்களையும், கணத்தலைவர்களையும், இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகளையும் ஷண்முகப் பெருமானுக்குத் துணையாகச் சென்று அசுரர்களை வென்று அழித்து மீண்டுவரும்படி கூறி, அவர்களுக்குச சிறந்த படைகளைக் கொடுத்தருளினர். பிறகு எம்பெருமான் பஞ்சபூதங்களின் வலிமையைப் பெற்றுள்ளதும், இலக்ஷம் குதிரைகள் பூட்டப்பெற்றதும், மனத்திலும் அதிகவேகத்துடன்

செல்லத்தக்கதுமான ஓர் ஒப்பற்ற தேரைச் சிருஷ்டித்து அதைக் குமாரக் கடவுளுக்குக் கொடுத்தருளினார்.

குமாரக்கடவுள் தமது தாய்தந்தையர்களை வணங்கி விடைபெற்று, தமது துணைவர்களும், பூதசேனைகளும், இந்திரன் முதலிய தேவர்களும் புடைசூழ, வாயுதேவனைச் சாரதியாக வுடையதும் சிவபெருமானால் அளிக்கப் பெற்றதுமான தேரின்மீ தேறிய பேராரவாரத்துடன் அசுரர்களை அழிக்கச் சென்றார் வழியில் எதிர்ப்பட்ட தாரகனது மாயாபுரியை யடைந்ததும், ஷண்முகப்பெருமான் தேவர்களது வேண்டுகோளுக் கிணைந்து தமது அடுத்த தம்பியாரான வீரவாகு தேவரை யழைத்து, தாரகனையும் கிரௌஞ்சத்தையும் அழித்து வரும்படி யனுப்பினார் வீரவாகு தேவர் சேனைகளுடன் சென்று தருமமாகப் போர்செய்து தாரகனை வென்று அவனது அவுணசேனைகளை யழித்தருளினார். கடைசியில் தாரகன் போரில் புறங்காட்டியோடி, கிரௌஞ்ச மலைக்குள் உள்ள ஒரு குகைக்குள் ஒளித்துக் கொண்டான். அவனைப் பின்தொடர்ந்து சென்ற வீரவாகு தேவரும், அவரைக் காணுமல் வருந்தித் தேடிச் சென்ற இலக்ஷத்தெட்டு வீரர்களும் பூதத்தலைவர்களும் அம்மலைக்குள் அகப்பட்டு, அதன் மாயையினல் மயங்கிச் சோர்வற்றனர். அதை யறிந்த ஷண்முகப்பெருமான் தமதுதேரைப் போர்க்களத் துக்குச் செலுத்தச் சொல்லி, கிரௌஞ்சத்தின் உதவியினல் தாரகன் மாயப்போர் செய்ததைக்கண்டு, தமது ஒப்பற்ற வேலாயுதத்தை எடுத்து, தாரகனைக் கொன்று கிரௌஞ்ச மலையைப் பிளந்தழித்து அதனுள் சிறைப்பட்டுள்ள தமது துணைவர்களையும் பூதத்தலைவர்களையும் மீட்டுக்கொண்டு கணப்பொழுதில் மீண்டு வரும்படி கட்டளையிட் டருளினர். ஒப்பற்ற வேலாயுதமானது



வள்ளிநாயகி தினைப்புனம் காப்பது.

எம்பெருமான் இட்ட கட்டளையைக் கணப்பொழுதுக்குள் செய்து மீண்டது.

பிறகு முருகக் கடவுள் தம் துணைவர்களுடனும் சேனைகளுடனும் தேவர்களுடனும் புறப்பட்டுத் திருச்செந்திற்பதியை யடைந்து, தமது கருணை மிகுதியினால் சூரபதுமனுக்கு நற்புத்தி கூறி அவனைத் திருத்த முயலாமல் அவனை யழிப்பது தருமமன்றெனை நிச்சயித்து, சூரபதுமனிடம் தூதுவராகச் சென்று திரும்பவல்லவர் வீரவாகுதேவர் ஒருவரேயாதலால் அவரை யழைத்து, சூரபதுமனிடம் சென்று தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்துப் பிழைத்துப் போகும்படி சொல்லி அவன் கருத்தை யறிந்து வரும்படி கட்டளையிட்டார். வீரவாகுதேவர் அவ்வாறே சூரபதுமனிடம் சென்று எம்பெருமான் கூறியதைத் தெரிவித்து, அவன் அதற்கிசையாமல் தம்மைக் கட்டும்படி ஆயிரம் அவுணவீரர்களுக்குக் கட்டளையிட்டதைக் கண்டு, அவ்வீரர்க ளனைவரையும் ஒரு திருக்கரத்தினாற் பிடித்துத் தரையில் மோதிக் கொன்று, வீரமகேந்திரபுரியையும் அழித்து, மீண்டு எம்பெருமான் திருமுன்னரை யடைந்து, நடந்ததைகளை விண்ணப்பஞ் செய்தார்

சூரபதுமனது அமைச்சர்களில் ஒருவனைத் தவிர மற்ற யாவரும் சூரபதுமனையே புகழ்ந்துபேச, மகிடன் என்னும் மந்திரிமட்டும் விஷ்ணுவை வென்ற தாரகனையும், மாயையில் நிகரற்ற கிரௌஞ்சத்தையும் ஒருங்கே கணப்பொழுதில் அழித்த வீரனைச் சிறுபாலகனென்று அலக்ஷியமாகக் கூறுதல் அறிவுடையோர்க் கழகல்லவென்று கூறினான் சூரபதுமனது எஞ்சிய தம்பியான சிங்கமுகாசுரன் தன் அண்ணனை நோக்கி, தேவர்களைத் துயருறச் செய்தால் அவன் வளப்பங்க ளனைத்தும்

வேரோடழியு மென்றும், சுபரமண்யக் கடவுள் தங்களை அழிக்கவந்த சிவசக்தியே யாகுமென்றும், தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்து அப்பெருமான் திருவருளைப் பெறுதலே உய்யுநெறி யென்றும் கூறினன். சூரபதுமன் அகங்காரத்தின் உருவமாதலால் அந்த நற்புத்தியைக் கேளாமல் போருக்கு ஆயத்தமானன்.

---

## முப்பத்திரண்டாவது அத்தியாயம்

### ஷண்முகநாதன் அசுரர்களை அழிக்கிறர்

போர் தொடங்கிற்று. முதல் நாள் சூரபதுமன் புத்திரனை பானுகோபன் அவுணசேனைகளுடன் போருக்கு வர, வீரவாகுதேவர் எம்பெருமான் பணித்தபடி சென்று பானுகோபனை வென்றார். தோல்வியடைந்த பானுகோபன் மோகப்படையை விட, வீரவாகு தேவரும் அவருடைய சேனைகளும் மயக்கமுற்றனர். அப்போது சுப்ரமண்யக் கடவுள் அமோகப் படையை விடுத்து அம்மயக்கத்தை நீக்கியருள, வீரவாகுதேவர் பானுகோபனை அழிப்பதற்காகச் சிவபடைக்கலத்தை யெடுத்தார். அதுகண்ட பானுகோபன் அதை எதிர்க்க வல்ல அஸ்திரம் தன்னிடமில்லாததனல் போர்க்களத்தைவிட்டு நீங்கினன்.

இரண்டாம் நாள் சூரபதுமன் அவுண சேனைகளைத் திரட்டிக்கொண்டு போருக்குச் சென்று, சுப்ரமண்யக் கடவுளால் தோல்வியடைந்து, அவர் அவன் மீது கருணைகூர்ந்து தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்து உய்ந்து போகும்படி புத்தி கூறியதைக் கேளாமல், மறுநாள் சிறந்த படைக்கலங்களுடன் வந்து அக் கடவுளை யழித்துவிடலாமென்று நிச்சயித்து, மாயத்தினல் தன்னுருவத்தை மறைத்துக்கொண்டு போர்க்களத்தை விட்டு அகன்றன்.

மூன்றாம் நாள் பானுகோபன் வீரவாகுதேவரைக் கொல்லத்தக்க ஒரு மாயப்படைக்கலத்தை சூரபதுமன் தாயாராகிய மாயையினிடம் பெற்றுக்கொண்டு, போர்க் களத்துக்குச் சென்றான். அங்கு வீரவாகுதேவரை எதிர்த்து அவரால் வெல்லப்பட்டபின், அவன் மாயையினால் தன்னுருவத்தை மறைத்துக்கொண்டு, சூரியாஸ்தமன மாகிவிட்டதுபோல் தோன்றும்படி செய்தான். வீரவாகு தேவர் முதலியோர் பானுகோபன் பயந்து ஓடினனென்று நினைத்து, அஸ்தமனமாகிவிட்டபடியால் பாசறைக்கு மீளுகையில், பானுகோபன் மாயை அளித்த மாயப்படைக் கலத்தை அவர்கள்மீது பிரயோகித்தான். அது சென்று வீரவாகுதேவர் முதலாயினோர் அறிவையழித்து, அவரைக் கொல்லும் ஆற்றலில்லாமல், அவர்களைக் கட்டி ஆகாய மார்க்கமாய் எடுத்துக்கொண்டு போய் ஏழாவது சமுத் திரத்திற் போட்டுவிட்டது. பானுகோபன் சூரபதுமனி டம் சென்று, தான் வீரவாகுதேவர் முதலாயினோரை அழித்துவிட்டதாகக் கூறினான்.

ஆனால் முருகப் பெருமானால் ஏவப்பட்ட வேலா யுதம் சென்று வீரவாகுதேவர் முதலாயினோரது மயக்கத் தை நீக்க, வீரவாகுதேவர் சேனைகளுடன் மீண்டு, பானு கோபனை அன்று அழித்துவிடுவதாகச் சபதம் கூறி, வீர மகேந்திரபுரத்தினுள் புகுந்து வாயுவையும் அக்கினியையும் அங்காரத்தை யழிக்கும்படி ஏவினார். அதுகேட்ட சூரபது மன் தானே போருக்குப் புறப்பட்டான். அப்போது இர ணியன் என்னும் அவனது குமாரன் அவனை வணங்கி, "சிவகுமாரரோடு போர் புரிதல் தகுதியன்று. அவரை வணங்குதலே உய்யு நெறி!" என்று கூறி, அவன் தன்னை நிந்தித்ததைக்கேட்டு, தான் சொன்னது தவறென்று கூறி, தானே வீரவாகுதேவரை யழிக்கப் புறப்பட்டான்.

இரணியன் வீரவாகுதேவருடன் வெகுதிறத்துடன் போர் புரிந்தும் அவரால் வெல்லப்பட்டபடியால், தன் தகப்பனுக்குக் கருமஞ்செய்யத் தான் ஒருவனாயினும் மிஞ்சவேண்டுமென்று நினைத்து, மாயையினால் தன்னுருவத்தை மறைத்துக்கொண்டு ஓடிக் கடலுக்குள் மச்ச வடிவத்துடன் ஒளித்துக்கொண்டான். பிறகு சூரபதுமனது மற்றொரு மகனாகிய அக்கினிமுகாசுரன் முதலாயினோர் சென்று வீரவாகுதேவரையும் அவர் சேனைகளையும் எதிர்த்துப் போர் செய்து மாய்ந்தனர். அப்போது பானுகோபன் தன் தந்தையினிடத்திற் சென்று, சிவகுமாரருடன் போர் புரியாமல் அவர் சொற்படி நடப்பதே பிழைக்கும் வழியென்று உரைத்து, அவன் அதுகேட்டு வெகுண்டு தன்னை நிந்தித்ததைக் கண்டு, தானே போருக்குச்சென்று வெகுநேரம் தீரத்துடன் போர்செய்து, கடைசியில் வீரவாகுதேவருடைய வாளுக்கு இரையாயினான்.

நான்காம் நாள் சூரபதுமனால் வரவழைக்கப்பட்ட சிங்கமுகாசுரன் இரணியனையும் பானுகோபனையும் போலவே சூரபதுமனுக்கு நற்புத்தி கூறி, அவன் அதைக் கேளாததைக்கண்டு அவனை நிந்தித்துப் பிறகு போர்க்களத்துக்குச் சென்று, வெகு நேரம் கொடிய போர்செய்து கடைசியில் வீரவாகுதேவரையும் அவர் சேனைகளையும் மாய பாசம் என்னும் படைக்கலத்தினால் கட்டி மயக்கி உதயகிரியிற் சேர்ப்பித்தான். அதையறிந்த சுப்பிரமண்யக்கடவுள் வேலேந்தித் தேரின்மீ தேறிச்சென்று, சிங்கமுகனுடைய ஆயிரந்தலைகளையும் வெட்டி, அவைகள் திரும்பவும் முளைக்க முளைக்க ஆயிரத்தெட்டு முறை அறுத்து அவனை யழித்தருளி, ஓர் அம்பைச் செலுத்தித் தம் துணைவர்களையும் சேனைகளையும் கட்டிய மாய பாசத்தை யறுத்து அவர்களை மீட்டுக்கொண் டருளினார்.

ஐந்தாம் நாள் சூரபதுமன் தன் சேனைகளையெல்லாம திரட்டிக்கொண்டு வந்து கந்தசுவாமியுடன் மாயப்போர் புரிந்தான். அப்போது அவன் குமரக்கடவுளுடைய தேரின் மீது பறந்துகொண்டிருந்த கொடியை யறுத்து வெற்றிச் சங்கத்தை முழக்கினன். அப்போது தேவர்கள் யாவருடைய கருத்துக்கு இசைய அக்கினிதேவன் கோழியின் உருவத்துடன் அப்பெருமான் தேரின உச்சியில் கொடியாக விருந்து ஆரவாரித்தான். ஷண்முகப் பெருமானது பாணங்களினால் அசுரசேனை முழுவதும் அழிந்து, சூரபதுமன் தனியனாய் நின்றான். அப்போது அவன் மாயையை நினைத்து, அவள் வந்துசொன்ன தந்திரத்தைக் கேட்டு மகிழ்ந்து, தன் இந்திரஜாலம் என்னும் தேரை யனுப்பி அமுதசீதமந்தரகூடம் (சுதாமந்தர பர்வதம்) என்னும் மலையைக் கொண்டுவரச் செய்து, அதிலிருந்து வந்த காற்றுப் படவே, போர்க்களத்தில் மாய்ந்து கிடந்த அவுணர்கள் அனைவரும் உயிர்பெற் றெழுந்தனர். சிங்கமுகாசுரன், பானுகோபன், அக்கினிமுகாசுரன் முதலியோர் வந்து சூரபதுமனை வணங்கி, பகைவர்களை யழித்து மீள்வதாகச் சொல்லிப் புறப்பட்டுச்சென்று, பூதசேனைகளை வெகு வல்லமையுடன் தாக்கினர். அப்போது சுப்ரமண்யக் கடவுள் பாசுபதப் படைக்கலத்தை விடுத்து அவுணசேனை முழுவதையும் ஒரே க்ஷணத்தில் அழித்து, சூரபதுமனைத் திரும்பவும் தனியனாக்கினார். உடனே சூரபதுமன் தன் இந்திரஜாலத் தேரை ஏவி சுப்ரமண்யக் கடவுளுடைய சேனைகள் அனைத்தையும் அண்டத்தின் உச்சியில் சேர்ப்பித்தான். சுப்ரமண்யக் கடவுள் ஒரு பாணத்தினால் அவர்கள் அனைவரையும் மீட்டு, இந்திரஜாலத் தேரை சூரபதுமனிடம் திரும்பவும் செல்லக் கூடாதென்று கட்டளையிட்டருளினார். உடனே சூரபதுமன் சிங்கவாகனத்

திலேறிப் போர் செய்ய, குமாரக்கடவுள் அச்சிங்க வாகனத்தை அழித்தருளினர். உடனே அவன் சக்ரவாகப் பக்ஷியின் உருவததை யெடுத்துக்கொண்டு, பூதங்களை யழித்துக்கொன்று உலகமெலாம் திரிய, ஷண்முகப்பெருமான், பக்ஷிவடிவமெடுத்துக்கொண்ட அவனுடன் தேரின் மீதேறிப் போர் செய்வது தருமமன்று என நினைத்து இந்திரனை மயிலாக்கிக்கொண்டு அந்த வாகனத்தின்மீதேறி அவனைத் துரத்திப் போர்செய்து, அவனுடைய பக்ஷியுருவத்தை இருகூறுகளாக வெட்டித்துணித்தார்.

பிறகு சூரபதுமன் பலவுருவங்களை யெடுத்துக் கொண்டு மாயப் போர் செய்தான். சுப்ரமண்யக் கடவுள் அவன் மாயத்தை யழித்து, அவன் செய்த தவத்துக்காக அவனுக்குத் தமது விசுவரூபதரிசனம் தந்து சிறிது நேரம் மெய்யுணர்வைக்கொடுத்துப் பிறகு மறைத்தருள, அவன் அகங்கார வடிவத்துடன் பெரும் போர்செய்து, பிறகு சமுத்திரத்தின் மத்தியிற் சென்று, அண்ட முகட்டை யிடிக்கும் மாமரவுருவத்துடன் நின்றான். அப்போது ஷண்முகப் பெருமான் தமது வேலாயுதத்தை ஏவ, அது அம்மரத்தைப் பிளந்து சங்கரித்தது. உடனே சூரபதுமன் தன் சுயவடிவத்துடன் தன் உடைவாளை யுருவிக் கொண்டு போருக்குவர, வேற்படையானது ஒளிவீசும் அவனுடைய தேகத்தை இருகூறுகளாக்கிற்று. அவ்விரு கூறுகளும் சேவலும் மயிலுமாக மாறி அப்பெருமானை எதிர்க்கவர, அப்பெருமான் அவைகளைக் கடைக்கண்ணாற் பார்த்தருளினர். உடனே சூரபதுமன் பகைமை நீங்கி ஞானம் பொருந்திய மனத்தினனாய் நின்றான். அப்போது ஷண்முகப் பெருமான் கொடியாயிருந்த அக்கினி தேவனையும், மயில்வாகனமாயிருந்த இந்திரனையும் அவர்களுடைய பழைய வடிவங்களை எடுத்துக்கொள்ளும்படி

சொல்லி, சூரபதுமனது இருகூறுகளான மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டு அருளினர். தேவர்கள் அதுகண்டு ஆரவாரித்துப் பேரானந்தமடைந்து சுப்ரமண்யக் கடவுளின்மீது புஷ்பமாரி பொழிந்தனர்.

## முப்பத்துமூன்றாவது அத்தியாயம்

### தெய்வயானை யம்மை திருமணம்

அசுரர்களைப் பொடியாக்கி யழித்து அசுரேசனாகிய சூரபதுமனது உடம்பின் இருகூறுகளான மயிலையும் கோழியையும் வாகனமாகவும் கொடியாகவும் வைத்துக் கொண்டபின்னர், சிவகுமாரர் ஜயந்தன் முதலிய தேவர்களைச் சிறைமீட்டு, பிறகு சிவபெருமானைப்பூஜித்து, அதன் பிறகு தேவர்களும், முனிவர்களும், பூதகணங்களும் தம்மைப் புடை சூழ்ந்துவரப் புறப்பட்டுச் சென்று திருப்பரங்கிரியை யடைந்து, ஆங்கு விசுவகருமனால் ஒரு திவ்விய நகரம் அமைப்பிக்கச் செய்து, பூதகணங்களை வீடுகளிலிருத்தி, தரும அரண்மனைக்குச் சென்று கொலுக் கூடத்தில் சிங்காதனத்தின்மீது அமர்ந்தார். அப்போது தேவேந்திரன் பிரமதேவர், விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி, "எனது குமாரியை இங்கு ஸ்ரீவடிவேலனுக்கு விவாக நூல் முறைப்படி பாணிக்கிரகணம் செய்துகொடுக்கிறேன்" என்று சொல்ல, தேவர்கள் கோரிய பலனைக் கைக்கொண்டவர்கள்போலக் களிப்புற்றனர்.

பிறகு தேவேந்திரன் சகல தேவர்களோடும் புறப்பட்டு ஷண்முகநாதன் திருமுன்னர் சென்று, அப்பெருமானை வணங்கி, "கருணைக்கடலாகிய சுவாமி! அசுரர்களை யழித்து எங்களை இரக்ஷித்து வாழவைத்தருளிய தேவரீருக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்? ஆயினும், அடியார்களது இச்சைகளைப் பூர்த்திசெய்யும்

தேவரீர், தேவர்களெல்லோரும் க்ஷேமமாய் இருப்பதற்காக அடியேனுடைய குமாரியைப் பாணிக்கிரகணஞ் செய்தருளவேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்தித்தான். ஷண்முகநாதன் அதற்கிசைந்து, மறுநாளே கலியாணத்தை நிறைவேற்றும்படி கட்டளையிட் டருளினர்.

உடனே இந்திரன் விசுவகருமனை யழைத்து, கலியாண மண்டபம் சிறப்பாய் அமைக்கும்படி கட்டளையிட்டு, முசுகுந்தன் முதலிய அரசர்களையழைக்கத் தூதர்களை யனுப்பினன். மறுநாள் பிரமதேவர் குறிப்பிட்ட சமயத்தில் இந்திரன கந்தப்பெருமானை யழைத்து வந்து கலியாணமண்டபத்தில் சிறந்த ஆசனத்தில் அமர்த்தினன். அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு அங்குவந்து, கந்தப்பெருமானல் வணங்கப்பெற்று, அங்கு தமது ஆணையினல் வந்து தோன்றிய தமது சிங்காதனத்தின்மீது அமர்ந்தார்.

பிறகு இந்திரன் கந்தப்பெருமானைப் பூஜித்துத் தன் மகளான தெய்வயானை யம்மையைக் கந்தப்பெருமானுக்குக் கன்னிகாதானஞ் செய்தான். திருக்கலியாணச் சடங்குகள் பூர்த்தியாயினபின், கந்தப்பெருமான் தம் தேவி தெய்வயானை யம்மையுடன் ஸ்ரீ பார்வதி பரமேசுவரர்களை வலம் வந்து நமஸ்கரித்தெழுந்து வணங்கி நிற்க, கௌரியும் சங்கரரும் அவர்களைத் தூக்கி யணைத்துக்கொண்டு தங்கள் சிங்காதனத்தில் அமர்த்திக்கொண்டார்கள். அவ்வற்புதச் சேவையை யாவரும் கண்டு பரமானந்த சாகரத்தில் மூழ்கிக்களித்தனர். அப்போது பார்வதி பரமேசுவரர்கள் மறைந்தனர்.

கந்தப்பெருமான் சிலகாலம் திருப்பரங்குன்றத்திலேயே சுகமாக வசித்திருந்து, பிறகு விண்ணுலகத்துக்குச் சென்று இந்திரனுக்கு முடிசூட்டுவித்துப் பிறகு

திருக்கைலாயத்துக்குச் சென்று, சிவபெருமானையும் உமா தேவியையும் அன்புடன் வணங்கி விடைபெற்றுக் கொண்டு, தம தேவியோடும் பரிஜனங்களோடும் கந்தகிரிக் குச் சென்றார்.

## முப்பத்துநான்காவது அத்தியாயம்

### வள்ளிநாயகியின் திருமணம்

முருகப்பெருமான் கந்தகிரியிற் சிலகாலம் வசித்த பின், உபேந்திரகுமாரி சுந்தரவல்லியான **வள்ளிநாயகி யைத் தடுத்தாட்கொள்வதற்காக ஸ்ரீ பரிபூரணகிரி யென்னும் திருத்தணிகை மலைக்குச் சென்றார்.**

காஞ்சிபுரம என்னும் புண்ணியஸ்தலத்துக்கு அரு கில் மேற்பாடி என்னும பட்டணமிருக்கிறது. அதற்கரு கில் வள்ளிக்கிழங்குகள் பயிராகும வள்ளிமலை யென்ற ஒருமலை யிருக்கிறது. அம் மலைமீதுள்ள பெரிய காட்டி னில் சிவன் என்னும் திருநாமம பெற்ற ஒருமுனிவர் தவம் புரிந்துகொண் டிருந்தார். அவரது அருளினால் அக்காட் டிலுள்ள ஒரு அழகிய மான் வயிற்றில் சுந்தரவல்லி அவ தரித்தாள். அவள் பிறநதவுடன், அவளைப்பெற்றமான், தன் குட்டி வேறு இனத்தைச் சேர்ந்ததாயிருந்ததைக் கண்டு அஞ்சி அவ்விடத்தைவிட்டு ஒடிவிட்டது. வள்ளிக்கிழங்கு தோண்டி யெடுத்திருந்த ஒரு குழியில் அக்குழந்தை அழுதுகொண் டிருநதது.

அப்போது அமமலையிலுள்ள வேடர்களுக்கு அர சனான நம்பிராஜன் அருகில் விளையுற்றிருந்த தினைப் புன மொன்றைப் பார்ப்பதற்காக அங்குவர, காட்டில் குழந்தையின் அழுகைக் குரலைக் கேட்டு, அக்குரல் கிளம் பிய விடத்துக்குச் சென்று, சுந்தரிக்க அக் குழந் தையைக் கண்டு மிகுந்த சந்தோஷ மடைந்து, அதை எடுத்

துக் கொண்டு போய், "பெண்மக விலலையெனவருந் தும் நமக்கு மலைக்கடவுளாகிய குமாரசுவாமியே இக் குழந்தையைத் தந்தருளினார்!" என்று கூறித் தன் தேவி யின் கைகளிற் கொடுத்தான். அவளும் அக்குழந்தையை வாங்கிக்கொண்டு மிகுந்த அன்புடன் வளர்த்துவந்தாள்.

வள்ளிக்குழியி லிருந்து அகப்பட்டதனால் வள்ளி யென்று பெயரிடப்பெற்ற அச் சுந்தரி பன்னிரண்டு வயது அடைந்தபின், நம்பிராஜன் தன் குலத்தின் வழக்கப்படி சிறந்த தினைப்பயிரைப் பறவைகள் அழிக்காவண்ணம் காப்பதற்காகத் தினைப்புன மொன்றில் ஒரு பரண் அமைத்து அதில் அப்பெண்ணைக் காவலாயிருக்கும்படி கட்டளையிட்டான். வள்ளிநாயகி மயிலின் தோகைகளி னாலும் தழைகளினாலும் செய்யப்பட்ட ஆடையை யுடுத் துக்கொண்டு, பரண்மீது நின்று கற்களைக் கவணில் வைத துச் சுழற்றி யெறிந்து பறவைகளைத் துரத்திக்கொண்டு காலங்கழித்தாள்.

அப்படி யிருக்கையில், பரிபூரணகிரியில் வசித்து வந்த முருகப் பெருமான், ஒருநாள் நாரதமாமுனிவரால் ஞாபக மூட்டப்பெற்று, இளம்பருவமுள்ள வேடனது உருவம் பூண்டு வள்ளி நாயகி தினை காத்துவந்த புனத் துக்குச் சென்று, வள்ளி நாயகியை யணுகி, "ஏ சுந்தரி! நீ யார்? அதிரூபலாவண்ய முடைய உன்னை இத் தினைப் புனத்துக்குக் காவலாக வைத்த வேடர் கிராதகர்கள் தாம்! உன் கட்டழகைக் கண்டு என்மனம் உனக்கு அடிமை யாயிற்று. கனியை யொத்த உன் வாயைத் திறந்து ஒரு இனியமொழி கூறி என் மனத்தில் அமுதத்தைப் பொழிய மாட்டாயோ?" என்று மிகுந்த ஆர்வத்துடன் கூறினார்.

அச்சமயத்தில் கொம்பு, தம்பட்டம் முதலிய வாத் தியங்களின் கோஷம் அருகாமையில் வேடர் கூட்டம்

வந்துகொண் டிருந்ததைத் தெரிவித்தது. அச்சத்தம் செவியிற்பட்டதும், முருகப்பெருமான் வேடவுருவத்தை மறைத்து அத் தினைப்புனத்தில் தழைத்துக் குளிர்ச்சி தரும் ஓர் இளம் வேங்கைமரமாக மாறி நின்றார்.

வள்ளிநாயகியை எடுத்து வளர்த்த நம்பிராஜனும் அவனது பரிவாரங்களான வேடர்களும் கைகளில் பெரிய விற்களையேந்திப் பயங்கரமான உருவங்களுடன் அப்புனத்துக்கு வந்துசேர்ந்தார்கள். நம்பிராஜன் பல கனிகளையும் தேன் கலந்த தினைமாவையும் தன் மகளுக்கு மிகுந்த அன்புடன் அளித்தான். அப்போது அவன் பரிவாரங்கள் அவ் வேங்கை மரத்தைக் கண்ணுற்று ஆச்சரியப்பட்டு, 'இதற்கு முன் இது இங்கு இருந்ததில்லை. இது இங்கு எப்படி வந்தது?' என்று சந்தேகமுற்று, அதை வெட்ட யத்தனித்தார்கள்.

அதுகண்ட நம்பிராஜன் அவர்களைத் தடுத்துவிட்டுத் தன் பெண்ணை நோக்கி, "குழந்தாய்! நல்ல நிழலைத்தரும் இம்மரம் உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று வினவ, வள்ளிநாயகி, "இங்கு எப்படி வந்ததென்று நான் அறியேன். நமதுகுலதெய்வமாகிய முருகப்பெருமானேஇதைத் திடீரென்று ஆகாயத்திலிருந்து கொண்டுவந்து சேர்த்தார் போலும்!" என்றுரைத்தாள். நம்பிராஜன், "குழந்தாய்! குளிர்ந்த நிழலைத்தரும் இம்மரத்தைக்கண்டு நீ சிறிதும் அஞ்சாதே! இது உனக்குச் சுகத்தையே தந்து உனக்கோர் துணையாக இருக்கும்!" என்று சொல்லிவிட்டுத் தன் பரிவாரங்களுடன் வேறு புனங்களுக்குச் சென்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம முருகப்பெருமான் தமது அம்சத்தை அவ் வேங்கை மரமாக நிறுத்திவிட்டு முன் போலவே யௌவனமும் சுந்தரமும வாய்ந்த வேடனாய்க் கையில் ஒரு வில்லை யேந்திக்கொண்டு வள்ளிநாயகியின்

முன்னே தோன்றி, அவளிடத்துத் தாம் கொண்ட அளவற்ற காதலைத் தெரிவித்தார். வள்ளிநாயகி அவர்மொழிகளைக் கேட்டு அஞ்சி, அவரை நோக்கி, "ஏ ராஜனே! நானோ இழிகுலத்திற் பிறந்தவள்; நீரோ இராஜகுலத்திற் பிறந்தவராயிருக்கிறீர். தினைப்புனம் காக்கும் வேடுவப் பெண்ணுக்கும் தேசங்களை யாளும் மகாராஜனுக்கும் எவ்வளவு தூரம்! நீர் என்னுடன் இப்படிப் பேசுவது தகுதியன்று. ஆகையினால் நீர் வந்தவழியே போய்விடும். வேடர்கள் உம்மை இங்கு கண்டால், உமது பிராணனுக்கே அபாயம் நேரிடும். நீர் சீக்கிரம் போய்விடும்!" என்றுரைத்தாள்

அச்சமயத்தில் பல வாத்தியங்களின் பயங்கரமான கோஷம் வேடராஜன் மீண்டும் அங்கு வந்துகொண்டிருந்ததை யுணர்த்திற்று. உடனே முருகப்பெருமான் சைவ சமயத்தில் முதிர்ந்த ஒரு கிழவர் உருவத்தை யெடுத்துக் கொண்டு நம்பிராஜன் எதிரிற்சென்று அவனை ஆசீர்வதித்து அவனுக்குத் திருநீறு கொடுத்தார். நம்பிராஜன் அவரை வணங்கி, "பெரியவரே! தாங்கள் எங்கு போக வேண்டும்? தங்களுக்கு இங்கு வேண்டுவதென்ன?" என்று கேட்டான். அதற்கு அப்பெரியவர், "ஏ வேடராஜனே! எனக்கு எப்பொருளிலும் ஆசையில்லை. இங்கு உன் மலையிலுள்ள குமரி ஆடவந்தேன்" என்றார். ['குமரி ஆடவந்தேன்' என்பது குமரி என்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்யவந்தேன் என்றும், இளம் பெண்ணுடன் விளையாட வந்தேன் என்றும இரண்டுவிதமாகப் பொருள்படும்.]

அதுகேட்ட நம்பிராஜன், "நல்லது நீர் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்துகொண்டு இங்குதானே என் மகளுக்குத் துணையாக இரும்!" என்று சொல்லிப் பின்னும்

பல கனிகள், தேன், தினைமா இவைகளைத் தன் மகளிடம் கொடுத்துவிட்டுத் தன் பரிவாரங்களுடன் அவ்விடம்விட் டகன்றான். வேடராஜன் அவ்விடம்விட்டுச் சென்று சிறிது நேரத்துக்கெல்லாம் கிழவருருவங்கொண்ட கந்தப் பெருமான் வள்ளிநாயகியை நோக்கி, "பெண்ணே! பசி என்னை மிகவும் வருத்துகின்றது!" என்று சொன்னார். வள்ளிநாயகி தன்னிடமிருந்த தேனைத் தினைமாவுடன் கலந்து, அதையும் கனிகளையும் அவருக்கு அளித்தாள். அவைகளைத் தின்றபின் முருகப்பெருமான், "பெண் ணரசே! எனக்கு மிகுந்த தாகமாயிருக்கிறது!" என்று கூற, வள்ளிநாயகி, "பெரியவரே! அதோ ஒரு தடாகம் இருக்கிறது. நீர் இவ்வேழு குன்றுகளையும் கடந்துசென் றால் அத்தடாகத்தை யடைவீர் அதிலுள்ள மதுர மான நீரைக் குடித்துவிட்டுவாரும்!" என்றாள். கந்தப் பெருமான், "மாதரசே! அங்கு செல்லும் வழி எனக் குத் தெரியாதாகையினால், நீ தயவுசெய்து எனக்குத் துணையாக வந்து வழிகாட்டவேண்டும்" என்றார்.

அதன்பேரில் வள்ளிநாயகி அக்கிழவரை அத்தடா கத்துக்கு அழைத்துப் போனாள். அதிலுள்ள நீரைப் பருகியபின், கந்தப்பெருமான் வள்ளிநாயகியை நோக்கி, "பெண்ணரசே! புசித்ததனாலுண்டான தாகம் தீர்ந்து விட்டது இப்போது உன்னை மணம் புரியவேண்டும் என்ற தாகம் அதிகமாக இருக்கிறது" என்றார். அது கேட்ட வள்ளிநாயகி கோபங்கொண்டு, "ஐயா! தவசி வேடம் பூண்ட கிழவரே! நீர் தகாத மொழிகளைப் பேசு வது தகுதியன்று! எங்கள் இனத்தார் உமது மொழி களைக் கேட்டால், உமக்கு அபாயம் நேரிடும். நான் முன்னே செல்கிறேன். நீர் பின்னே வாரும்!" என்று சொல்லிவிட்டு முன்னே செல்லப் புறப்பட்டாள்.

அப்போது கந்தப்பெருமான் தமது அண்ணனாகிய விநாயகக்கடவுளை நினைக்க, விநாயகக்கடவுள் தம்பிக்குச் சகாயஞ் செய்வதற்காக ஒருபெரிய மதயானையின் உருவத்துடன் பிளிறிக்கொண்டு வள்ளிநாயகி சென்ற வழியின் குறுக்கே நின்றார். வள்ளிநாயகி அந்த யானையைக்கண்டு மிகவும் பயந்து வேகமாய்த் திரும்பியோடிவந்து கிழவரைக் கட்டிக்கொண்டு, "ஐயனே! நீர் என்ன சொன்னாலும் கேட்கிறேன். என்னை இந்த யானை கொல்லாமற் காப்பாற்றவேண்டும்!" என்று சொல்லிப் பிரார்த்தித்தாள். அப்போது கிழவராய் நின்ற ஷண்முகப்பெருமான் விநாயக மூர்த்தியை நமஸ்கரித்துத் துதிக்க அந்த யானை மறைந்தது. அதேக்ஷணத்தில் கந்தப்பெருமான் கிழவருருவத்தை மறைத்துத் தமது மங்களகரமான திருவுருவத்துடன் நின்றார். அதுகண்ட வள்ளிநாயகி மிகுந்த மகிழ்ச்சியடைந்து, அவரது கட்டளையின்படி தினைப்புனத்துக்குச் சென்றாள்.

நாள்தோறும் கந்தப்பெருமான் தினைபபுனத்துக்குச் சென்று அவளுடன் உல்லாசமாய் வார்த்தையாடிக் களித்துவந்தார். சில நாட்களுக்கெல்லாம் வள்ளிநாயகி காத்துவந்த தினைப்புனத்திலுள்ள தினைக்கதிர்கள் முதிரவே, வேடர்கள் அக்கதிர்களை யறுத்துக்கொண்டு வள்ளிநாயகியை வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். வீட்டுக்கு வந்தபின், தனது நாயகனைப் பார்க்கமுடியாமற் போனபடியால் வள்ளிநாயகி மிகவும் வருந்திச் சோர்ந்தாள். அதுகண்ட அவள் சேடி ஒருநாள் இரவு அவளைக் கந்தப்பெருமான் இருந்த தென்னஞ் சோலைக்கு அழைத்துப்போய் அவளை அங்கு விட்டுவந்தாள். மறுநாட்காலையில் வள்ளிநாயகியைக் காணமல் அவள் தாயார் பயந்து வருந்தித் தன் கணவனிடம் தெரிவிக்க, நம்பி



குமரக்கடவுள் வள்ளிநாயகியை சிறைபிடித்தோடியது.

ராஜன் மகாகோபங்கொண்டு, பலவிடங்களில் தேடும்படி பலவேடர்களை யனுப்பிவிட்டுத் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டுத் தானும் அம்மலையில் தேடச் சென்றான்.

எங்கும் தேடியபின், நம்பிராஜன் அத் தென்னஞ் சோலையை யடைய, அதுகண்ட வள்ளிநாயகி பயந்து, கந்தப்பெருமானை நோக்கி, "ஏ தேவாதிதேவா! வேடர்களெல்லோரும் ஆயுதபாணிகளாய் இங்கு வருகிறார்களே! என்னைக் காப்பாற்றவேண்டும்!" என்று சொல்லிப் பிரார்த்தித்தாள். அதுகேட்ட ஷண்முகப்பெருமான் நகைத்து, "பெண்ணரசே! நான் இருக்கும் வரையில் நீ பயப்பட வேண்டாம். எனக்குச் சண்டைசெய்யும் திறமையுண்டு. நீ என் பின்னே யிரு!" என மொழிந்தார்.

வேடர்கள் தங்கள் பெண் ஓர் அந்நியனுடன் இருப்பதைக் கண்டு உக்கிரமான கோபம் கொண்டு, "ஏ பெண் திருடா! இதோ உன்னைத் தொலைத்து விட்டோம்!" என்று கூவிக்கொண்டு அவர்மீது அம்புகளைப் பொழிந்தனர் அதுகண்ட வள்ளிநாயகி, "சுவாமி! எனக்கு மிகவும் பயமாயிருக்கிறது. இவர்களை யழித்து என் பயத்தை நீக்கியருளவேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்திக்க, கந்தப்பெருமான் தமது கோழியை நினைத்தார். அது விரைந்துவந்து பிரளயத்தில் மேகங்கள் கர்ஜிப்பதுபோலக் கூவிற்று. அச் சத்தத்தைக் கேட்டவுடன் வேடர்களெல்லோரும் நடுங்கிக் கீழேவிழுந்து மாய்ந்தனர்.

அவ்வேடர்கள் மாய்ந்தபின், முருகப்பெருமான் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார். வள்ளிநாயகி, தன் தந்தை

யையும் சகோதரர்களையும் இழந்த துக்கத்தினால் மிகவும் சோர்வுற்றிருந்தும், அவரைப் பின்தொடர்ந்து சென்றாள். அப்போது நாரதமாமுனிவர் அங்குவந்து ஷண்முகப் பெருமானை வணங்கித் துதித்து, "சுவாமி! இறந்து போன வேடர்களெல்லோரையும் பிழைப்பித்து இவ்வம் மையை முறைப்படி மணம்புரிந்தருளவேண்டும்!" என்று பிரார்த்தித்தார். அப்போது தேவாதிதேவரான கந்தப் பெருமான் வள்ளிநாயகியை நோக்கி, "பெண்ணரசே! எமது கட்டளையின்படி மாய்ந்த உன் தந்தை முதலான வேடர்களெல்லோரும் பிழைத்தெழும்படி நீயே தய வுடன் அவர்களைப் பார்ப்பாயாக!" எனப் பணித்தருளி ஞர். வள்ளிநாயகி அவர்களை அன்புடன் நோக்க, அவர்க ளெல்லோரும் தூங்கியெழுந்தவர்போல் எழுந்தார்கள்.

அப்போது கந்தப்பெருமான் தமது மானிடவுரு வத்தை மறைத்து, தாமரையையொத்த ஆறுமுகங்களோ டும், கருணைபொழியும் பன்னிருகண்களோடும், மலைகளை யொத்த பன்னிருபுயங்களோடும், இரு பாதமலர்களோடும, வேலாயுதத்துடனும் விளங்கினர். அத் திவ்வியமான காட்சியைக் கண்ட வேடர்கள் அவரது பாதமலர்களில் வீழ்ந்து வணங்கி, தங்கள் பிழையைப் பொறுத்தருளும் படி பிரார்த்தித்து நின்றார்கள். பிறகு நம்பிராஜன் கந்தப் பெருமானை வணங்கி, "சுவாமி! வேலியே பயிரை யழித் தால் பயிரைக் காக்க வழியுண்டோ? எம்மைக் காப்பாற்றி யருளும் தேவரீர் எமது ஊருக்கு வந்து என் மகளை முறைப்படி மணஞ்செய்துகொண்டு எங்கள் மானத்தைக்

குக் கெடுதி நேரிடாமல் காப்பாற்றி யருளவேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்தித்தான்.

குகப்பெருமானும் அதற்கிசைந்து, நாரதமாமுனிவருடன் வேடர்சேரிக்குச் சென்று, நேர்த்தியான புலித்தோல் ஆசனத்தில் அமர்ந்து, நம்பிராஜன் வள்ளிநாயகியை முறைப்படி கன்னிகாதானஞ் செய்ய அத்தேவியைப் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டார். நாரதமாமுனிவர் ஓமத்தீயை வளர்த்து எல்லாச் சடங்குகளையும் பூரணமாக நடத்தினார் அப்போது மகாதேவர் பார்வதி தேவியாருடனும் தேவர்களெல்லோருடனும் ஆகாயத்தில் தோன்றித் தம்பதிகளை ஆசீர்வதித்தார். தேவர்கள் அத்தம்பதிகளை வணங்கிப் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிறகு சிவபெருமான் முதலியோர்கள் மறைந்தனர்.

பிறகு முருகப்பெருமான் வள்ளிநாயகியை அழைத்துக்கொண்டு திருத்தணிகை மலைக்குச் சென்று அங்கு சில நாள் தங்கியிருந்து, பிறகு அந்நாயகியுடன் கந்தகிரிக்குச்சென்று, தேவசேனை யம்மையால் வணங்கப்பெற்று, இருதேவிமார்களுடனும் தமது திவ்விய ஆசனத்திலமர்ந்தார். அவரது பரிஜனங்களான வீரர்களும் பூதகணங்களும் அவ் வற்புதக் காட்சியைக் கண்ணுறக்கண்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கிக் களித்தார்கள்.

துக்கம் நிறைந்த சாகரமாகிய இவ்வுலகத்தில் துன்புற்றுத் தியங்கும் நாமும் கருணையின் சொரூபமான முருகப்பெருமான் திருமேனியையும், கருணைபொழியும் ஆறுதிருமுகங்களையும், நம்மைக் காக்கவல்ல பன்னிரு

தோள்களையும், இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி எனப்படும் வள்ளிநாயகியையும் தெய்வயானையம்மையையும் வேலாயுதத்தையும், பிரணவ சொரூபமான மயிலையும், வேதங்களின் சொரூபமான சேவலையும், அவரது மெய்யடியார்களையும் தினந்தோறும் போற்றித் துதித்து அப்பெருமானது அருளைப்பெற்று, பவசாகரத்தைக் கடந்து உய்வோமாக!

*ஆறிரு தடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க! வெற்பைக்*
*கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்*
*ஏறிய மஞ்ஞை வாழ்க! யானைதன் னணங்கு வாழ்க!*
*மாறிலா வள்ளிவாழ்க! வாழ்க சீரடியா ரெல்லாம்!*

முருகப்பெருமான் கழலிணை வாழ்க!!!

முற்றிற்று.

# அநுபந்தம் I

## சூரபதுமன் முதலியோரது பூர்வஜன்ம வரலாறு

முந்தி ஒரு கற்பத்தில் சாகத்வீபத்தில் கருமநெறியிலே நிற்போனும், உண்மையையே உரைப்போனும், பொறுமை யென்பது சிறிதளவு மில்லாதவனையும், பிரபாகரன் என்னும் திருநாமம் பூண்டவனுமுள்ள ஓர் அரசன் மிகுந்த கீர்த்தியுடன் அரசு புரிந்துவந்தான். அவனுக்கு ஒரு மனையாளிடத்தில் இரட்டையராய் சூரன், பதுமன் என்னும் இரண்டு பிள்ளைகளும், மற்றொருத்தியினிடத்தில் வெவ்வேறாக சிங்கன், தாரகன் என்னும் இரண்டு பிள்ளைகளும் பிறந்தார்கள். அப்பிள்ளைகளுக்கு வயது வந்தபின்னர், பிரபாகரன் தனது இராஜ்யத்தை அப்பிள்ளைகளிடம் ஒப்புவித்துவிட்டு, தவஞ்செய்யும் நோக்கத்துடன் தன் மனைவியருடன் ஒரு வனத்துக்குச் சென்றான். அப்பிள்ளைகள் இராஜ்யத்தை நீதியாக அரசாண்டுவரும் நாளில், அகத்தியமாமுனிவர் சூரன், பதுமன் இருவர்களிடத்தும் சென்று, அவர்களுக்குக் கந்தப்பெருமானது மகிமையை எடுத்துரைத்தார்; தவத்திற் சிறந்த திரணபிந்து முனிவர் சிங்கனிடம் சென்று, அவனுக்கு துர்க்கையம்மன் பெருமையை எடுத்துக் கூறினார்; யோகிகளுக்குள் தலைவரான விருஷபயோகி முனிவர் தாரகனிடம் சென்று, அவனுக்கு மஹாசாஸ்தாவின் மகிமையை எடுத்துரைத்தார். அவ்வாறு உபதேசங்கள் பெற்ற அந்த இராஜகுமாரர்கள் பூர்வபுண்ய வசத்தினால் மிகுந்த பக்தி யுடையவர்களாகி, சூரன் மயிலுருவக்

கொண்டு சுப்ரமண்யக்கடவுளைச் சுமப்பதற்கும், பதுமன் கோழியுருவங்கொண்டு கொடியாகி அப்பெருமானைக் களிப்பிக்கவும், சிங்கன் சிங்கவுருவங்கொண்டு துர்க்கை யம்மனுக்கு வாகனமாயாகவும், தாரகன் யானையினுருவங் கொண்டு யாகா சாஸ்தாவுக்கு வாகனமாகவும் இச்சை கொண்டு, தங்கள் குமாரர்களிடத்தில் இராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு, காட்டுக்குச் சென்று, தங்கள் இச்சைகள் பூர்த்தியாவதற்காக நாற்பதினாயிரவருஷ காலம் அதிகோரமான தவம் புரிந்தார்கள். கந்தப்பெருமானது மயிலும் கோழியும், துர்க்கையின் வாகனமான சிங்கமும், மஹா சாஸ்தாவின் வாகனமான யானையுட் அது விஷயம் அறிந்து அவர்கள் தவஞ்செய்து கொண்டிருந்த விடத்துக்குச் சென்று, "ஏ. இராஜ குமாரர்களே! நீங்கள் எங்களது பதவிகளை இச்சித்த படியால், இப்போதே சீக்கிரத்தில் எங்கள் முகங்களை யுடைய பூதங்களாக ஆகக்கடவீர்கள்" என்று சபித்து விட்டுத் திருக்கைலாயத்துக்குச் சென்றன. அப்போது அந்த இராஜ குமாரர்கள் பூதவுருவங்கள் அடைந்து அவைகளைப் பின்தொடர்ந்து சென்று துதிக்க, அவைகள் மன மிரங்கி, "ஏ பூதங்களே! நீங்கள் இப்போது இங்குதானே வசியுங்கள்! சிலகாலம் கழிந்தபின் உங்கள் கோரிக்கைகள் நிச்சயமாய் நிறைவேறும்!" என்று சொல்லிச் சென்றன. பிறகு அப்பூதங்கள் அண்டாவரணப் பூதங்களோடு சேர்ந்து சந்தோஷமாய் வசித்துவந்தன.

பிறகு ஒரு நாள் அசுரர்களால் வெல்லப் பெற்ற தேவர்கள் அந்த நான்கு பூதங்களை யடைந்து தங்களைக் காக்கும்படி வேண்டிக்கொண்டனர். உடனே அப்பூதங்கள் பூலோகத்துக்குச் சென்று, அங்கு துணையாக வந்த சில பூதங்களுடன் போய் அசுரர்களை வென்று, அவர்களிற்

பலரைக் கொன்றன. அதுகண்ட அசுரேந்திரன் பூத கணங்களுக்குத் தலைவனான அண்டாவரணனை யடைந்து, அந் நான்கு பூதங்கள் இழைத்த தீங்கைத் தெரிவித்தான். அப்போது அண்டாவரணன் கோபங்கொண்டு அப் பூதங்களை நோக்கி, "நீங்கள் நமது உத்திரவு இல்லாமல், உங்களைச் சரணமடைந்த தேவர்களுக்கு உதவி செய்ய அநேக அசுரர்களைப் போரில் அழித்தபடியால், நீங்கள் மிகவும் கொடிய அசுரத்தன்மையை யடைந்து, நாளைதோறும் தேவர்களுக்குக் கெடுதி செய்துகொண் டிருக்கக் கடவீர்கள்!" என்று சபித்தான். அன்று முதல் அப் பூதங்கள் தேவர்களிடத்துப் பகைமை பாராட்டி அவர்களுக்குப் பலவாறாகத் தீங்கிழைத்துவந்தன.

இப்படியிருக்கையில், ஒருநாள் ஸ்ரீ சுப்பிரமண்யக் கடவுள் மயிலின்மீதேறிப் புறப்பட்டு உல்லாசமாய் உலகெங்கும் உலாவி வருகையில் திருக்கைலாயத்தை யடைந்து, மயிலைவிட் டிறங்கி, மயிலையும் கோழியையும் வெளியே நிறுத்திவிட்டு, சிவபெருமானது திருக்கோயிலுக்குட் சென்றார். அப்போது பிரமதேவர், மகாவிஷ்ணு முதலிய தேவர்களும் அங்குவந்து, தங்கள் வாகனங்களை வெளியே நிறுத்திவிட்டு எம்பெருமான் திருக்கோயிலுக்குட் சென்றனர். பிறகு அவர்களது வாகனங்களெல்லாம் சிறந்த மயிலையும் கோழியையும் வணங்காமல், மனத்தில் கர்வங் கொண்டு நின்றன. அப்போது அங்கிருந்த அந் நான்கு பூதங்களும் தேவர்களிடத்தில் தங்களுக்குச் சாபத்தினால் உண்டான விரோதத்தினால் அந்த வாகனங்களின் செய்கையைக்கண்டு கோபங்கொண்டு, மயிலினிடமும் கோழியினிடமும் அவ்வாகனங்களின் நடத்தையைப் பற்றித் தெரிவித்துவிட்டு, அவ்வாகனங்களை யெல்லாம் துரத்திக் கொண்டு சகலலோகங்களுக்கும் சென்று, ஸத்தியலோகம்

முதலியலோகங்களை யெல்லாம் அழித்து, அவ்வாகனங்களையும் மற்றும் அங்கு எதிர்ப்பட்ட தேவர்களையும் அழித்துவிட்டு விரைவில் திருக்கைலாயத்துக்கு மீண்டன.

கந்தப்பெருமானும் ஏனைய தேவர்களும் பார்வதி பரமேசுவரர்களைத் தரிசித்துவிட்டு வெளியே வந்தனர். அப்போது தேவர்கள் தங்கள் வாகனங்களின் கதியைத் தங்கள் பரிஜனங்களால் அறிந்து, முருகக்கடவுளினிடம் சென்று அவ்விஷயத்தைத் தெரிவித்துக்கொண்டனர். உடனே ஷண்முகப்பெருமான் சூரன், பதுமன், சிங்கன், தாரகன் என்னும் அந்நான்கு பூதங்களையும அழைத்து, "நீங்கள் இவ்விதம் கெடுதி செய்தபடியால், நீங்கள் இப்போது அசுரகுலத்தில் பிறக்கக்கடவீர்கள் !" என்றுரைத்தார்.

அப்போது அப்பூதங்கள் மிகவும் பயந்து, முருகப்பெருமானை வணங்கி, "கருணைக்கடலே! நாங்கள் அசுரர்களாகப் பிறந்தால் தேவரீரை நினைப்பதற்கும் இடமிராதே. ஆகையினால் இப்பாவம் தொலைவதற்கு ஒருவழி உரைத்தல் வேண்டும்" என்று வேண்டிக்கொண்டன. அது கேட்ட கருணைக்கடலாகிய முருகப்பெருமான், "ஏ பூதங்களே ! இப்போது உங்களுக்கு அசுரப்பிறப்பு உண்டாகட்டும். நாம் அந்த ஜன்மத்தில் உங்களை வதஞ்செய்து ஆட்கொண்டு பழைய உருவத்தை அளிப்போம்" என்றார். அப்போது இரு பூதங்கள், "இறைவனே ! நாங்களிருவரும் மயில் கோழி உருவங்களோடு மிகவும் கொடிய தவத்தைச செய்துவிட்டு, தேவரீரது திருவருளைப் பெறக் காத்திருக்கும் சமயத்தில், தேவரீர் எங்களுக்குக் கொடிய அசுரப்பிறப்பை விதித்தருளினீரே! எங்கள் தவத்தின் பயனை நாங்கள் அடைவது எப்போது?" என்று சொல்லி வருந்தின. அதுகேட்ட முருகப்பெருமான் புன்னகை செய்து, "சூரபதுமர்களே ! நீங்கள்

இருவரும் மிகக் கொடியவனும், தேவர்களுக்கு இயமனுமான சூரபதுமன் என்னும் பெயருடன் ஓரே அசுரனுகப் பிறக்கக்கடவீர்கள்! அந்த ஜன்மத்தில் நீங்கள் நம்மால் சங்கரிக்கப்பட்டு அசுரத்தன்மை நீங்கப்பெற்றபின், உங்களுக்கு மயில் கோழி இவைகளுடைய உருவங்கள் கிடைக்கும்" என்று திருவாய்மலர்ந் தருளினார். பிறகு ஷண்முகப்பெருமான் தேவர்களை நோக்கி, "தேவர்காள்! இப்பூதங்களால் கொல்லப்பட்ட சேனைகளும் வாகனங்களும் இப்போது முன்போலாகிவிடக்கடவன!" என்று கூறியருளி, மயிலின்மீதேறித் திருக்கைலாயந்தனிட்டு அகன்றார்.

# அநுபந்தம் II

## கந்த விரதங்களின் மகிமை

கரூரில் அரசாண்டுகொண்டிருந்த முசுகுந்த சக்ரவர்த்தி ஒருநாள் வசிஷ்ட முனிவரை யடைந்து, அவரைப் பணிந்து, கந்தப்பெருமானுக்குரிய விரதங்களை யெல்லாம் தனக்கு எடுத்துரைக்கும்படி பிரார்த்தித்தான். அப்போது அம்முனிவர் பின்வருமாறு கூறுவாராயினர்:—

"ஏழு வாரங்களுக்குள் வெள்ளிக்கிழமையன்று அநுஷ்டிக்கப்படும் விரதம் முருகக்கடவுளுடைய விரதமாகும். அந்தச் சுக்கிரவார விரதத்தை அநுஷ்டிப்பவர்களது மனோபீஷ்டங்களெல்லாம் வெகு சீக்கிரத்தில் நிறைவேறும். பகீரதன் என்னும் மகாராஜன், தான் அரசாண்டுவந்த பூவுலக முழுவதையும் கோரன் என்னும் ஓர் இராக்ஷதன் கவர்ந்துகொண்டதனால், தன் மனைவியையும் மகனையும் அழைத்துக்கொண்டு சுக்கிரனிடம்

சென்று, தனக்கு நேர்ந்த கஷ்டத்தைச் சொல்லிக்கொண்டான். அப்போது சுக்கிரன், "நீ சுப்ரமண்யக்கடவுள் மகிழ்ச்சி யடையுமாறு சுக்கிரவார விரதத்தை மூன்று வருஷகாலம் அநுஷ்டிப்பாயாயின், உன்னைத் துன்பத்துக் காளாக்கிய கோரனும் இறப்பான், நீயே மீண்டும் உலக முழுவதையும் ஆளுவாய்!" என்றார். அதுகேட்டு பகீரதன் வியாழக்கிழமையன்று பகலில் ஒருபொழுது உண்டு, வெள்ளிக்கிழமை யன்று உபவாசஞ்செய்து, நாள்முழுவதும் கண்விழித் திருந்து, சனிக்கிழமை யன்றும் பகலில் ஒருபொழுது உண்டு சுக்கிரவார விரதத்தை முறைப்படி மூன்றுவருஷகாலம் அநுஷ்டித்தான். உடனே குமரக்கடவுளுடைய வேற்படையானது சென்று, பகீரதனது சத்துருவான கோரனுடைய உயிரைக் கவர்ந்தது. பகீரதன் அவ் வேலாயுதத்தைத் துதித்து தன் ஊருக்குச் சென்று தனது பழைய அரசுரிமையைப் பெற்றான்.

"கந்தப்பெருமானுடைய வரதங்களால் இன்னமொன்று சொல்கிறேன், கேள். நாரதமாமுனிவர் ஸப்த ரிஷிகளுக்குள் உயர்வான பதவியையும் சிறப்பையும் அடைய வேண்டுமென்ற ஆசைகொண்டு, விநாயகக்கடவுளினிடம் சென்று, அவரது பாதமலர்களைப் பணிந்து, தமது ஆசை பூர்த்தியடைவதற்குத் தாம் அநுஷ்டிக்கத்தக்க ஒரு விரதத்தைத் தமக்குச் சொல்லி யருளவேண்டுமெனப் பிரார்த்தித்தார். அப்போது விநாயகக் கடவுள், 'முனிவரே; நீவிர் நமது தம்பியான சுப்ரமண்யனை வழிபட்டுக் கார்த்திகை நக்ஷத்திர விரதத்தை பன்னிரண்டுவருஷ காலம் சிரத்தையோடு அநுஷ்டிப்பீராயின், உமது இச்சை பூர்த்தியடையும்' என்று திருவாய்மலர்ந் தருளினார். அதுகேட்ட நாரதமாமுனிவர் பூவுலகத்துக்கு

வந்து, பரணி நக்ஷத்திரத்தன்று உச்சிப்பொழுதை யடுத்துப் பின்வரும் ஆறு நாழிகை நேரத்தில் ஒருபொழுது உண்டு, கார்த்திகை நக்ஷத்திரத்தன்று விடியற்காலத்தில் உடுத்த வஸ்திரத்துடன் ஸ்நானஞ்செய்து, வெண்மையான வஸ்திரம் தரித்துக்கொண்டு, நித்தியகர்ம அநுஷ்டானங்களை முடித்து, ஐம்புலன்களை அடக்கி, குருவைத் தியானித்து, சுப்ரமண்யக் கடவுளைப் பூஜித்து, அவருடைய புராணத்தை வாசித்து, சுத்த ஜலத்தை ஆசமனஞ் செய்து, இரவில் பெண்ணாசையை முற்றிலும் ஒழித்துத் தருப்பசயனத்திற் படுத்து, கருணைக் கடலான முருகப் பெருமானது திருவடிகளையே தியானஞ்செய்துகொண்டு அன்றிரவு முழுவதும் நித்திரையற்றிருந்து, மறுநாளாகிய ரோகிணி நக்ஷத்திரத்தன்று காலையில் ஸ்நானஞ்செய்து, நித்தியகர்ம அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஷண்முகக் கடவுளைப் பூஜித்து, வந்த பெரியோரொடு பாரணை செய்து, பாரணை செய்தவர்கள் அன்று பகற்பொழுதில் நித்திரை செய்தால் வேதத்தில் வல்ல நூறு அந்தணர்களை நிஷ்காரணமாகக் கொன்ற பாதகம் வரும் என்று தெளிவாய் உணர்ந்து அன்று பகல் முழுவதும் சற்றும் கண்ணுறங்காமலிருந்து, சாயங்காலத்தில் சந்தியாவந்தனம் முதலியவைகளைக் குறைவறச் செய்து முடித்துப் பிறகு உண்டு உறங்கி, இவ்வாறு பன்னிரண்டுவருஷ காலம் கார்த்திகை விரதத்தை அநுஷ்டித்து, ஸப்த ரிஷிகளுக்குள் மேலான பதவியைப் பெற்றார். இவ்வாறு கார்த்திகை நக்ஷத்திர விரதத்தை அநுஷ்டிப்பவர்கள் தங்கள் மனோரதங்களைப் பெறுவதுமன்றி, இறுதியில் முக்தியடைவதும் நிச்சயம்.

“சுப்ரமண்யக் கடவுளுக்குரிய ஒப்பற்ற விரதம் மற்றுமொன்று உளது. ஐப்பசி மாதத்துச் சுக்கில பக்ஷப்

பிரதமை முதல் ஆறுநாள் காலையில் ஸ்நானஞ்செய்து சுத்த வஸ்திரம் இரண்டு தரித்து, சந்தியாவந்தனம் முதலியவைகளை முடித்து, வேலாயுதத்தினால் கிரௌஞ்சத்தையும், தாரகனையும், சூரபதுமனையும் சங்கரித்தருளிய ஷண்முகக் கடவுளைத் தம்ப விம்ப கும்பம் என்னும் மூன்றிலும் இரவினில் விதிப்படி பூஜைசெய்து, வெல்லம் சேர்த்து நெய்யில் பக்குவஞ் செய்த மோதகத்தை நிவேதனஞ் செய்து, அப்பெருமானை வணங்கித் துதித்து, அவருடைய புராணத்தைப் படித்து, சிறிது ஜலத்தை ஆசமனஞ்செய்து உபவாசமாக இருந்து, சப்தமி திதியில் அப்பெருமானுக்கு விசேஷபூசை செய்து, விதிப்படி பாரணைசெய்வது சஷ்டிவிரதம் எனப்படும். இந்த நிகரற்ற விரதத்தை அநுஷ்டித்ததன்பயனாக, தேவர்கள் தங்களிடமிருந்து அசுரர்கள் பறித்துக்கொண்ட பதவிகளையும் செல்வங்களையும் மீண்டும் அடைந்தார்கள்.''

இவ்வாறு வசிஷ்டமுனிவர் சுப்பிரமணியக்கடவுளுடைய விரதங்களைப்பற்றிக் கூறியதைக் கேட்ட முசுகுந்த சக்ரவர்த்தி அவைகளை அநுஷ்டிக்கவேண்டுமென்று ஆவலுற்று, வசிஷ்ட முனிவரிடம் விடைபெற்றுச் சென்று, அன்று முதல் பலகாலம் முருகக்கடவுளை அன்புடன் போற்றி அப்பெருமானது விரதங்களை அநுஷ்டித்து வந்தான். அதனால் மகிழ்ச்சியுற்ற ஷண்முகக் கடவுள் வீரவாகு தேவரும், இலக்ஷத்தெட்டுத் துணைவர்களும், தேவர்களும் புடைசூழ்ந்து நிற்க மயிலவாகனத்தின்மீது அவனுக்குத் தரிசனம் தந்தருளி, அவன் வேண்டிய வரம் யாதென்று வினவியருள, முசுகுந்த சக்ரவர்த்தி, "தேவாதி தேவனே! அடியேன் பூவுலக முழுவதையும் ஆளும்படி வீரவாகுதேவர் முதலிய இலக்ஷத்தொன்பது வீரர்களையும் அடியேனுக்குத் துணைவர்களாகத் தந்தருள வேண்டும்'' எனப் பிரார்த்தித்தான்.

சுப்ரமண்யக்கடவுள், "அப்படியே தந்தருள்வோம்!" என்று கூறி, வீரவாகுதேவர் முதலியோர்களை நோக்கி, "தவத்திற் சிறந்த முசுகுந்த சக்ரவர்த்தி உங்களைக்காட்டிலும் நம்மிடத்து மிகுந்த அன்புடையவன். அவன் பூவுலகு முழுவதையும் தன்னுடையதாக்கிக்கொண்டு ஆளுவதற்கு அவனுக்கு வலிமையிற் சிறந்த துணைவர்களாக இருக்கக்கடவீர்கள்!" என்று கட்டளையிட்டருளினர். அப்போது அவ்வீரர்கள், "எம்பெருமானே! அழிவில்லாத சூரனுடைய குலத்தை வதைத்த பெருவலிமையையுடைய நாங்கள் சூரியகுலத்திலுதித்த அற்ப மனிதனாகிய இவ்வரசனுக்குத் துணைவர்களாய் அவன் பணிக்கும் இழி தொழில்களைச் செய்யமுடியாது" என்று கூற, முருகப் பெருமான், "நீங்கள் நமது கட்டளையை மறுத்தபடியினால், நீங்கள் மனிதவடிவமெடுத்து, முசுகுந்தனுடைய சேனைகளாய்ப் பலகாலம் அவன் பணியைச் செய்திருந்து, பின்பு நம்மிடத்தில் வாருங்கள்!" என்று கட்டளையிட்டருளினர். உடனே வீரவாகுதேவர் முதலியோர் மனிதவடிவமெடுத்து, பழைய வலிமையையிழந்து, அஞ்சி நடுங்கி, எம்பெருமானது திருவடிகளில் வீழ்ந்து பணிந்து, தாங்கள் செய்த பிழையைப் பொறுத்தருளும்படி பிரார்த்தித்துப் பிறகு முசுகுந்த சக்ரவர்த்தியின் பின்னே சென்றனர்.

முசுகுந்த சக்ரவர்த்தி கருவூரென்னும் தனது நகரத்துக்குச் சென்று, வீரவாகுதேவர் முதலியோருக்கு அந்நகரத்தில் சிறந்த மாளிகைகளையும், வளப்பம் மிக்க பல நாடுகளையும் கொடுத்தான். இலக்ஷத்தொன்பது வீரர்களும் முசுகுந்த சக்ரவர்த்தி அளித்த சதுரங்க சேனைகளுடன் பூவுலகெங்கும் சென்று, ஆங்காங்குள்ள அரசர்கள் எல்லோரிடத்திலும் திறைவாங்கி, அவர்களது நாடு

களிலெல்லாம் முசுகுந்த சக்ரவர்த்தியின் ஆணை செல்லும்படி செய்தனர்.

அவ்வாறு முசுகுந்த சக்ரவர்த்தி பெருங்கீர்த்தியுடன் அரசுபுரிந்துவரும் நாளில், வலன் என்னும் ஓர் அசுரன் பெருஞ் சேனைத்திரளோடு விண்ணுலகத்தைச் சூழ்ந்து போர்செய்ய, இந்திரன் அவனோடு சிலநாள் போர் செய்து அவனைத் தன்னால் வெல்ல முடியாதென்று உணர்ந்து, பூவுலகத்திலுள்ள முசுகுந்த சக்ரவர்த்தியை அழைத்து வரும்படி ஒரு தூதுவனை அனுப்பினான். உடனே முசுகுந்த சக்ரவர்த்தி வீரவாகுதேவர் முதலிய வீரர்களுடன் வானுலகத்துக்குச் சென்று, தேவசேனாதிபதியாம் பதவியைப் பெற்று, அசுரர்களை எதிர்த்து, அவர்கள் சேனைகள் முழுவதையும் அழித்தான். இந்திரன் வலாசுரனோடு சில நாள் போர்புரிந்து, தன் வஜ்ராயுதத்தினால் அவனை மாய்த்தான்.

பிறகு இந்திரன் முசுகுந்த சக்ரவர்த்தியைப் பலவாறுகப்புகழ்ந்து உபசரித்துப் பிறகு தன் அரண்மனைக்கு அவனை அழைத்துச்சென்று, ஸ்நானஞ் செய்து, வஸ்திரம் தரித்து விஷ்ணுவினால் பூஜிக்கப்பட்ட தியாகேசப் பெருமானை ஆராதித்தான். முசுகுந்த சக்ரவர்த்தி அப் பெருமானைத் தரிசித்துப் பேரானந்த மடைந்து துதிக்க, கருணைக்கடலாகிய அப் பெருமான் அவனை நோக்கி, "விஷ்ணு அளவில்லாத காலம் நம்மை அன்போடு பூஜித்துப் பிறகு இந்திரனுக்கு அளித்தான். நீ நம்மைப் பூமியிற்கொண்டுபோய்ப் பூசனை செய்வாய்!" என்று இந்திரன் செவியிற் படாவண்ணம் உரைத்தருளினார்.

பூஜை முடிந்த பின்னர், இந்திரன் முசுகுந்த சக்ரவர்த்திக்கு விருந்துசெய்வித்து, விசித்திரமான ஆடையாபரணங்களையும் அநேக தெய்வப்படைக்கலங்களையும் அளி

த்து, "இன்னும் உனக்கு வேண்டியதைச் சொல்லுதி!" என்றான். அப்போது முசுகுந்த சக்ரவர்த்தி, "தேவர்க் கிறைவனே! நீ பூஜை செய்கிற கடவுளை நான் பூவுலகத் துக்குக் கொண்டுபோய் வைத்துப் பூஜிப்பதற்காக அன் போடு கொடுப்பாயாக!" என்றான். அதுகேட்ட இந்தி ரன், "மகாராஜனே! இந்தத் தியாகராஜ மூர்த்தியை உனக்குத் தருதல் என் சமமதத்தைப் பற்றியதன்று பலகாலம் இம்மூர்த்தியை அன்போடு பூஜித்துப் பிறகு தமது மார்பில் வைத்துக்கொண் டிருந்த விஷ்ணு இம் மூர்த்தியை உனக்குத்தர இசைவாராயின், உனக்கு நான் தரமுடியும்" எனறுரைத்தான். உடனே முசுகுந்தன் திருப் பாற்கடலுக்குச் சென்று, விஷ்ணுவை வணங்கி, தியாகேச மூர்த்தியைத் தனக்குத் தரும்படி வேண்ட, விஷ்ணு, "நாம் இந்திரனிடத்தில் வைத்த நமதுயிர்க்குயி ராகிய தியாகராஜ மூர்த்தியை நீ பூமியிற்கொண்டுபோய்ப் பூஜிப்பாய்!" என்று கூறியருளினார்.

முசுகுந்த சக்ரவர்த்தி இந்திரனிடம் திரும்பிச் சென்று, விஷ்ணுவின் சமமதத்தைத் தெரிவிக்க, இந்தி ரன் அம்மூர்த்தியை விட்டுப் பிரிய மனஞ் சகியாதவனாய், தெய்வத்தச்சனைக் கொண்டு தான் பூஜித்துவந்த மூர்த்தி யைப் போன்ற ஆறு மூர்த்திகளை ஆறுமுறை செய்வித்து, ஒவ்வொன்றாக முசுகுந்தனிடம் கொடுக்க, அவன் அவற்றை வாங்கி, அவை வீதிவிடங்கப் பெருமானை ஒத் திருந்தும தனக்கு ஒன்றும் சொல்லாமையால், "இவர் அவர் அன்று" என்று ஆறுதரமும் கூறினான். பிறகு இந்திரன் விஷ்ணுவின் மார்பாகிய ஊஞ்சலில் ஆடிய ஸோமாஸ்கந்த மூர்த்தியைக் கொண்டுவந்து, "இவர் அவர்தாமோ?" என்று கேட்க, முசுகுந்த சக்ரவர்த்தி அம்மூர்த்தியைக் கையில் வாங்கினான். அப்போது அம் மூர்த்தியானவர், "அரசனே! நாம் உன்பால் வந்தோம். இனி நம்மைப் பூவுலகிற் கொண்டுபோய் மனமகிழ்ச்சி யுடன் பூஜைசெய்வாய்!" என்று உரைத்தருளினார்.

அதுகேட்ட முசுகுந்தன், "இவரே அவர்! இவரை எனக்குத் தருவாய்!" என்று இந்திரனிடம் சொல்ல, இந்திரன், "அரசனே! இவரை முன்பு நான் கொடுத்த ஆறு மூர்த்திகளோடு பூலோகத்துக்குக் கொண்டுபோய்த் திருவாரூர் முதலிய ஸ்தலங்களில் வைத்து பூஜிப்பாய்!" என்று சொல்லி, அம்மூர்த்தியைக் கொடுத்தான்.

முசுகுந்தன் இந்திரனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு பூலோகத்துக்குவந்து, விஷ்ணு பூஜித்த ஸோமாஸ் கந்தமூர்த்தியைத் திருவாரூரில் வான்மீகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் கமலாலயத்தில் முறைப்படி ஸ்தாபித்து, மற்ற ஆறு ஸோமாஸ்கந்த மூர்த்திகளையும் திருநாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயல், திருக்கோளிலியூர், திருவான்மியூர், திருமறைக்காடு என்னும் ஆறு ஸ்தலங்களிலும் ஒரேநாளில் ஸ்தாபித்து, விதிப்படி பூசை முதலியன செய்வித்தான்.

பிறகு முசுகுந்தன் கருவூரில் நெடுங்காலம் அரசு செலுத்தியிருந்து, பின்பு தன் மகனாகிய அக்கினிவன்மனுக்கு முடிசூட்டிப் பூமியை ஆளவைத்து, தவஞ்செய்து, திருக்கைலாயமலையை அடைந்தான். அதன்பின் வீரவாகு தேவர் முதலாயினோரும் அருந்தவஞ்செய்து, மானிடத்தன்மை நீங்கப்பெற்று, இறைவனருளினால் பழைய வலிமையடைந்து, கந்தகிரிக்குப்போய் முருகக்கடவுளுடைய திருவடிகளை அன்புடன் வணங்கித் துதித்திருந்தார்கள்.

முருகக்கடவுளுக்குரிய விரதங்கள் எவ்வளவு பெருமையுடையன வென்பது முசுகுந்த சக்ரவர்த்தியின் சரித்திரத்தினாலேயே நன்கு விளங்குகின்றது. அவைகளை அனுஷ்டிப்பவர்கள் தாங்கள் இச்சித்தவைகளையெல்லாம் விரைவில் பெறுவார்கள். தேவர்களும் அவர்களை வணங்குவார்கள். அன்றியும், அவர்கள் இறுதியில் முத்தியடைவதும் திண்ணம்.

ஷண்முகநாதன் கழலிணை வாழ்க !!!